
# திருமுறைத் தேன் துளிகள்



ஈரோடு த. விசுவநாதன்

# திருமுறைத் தேன் துளிகள்



தெய்வத் தமிழறிஞர்
ஈரோடு த. விசுவநாதன்

அருணோதயம்
3, கௌடியாமடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 1988

இரண்டாம் பதிப்பு : ஆகஸ்ட், 1999



**விலை: ரூ. 20-00**

அச்சிட்டோர் :

ஸ்ரீ ராஜேஸ்வரி பிரிண்டிங் ஒர்க்ஸ்

12, கஜபதி தெரு, சென்னை-5

# என்னுரை

பல்லாயிரம் ஆண்டுகளாகவே ஆன்மீகச் செல்வம் கொழிக்கும் திருநாடு நம் தாயகம். அதனால் அன்றோ நம் முன்னோர் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றனர். விண் மறைக்கும் கோபுரங்கள், வீதி மறைக்கும் ஆலயங்கள் வேறு எங்கு உண்டு. இந்நாட்டிற் போல்—எனப் பெருமை பேசினார் நம்காலக் கவிஞர் கவிமணி அவர்கள்.

தமிழகத்தில், பண்டைப் பெருமையோடு புதுமைப் பொலிவோடு விளங்கும் திருக்கோயில்கள் பல்லாயிரமாகும். அவற்றில் இந்து அறநிலையத் துறையின் கீழ் 33,620 திருக்கோயில்கள் உள்ளன. இவற்றில் சேராதவை இதைப் போல் பன்மடங்காகும்.

இவற்றிற்கெல்லாம் சிகரமாக-சிவராஜ தானியாக விளங்குவது தில்லையெனும் சிதம்பரம்மாகும். தமிழகத்தில் கோயில் என்றாலே தில்லைக் கோயிலையே குறிப்பதாகும். அவ்வரிய திருத்தலத்தில் நால்வர் பெருமக்களும், எண்ணிலாத அருளாளர்களும் போற்றிப் பரவி திருக்கூட்டமாக அருள் பெற்ற திருத்தலம். அத்தலத்திற்கு திருநடைப் பயணமாகச் செல்ல வேண்டுமென்னும் அவா என்னை உந்தியது. என் தந்தையார் தொண்டர்சீர் பரவுவார் ரா.ப. தங்கவேலனார் அவர்கள், அடியார் திருகூட்டத்துடன் தில்லைக்கு இருமுறை திருநடைப் பயணம் செய்தார். என் பிள்ளைப் பருவம் தொடங்கிய காலம் தொட்டு, நல்ல தந்தையான அவரால் இச்சிவ நெறியில் ஈடுபடுத்தப்பட்டேன். அது நான் பெற்ற பேறு. அவர் அடிக்கடி என்னிடம் வழிபாடுதான் ஆன்ம பலம் பெறும் வழி என்பார். அதுபோல் தில்லை திருநடைப் பயணம் சென்றோம்.

இப்பயணத்தில், தில்லை உள்பட 27 பாடல் பெற்ற திருத்தலங்களும். அப்பாடல்களுக்கு யாவரும் உணரும் வண்ணம் எளிய விளக்கத்தினையும் எழுதி வெளியிடக் கருதி நண்பர்களிடம் தெரிவித்தேன். அவர்களும் ஆர்வத்

துடன் வரவேற்றனர். இந்நூல் வெளிக் கொணரும் போது இந்நூலில் நால்வர் திரு உருவமும், கூத்தப் பெருமான் திருஉருவமும் இடம் பெற விரும்பினேன். எப் போதும் போல் என் பணிகளுக்கு உறுதுணையாய் இருக் கும் ஈரோடெக்ஸ் தலைவர் உத்யோக் ரத்னா திரு. ஜெ. சுத்தானந்தன் அவர்கள் நால்வர் படம் இடம்பெறத் தன் நிறுவனத்தின் சார்பில் உதவினார்கள் அவருக்கும் என் நன்றி! அதே போல் கூத்தப்பெருமான் படம் இடம் பெற அமரர் சென்டெக்ஸ் தலைவர் எம். பி. நாச்சிமுத்து அவர்கள் இசைவு தெரிவித்தார். தற்போது அவர்கள் மண்ணுலகில் இல்லை என்றாலும், அவர் பொறுப்பேற்றி ருந்த சென்டெக்ஸ் நிறுவனத்தார் அவர் இசைவினை நிறைவேற்றினர். அவர்கட்கும் நன்றி! இந்நூலை எழு தியபோது அதனைப் படித்துப் பார்த்துப் பிழைதிருத்தி என்னை உற்சாகப்படுத்திய என் அருமைச் சகோதரர் திரு, கே.வி. சுப்பிரமணியம் அவர்களுக்கும் என் நன்றி! இந்நூலை நல்ல முறையில் பதிப்பித்து வெளிக்கொணரும் அருணோதயம் பதிப்பக உரிமையாளர் திரு, அருணோ தயம் அருணன் அவர்கட்கும் என் நன்றி! அறிவுக்கு அறி வாய் அப்பாலுக்கு அப்பாலாய் நின்று, எல்லாவற்றையும் இயக்கும் தில்லை கூத்தப் பெருமான் திருவருட் பெருங் கருணைக்கு என்தலை தாழ்ந்த வணக்கம்! திருச்செந்தூர் திருநடைப் பயணத்தில் முதல் நாள், குன்றுதோறாடும் குமரப்பெருமான் குடி கொண்டு அருளும் சென்னிமலை யில் நடைபெறும் சமயப்பேரவை மாநாட்டில் இந்நூலை வெளியிடுவது, சாலப் பொருத்தமாகும். இந்நூல் வெளி யிடும் **திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்** அவர் கட்கும், தலைமையேற்கும் **தவத்திரு சுந்தர சுவாமிகள்** அவர்கட்கும், என் இதயபூர்வமான நன்றியினை உரித் தாக்குகின்றேன். திருமுறை நெறி பரவ இளைஞர்கள் திருமுறையினைப் பயிலத் தூண்ட இந்நூல் பயன்படு மானால், அதுவே நூலின் வெற்றியாகும்.

**த. விசுவநாதன்**

# திருமுறைத் தேன் துளிகள்

## திருப்பாண்டிக் கொடுமுடி

**இறைவன் :** கொடுமுடி நாதர்.

**இறைவி :** பண்மொழி நாயகி.

**பதிகங்கள் :** சம்பந்தர்—1; அப்பர்—1; சுந்தரர்—1.

இத்தலம் ஈரோட்டிலிருந்து 32 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இரயிலடி உண்டு, ஈரோடு—திருச்சி வழியில் உள்ளது.

### கொடுமுடியாரும்—மகுடபதியும்

கோடு என்றால் மலை, முடி என்றால் சிகரம், கொடு முடி என்றால் மலைச் சிகரம் என்பது பொருள். மேரு மலை முகட்டைத் தமிழ் முனிவர் அகத்தியர் தரைமட்ட மாக்கினார். அந்தத் தரையாகிய மலைச் சிகரத்திலே உள்ள ஆலயம் எனவே கொடுமுடி எனப்பெயர் பெற்றது.

கொடுமுடியிலே வீற்றிருக்கும் பெருமான் எனவே இவர் கொடுமுடிநாதர் எனப் பெயர் பெற்றார். பொருள் புரியாத—தமிழ் மரபு தெரியாத-வடமொழியாளர்.பெயர் மாற்றம் செய்தது கொடுமையிலும் கொடுமையாகும். முடி என்பதனை சிரம் எனக் கொண்டு, சிரத்திலே இருப்பது மகுடம் எனக்கொண்டு, பதி என்றால் தலைவன் எனக் கொண்டு மகுடபதி என மாற்றினர். ஞானசம்பந்தப் பெருமான் பாடல்தோறும் பாண்டிக் ''கொடுமுடியாரே'' என்றே முடிக்கிறார். பாண்டிய மன்னன் ஒருவரின் உடலிலே இருந்த கறையானது இப்பெருமானை வழிபட்ட பின் நீங்கியது. எனவே இப்பதி பாண்டிக் கொடுமுடி என்பது கோயில் பெயராகவும், கறையூர் என்பது ஊர்ப் பெயராகவுமாயிற்று எனத் திருமுறைகளில் பேசப்படுகிறது.

இத் திருத்தலம் காவிரியாற்றங் கரையிலே அமைந்த திருத்தலம். கங்கையிற் புனிதமான காவிரி கொடுமுடிநாதன் திருக்கோயிலை ஒட்டியே செல்கிறது. எங்கெங்கு நோக்கினும் இனிய பொழில்களும் நெடிய வயல்களும் இந்நறுஞ் சோலைகளும் நிறைந்து இயற்கை வளம் கொஞ்சும் அழகிய ஊர். இத் தலத்திலே திருமால், பிரமன் இருவரும் வழிபாடு செய்து தியானம் செய்த அருட்தலம், இத்தொன்மையான ஆலயத்திலே திருமால் ஆலயமும் உண்டு. பிரமன் தல மரமான வன்னி மரத்தடியில் தியானத்திலே உள்ள நிலையிலே உள்ளார். மூவரும் முதல்வரும் உள்ள தலம். ஞானசம்பந்தப் பெருமான், அப்பரடிகள், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய மூவரும் பதிகம் பாடியுள்ளனர், மாணிக்க வாசகப் பெருமான் தம் திருவாசகப் பாடலிலே பாண்டி வெள்ளமே, எனக் குறித்துள்ளார். மூவரும் தேவர்கள் வழிபட்ட செய்தியைத் தம் பதிகங்களிலே குறிப்பிடுகின்றனர்.

**மன்னிக்கும் மாண்பு**

குழந்தைகள் எப்போதும் வினா எழுப்பிக் கொண்டே இருக்கும். பார்க்கின்ற பொருள் எல்லாம்

குழந்தைகட்குப் புதுமையாய் இருப்பதனால் கேள்வி கேட்டுக் கொண்டே இருக்கும், புத்திசாலித்தனமான குழந்தைகள். நம் ஞானக் குழந்தையான சம்பந்தமூர்த்தி அவர்கள் வினா எழுப்பினால் விடை யார் தருவது? எனவே அவரே வினாவும் எழுப்பி விடையும் தருகிறார்.

எங்கள் திருப்பாண்டிக் கொடுமுடிப் பெருமான் எங்கே இருக்கிறார் தெரியுமா? என வினா எழுப்பி விடையும் தருகிறார்.

எங்கள் பெருமாட்டி, பெருமானே உன்னை ஒரு போதும் நான் பிரியமாட்டேன். உன்னிலே ஒரு கூறாக நான் இருக்கவேண்டும் எனப் பந்நெடுநாள் தவம்புரிந்தார். கொங்கு நாட்டுத் திருத்தலங்களுள் ஏழில் ஒன்றான திருச்செங்கோட்டில் பெருமான் மனம் உவந்து, வேண்டுவார் வேண்டுவது ஈயும் தன்மையால் பெருமாட்டிக்குத் தன் மேனியிலே சரிபாதி ஈந்தான். அதனால் மங்கை பங்கன், மாதொருபாகன் எனப் பெயரும் கொண்டார்.

எனவே எங்கள் பெருமான் திருமேனி, பெண் அமரும் திருமேனி. ஆம்! தன் திருமேனியிலே பெருமாட்டியை அமர்த்தியுள்ளார். ஏன் தெரியுமா? தான் தியாகேசன் என்பதனைக் காட்ட! தன்னை நாடி வருபவர்களுக்குத் தன்னிடம் உள்ளதைத்தான் உலகர் தருவர். ஆனால் எம் பெருமானோ தன்னையே தரும் தயாநிதி - அவ்னை அடைந்தால் ஏதும் பெறலாம். அருளதே சத்தியாகும் என்று போற்றும் சாத்திரம். என்னடி வணங்கும் அடியவர்க்கு அருள் செய்ய வேறெங்கும் செல்ல வேண்டியதில்லை எனத் திருமேனியிலேயே ஒரு கூறாக வைத்துள்ளான்.

அப்படிப்பட்ட பெருமானை உணர ஏதேனும் அடையாளம் தேவையா? அதையும் சொல்கிறேன். ஒன்றல்ல மூன்று அடையாளம் சொல்கிறேன். உலக வழக்கிலே ஒரு முறைக்கு மூன்று முறை சொல்கிறேன் என்பார்களே அது போல மூன்று அடையாளம் சொல்கிறேன் கேளுங்கள்.

அவனது கற்றைச் செஞ்சடையிலே பிறை சூடியுள்ளான்: நெற்றிக் கண் கொண்டுள்ளான்-காதிலே குழை அணிந்துள்ளான். இவை மூன்றும் உங்களுக்குக் காட்டும் அடையாளம்தான். அந்த அடையாளங்களின் பொருள் தெரியுமா? அதையும் நானே சொல்கிறேன்.

கற்றைச் செஞ்சடையிலே பிறை சூடியுள்ளான். கடலிலே திசை தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் கலங்களுக்கு வழிகாட்டிட கலங்கரை விளக்கு இருக்கும். விளக்கொளி கண்டு இருளிலே தத்தளிக்கும் கலங்கள் கரை சேரும். அது போலப் பெருமான், பிறவிப் பெருங்கடலிலே தத்தளித்துக் கொண்டிருக்கும் உயிர்களைத் தன் அருள் ஒளி காட்டி தன் திருவடித் தரையைக் காட்டுவதற்காகத் தன் சடையிலே பிறையைச் சூடியுள்ளான். பிறை —அறிவின், கலையின் சின்னம். கலைஞானத்தினால் இறைவனை அறியலாம்.

அதுமட்டுமல்ல சந்திரன் தன் குருவான வியாழ பகவானின் மனைவியின் கற்பழித்த மாபாவி. அவன்தன் தவறை உணர்ந்து பெருமான் அடியிலே வீழ்ந்த சந்திரனைத் தலையிலே வைத்துக் கொண்டான். அவனைவிடப் பொல்லாதவர்கள் யார்? அவன் திருவடியிலே செய்த தவறை உணர்ந்து வீழ்ந்தால் உங்களையும் மன்னித்து அருள் செய்வான். எத்தகைய குற்றம் இயற்றிடினும் தாய் பொறுக்கும் அன்பும் நின்னருளும் அன்றோ பராபரமே என்றார் தாயுமானவர். இது யாருக்குமே இல்லாதது. இன்னொரு அடையாளம் சொல்கிறேன். அவனது நெற்றியிலே கண் உடையவன். அதனால்தான் முக்கண்ணன் என்ற பெயரும் பெற்றான்.

சந்திரன் போன்று தவறை உணர்ந்து காலிலே வீழ்ந்தால் தலையிலே வைத்துக்கொள்வான். மன்மதன், தவமிருந்த பெருமான் திருமேனிமேல் மலர்க்கணை தொடுத்தான். கண் திறந்தார். மன்மதன் எரிந்து சாம்பலானான். அது எதைக் காட்டுகிறது தெரியுமா? பெருமான் திருமுன் சென்றால் இந்த உயிரைப் பற்றியுள்ள காம குரோத லோப மதமாச்சரியங்களை சுட்டெரிக்க நெற்றிக் கண்ணோடு உள்ளான் என்பதனை, நாம் செய்த பாவங்களை

சுட்டெரிப்பான்— அதற்காகவே— நமக்காகவே அவன் கண் அமர் நெற்றியனாக உள்ளான்.

எட்டாத செஞ்சடையிலே இருக்கிற பிறையின்பால், நம்மால் செல்ல முடியாது? எரிக்கும் விழி. ஆகவே அணுக அச்சமாக உள்ளது என்கிறாயா? அச்சங் கொள்ளாதே. விழிதான் எரிக்கும் விழியே தவிர அதனை அடியவர்க் கெதிராக அவன் ஒரு நாளும் பயன்படுத்தியதில்லை. காதில் குழையோடு உள்ளான். மிகக் குழைந்த உள்ளத் தோடு உள்ளான். உன் உணர்வுகளை—எண்ணங்களை எதை வேண்டுமானாலும் சொல். செவிமடுக்கத் தயா ராய் உள்ளான் என்பதனைக் காட்டவே காதமருங் குழையோடு உள்ளான். அந்தப் பெருமானின் அடை யாளம் சொன்னேன். அவன் குணம் தெரியுமா? "எண் குணத்தான் தாளை வணங்காத்தலை' என வள்ளுவர் சொல்கிறாரே, அந்த எண்குணங்களாகிய,

1. தன்வயத்தனாதல் 2. தூய உடம்பினன் ஆதல் 3. இயற்கை உணர்வினன் ஆதல் 4. முற்றுணர்தல் 5. இயல்பாகவே பாசங்களின் நீங்கல் 6. பேரருளுடைமை 7. முடிவில் ஆற்றல் உடைமை 8. வரம்பில் இன்ப முடைமை.

இந்த எண் குணங்களும் அமரும் குணப் பெருங்குன்று எண் குணமமர்ந்தவன் மட்டுமல்ல—நீங்கள் எண்ண உங்கள் மனத்தில் அமரும் குணம் அவனுடையது. நினைப்பவர் மனம் கோயிலாகக் கொள்வது அவன் இயல்பு. மானுடர் மட்டுமின்றி தேவாதி தேவர்களும் கூடிநின்று வழிபாடு செய்கின்ற திருத்தலம் இது. தேவர் களோடு தொடர்புடைய பெருமானை நாம் எங்கே நாடு வது—சென்றடைவது என்ச் சஞ்சலம் அடையாதே! எங்கள் பாண்டிக் கொடுமுடியார் பண்ணிசைக்கும் பாட லிலே குடிகொண்டுள்ளார். புண்ணார் இன்தமிழாய் உள்ளவன். உனக்குத் தொடர்புடைய இன்பத் தமிழாய் அவன் உள்ளான்.

அப்பரமன் ஆம்! பண்ணொடுஇசைபாடு-பாடக்கேள் கொடுமுடி நாதன் பண்ணொடு அமர்ந்து நின்று அருள்

செய்வான் என்று நமக்கு அறிவுறுத்துகிறார் ஞான சம்பந்தர்.

**''பெண்ணமர் மேனியினாரும் பிறை புலரு**
**செஞ்சடையாரும்**
**கண்ணமர் நெற்றியினாரும் காதமருங்குழையாரும்**
**எண்ண மருங்குணத்தாருமி மையவர் ஏத்த நின்னாரும்**
**பண்ணமர்பாடலினாரும் பாண்டிக் கொடுமுடியாரே!''**

**யார் பெரியவர்?**

நாவுக்கரசு பெருமான் இத்திருத்தலத்திற்கு எழுந் தருளுகின்றார். பெருமானை வாழ்த்தி வழிபடுகின்றார். நெஞ்சு நெக்குருகிறது. ஊனடைந்த உடம்பில் பிறவி தானடைந்த உறுதியைச் சார வேண்டுமானால் வினை நாசமாக வேண்டும். வினை உள்ளவரை, உயிரானது இறையை அடைய முடியாது. வினையை நாசமாக்க வேண்டும். அதற்கு ஓர் எளிய வழி உள்ளது. அது கொடு முடியில் நன்னிருளில் நட்டம் பயின்றாடும் நாதன் தாள் வணங்குவதுதான். உலகத்திலே ஒவ்வொருவரும் தன்னை தானே பெரியவன் எனக் கருதுவர். ஆனால் கொடுமுடி நாதன்தான் உண்மையிலேயே பெரியவன். பெரியவனுக்கு இலக்கணம் என்ன? செயற்கரிய செய்வர் பெரியர் என் றார் வள்ளுவர். யாராலும் செய்ய முடியாதனவற்றை யார் செய்கிறார்களோ அவர்கள்தான் பெரியவர். என் வினையை நாசம் செய்ய வேறு யாராலும் முடியுமா? முடியாது. நாசமாக்க முடியாத நம் வினையை நாச மாக்கும் சிட்டன் (பெரியவன்) அவன் பெரியவன், சிவன். அப்பெரியவனே சிவன்.

**ஆலநிழற்பட்டன் (குரு)**

அச்சிவன் ஜோதி வடிவாய் உள்ளான். ஜோதி தான் தன்னைச் சார்ந்த பொருள்களையெல்லாம் தன் வடிவை மாற்றி வண்ணத்தை மாற்றி தன் வடிவை தன் வண்ணத்தை வழங்குகிறது. அதுபோல் ஜோதி

வடிவான இறைவன் நம் வடிவத்தை வண்ணத்தை மாற்றி தன் வண்ணமாக்கிக் கொள்ள—இந்த உயிரை இறைத் தன்மையுடையவனாக ஆக்கிக் கொள்ளச் செழுஞ் ஜோதியாக உள்ளான்.

அதுமாத்திரமல்ல; நிலம், நீர், நெருப்பு, காற்று, வான், சந்திரன், சூரியன், உயிர் என்ற எட்டு வடிவங்களிலும் கலந்து நின்று அருள் செய்கின்றான், பெருமான். நிலத்திலே திண்மையாகக் கலந்து நின்று உணவுப் பொருட்களைக் கொடுக்கிறான். நீரிலே சுவையாகக் கலந்து தாகம் தீர்க்கின்றான். நெருப்பிலே சூடாக இருந்து காற்றிலே கலந்திருந்து, வானிலே மறைந்து நின்று சந்திரனில் கலந்து தண்மை இன்பம் வழங்கி, கதிரவனில் கலந்து நின்று வெம்மையின்பம் ஈந்து நம் உயிரிலே உயிர்க்குயிராய் உறைந்து நின்று நல்லவையும் தீயதையும் காட்டி அருள் செய்கிறான். அப்படி அட்ட மூர்த்திலும் கலந்து நின்று அருள் செய்கின்ற பெருமான் நாமெல்லாம் உய்யும் வண்ணம் ஆலமர் செல்வனாக அமர்ந்து நின்று பட்டனாக (குருவாக)ஞானாசிரியானாக இருந்து வழி காட்டுகின்றான்: உயிர்க்குறுதியைச் செய்கின்றான். அந்தப் பெருமான் திருப்பாண்டிக் கொடுமுடியிலே நடனமாடுகின்றான். அந்த நட்டனைத் தொழுதால் நிச்சயம் நம்வினை நாசமாகும்—நாடுவீர் நட்டனை. வணங்கிடுவீர். வினை நாசமாகும் எளிய வழி அதுதான்.

**"சிட்டனைச் சிவனைச் செழுஞ்சோதியை**
**அட்டமூர்த்தியை ஆல நிழலமர்**
**பட்டனைத் திருப்பாண்டிக் கொடுமுடி**
**நட்டனைத் தொழ நம்வினை நாசமே"** —அப்பர்

**பற்றுக பற்றினை**

சுந்தரமூர்த்தி நாயனாரின் பாடல் பெற்ற திருத்தலங்களிலேயே தனிச்சிறப்பு வாய்ந்தது இப்பாண்டிக் கொடுமுடிப் பதிகம் ஆகும். ஏனென்றால் பாடல்தோறும்

திருஐந்தெழுத்தாகிய ''நமச்சிவாய'' மந்திரத்தைத் சொல்லி ஏத்துகிறார். அதனால் இப்பதிகம்''நமச்சிவாயத் திருப்பதிகம்'' எனப் போற்றப்படும். இந்த அரிய திருப் பாடலிலே சுந்தரர் அரிய பல கருத்துகளைத் தெரிவிக் கின்றார்.

'பற்றுக பற்று அற்றான் பற்றினை' என்றார் வள்ளுவர். உயிரே நீ பற்றுக்களை விடு என்றால் விட மாட்டாய். உனக்குள்ள ஓராயிரம் பற்றுக்களோடு நான் சொல்லும் ஒரு பற்றினையும் வைத்துக்கொள். என்றார். இழப்பது என்றால் தானே கசக்கும். இருப்பதோடு இன்னொன்றையும் இணைத்துக் கொள்வதானால் அது இனிய செய்தியல்லவா நமக்கு! சரி; அது என்ன பற்று எனக் கேட்கிறாயா? பற்று இல்லாத பெருமான் திருவடி யைப் பற்றிக் கொள்; அது போதும். அதை ஏன் பற்றச் சொல்கிறேன் தெரியுமா? அது மற்ற பற்றுக் (ஆசை) களையெல்லாம் தானே விடச்செய்து விடும்.

அற்றது பற்றெனில் உற்றது வீடு அல்லவா?· பற்று உள்ளவரை வீடு பேறு நிலையான பேரின்பம் கிடைக் காதே. அதனால் பற்றுவிடப் பற்று அற்ற பெருமான் பாதத்தைப் பற்று என்றார் வள்ளுவர். பெருமானே, நான் மற்ற பற்றேதும் இன்றி உன் திருப்பாதமே என் மனம் பற்றியது; உன் பற்று ஒழிய வேறு ஒரு பற்றும் எனக்கு இல்லை என்பது நீயறிய மாட்டாயா? திருக்கை லையிலே உனக்கு அணுக்கத் தொண்டனாயிருந்த போது உன் நோக்கால் மாதரார் மேல் மனம் போக்கிடக் காதல் மாதரும் என் காட்சியில் நண்ணினர்.

ஆனால் நீயோ என் மனம் போக்க வைத்து மாதர் மேல் மனம் வைத்தனை! தென்புவிமீது தோன்றி மெல்லிய லாளுடன் காதல் இன்பம் கலந்தனவாய் வா என ஆணை பிறப்பித்தாய்! அந்த ஆணையைப் பெற்றதும் இந்த மண்ணில் வந்து பிறந்தேன். அந்த ஆணையைக் கேட்டு

அஞ்சி நடுங்கிப் போனேன். ஆனால் அப்போதே பெருமானே, நான் உன்னை,

**" கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கிச்**
**செய்ய சேவடி நீங்கு சிறுமையேன்**
**மையில் மானுடமாய் மயங்குவழி**
**ஐயனே தடுத்தாண்டருள் செய்"**

என வேண்டினேன்.

அப்படிப் பிறந்து இறந்து உழலும் வாழ்வைத் தடுத்தாண்டு அருள் செய் என்க் கோரியதை இன்று எனக்கு அருள்செய்து பூர்த்தி செய்துவிட்டாய். ஆம். பிறந்தேன்; இனிப் பிறவாத தன்மை இன்று வந்து எய்தினேன். இனிப் பிறவாத தன்மை வந்து எய்தி விட்டதனாலே உன்னை மறப்பேன் என நினைத்து விடாதே. நற்றவா உன்னை மறப்பறியேன்; மறந்தால் உயிர்தறியேன். கற்றவர்கள் கற்றதினால் ஆய பயன் உன் நற்றாள் தொழுதல் என உணர்ந்து தொழும்போது நான் வாளாயிருப்பேனா? தொழுவது உடலின் செயல்; ஏத்துதல் சிந்தையின் செயல்; உன் திருநாமம் சொல்வது என் நாவின் செயல்.

எனவே என் சிந்தை உன்னை எண்ணித் தொழ, என் கைகள் உன்னைப் பணிந்தேத்த, என்நா உன்நாமத்தையே சொல்லும்.பாண்டிக் கொடுமுடிப் பெருமானே!ஒருக்கால் நான் மறந்தாலும் என் நா உன் நமசிவாயத் திரு நாமத்தை ஒருநாளும் மறவாது. ஏன் தெரியுமா? அவ்வாறு நான் என் நாவைப் பழக்கியுள்ளேன். 'வழுக்கி வீழினும் உன் திருப் பெயரல்லால் மற்று நான் அறியேன்' என்பதை நீயறியாயோ!கனவிலும் நனவிலும்உன்நாமமே என் நா சொல்லும்; சிந்தை நினையும் என்று போற்றிப் பரவுகிறார் வன் தொண்டர். நாமும் நம் நாவைத் திரு பாண்டிக் கொடுமுடி பெருமானின் "நமச்சிவாய" த் திரு நாமத்தை ஓயாது ஒழியாது கனவிலும் நனவிலும் கூறும் வகையில் பயிற்றுவிப்போம். அந்தப் பணிக்குப்

(ப்யிற்சிக்கு) பாண்டிக் கொடுமுடி நாதன் அருள் செய்ய, சுந்தரரைப் போல் நம் பிறப்பறுக்குந் துணை செய்ய வேண்டுவோம்.

**'' மற்றுபற்றெனக் கின்றி நின்திருப்**
**பாதமே மனம் பாவித்தேன்**
**பெற்றும் பிறந்தேன் இனிப் பிற**
**வாத தன்மை வந்தெய்தினேன்**
**கற்றவர் தொழுதேத்துஞ் சீரி கறை**
**நீரில் பாண்டிக் கொடுமுடி**
**நற்றவா உனை நான் மறக்கினுஞ்**
**சொல்லும் நா நமச்சிவாயவே.''**

## கரூர்

**இறைவன் :** ஆநிலையப்பர்.
**இறைவி :** கருணைநாயகி.

இக் கரூர் கொடுமுடியிலிருந்து 26 கிலோ மீ. தொலைவில் உள்ளது. இரயிலடி உண்டு. இதுவும் கொங்குநாட்டுத் திருத்தலங்களில் ஒன்றாகும். இப்பெருமானின் திருநாமம் 'ஆநிலையப்பர்' என்பதாகும். ஆம்! கருவூரிலே தோன்றுகின்ற உயிரினங்கள் நிலைபெற வைக்கின்ற அப்பன்- இந்தப் பிறப்பிலே தோன்றிய நம் வாழ்வு உடல் நலம் நிலைபெறத் தந்தை பொறுப்பேற்கிறார். அதுபோலப் பிறவிதோறும் தொடர்ந்து வந்து உயிருக்கு உதவி, மீண்டுமோர் கருவூரில் பிறக்காமல் நம்மை ஆட்கொள்ளும் பெருமான்—எனவே 'ஆநிலையப்பர்' என்றனர். ஆ என்றால் உயிரைக் குறிக்கும். இத்திருவூரிலே தோன்றிய பெருமகனார்தாம் கருவூர்த் தேவர் என்னும் திருவிசைப்பா பாடியருளிய ஆசிரியர். இவர் தஞ்சை இராசராசன் என்ற மாமன்னனுக்குச் சைவம் தழைக்க உறுதுணையாய் இருந்த தஞ்சைப்பெருவுடையார் திருமேனியைத் தஞ்சை

இராசராசேச்சரத்தில் நிறுவி குடமுழுக்கு நடாத்திய பெருமகன் ஆவார். அவர் தோன்றிய ஊர் இக் கரூர். அங்கு அவர் மாமன்னன் போற்றும் சிறப்பிலே இருந்தாலும் வீதிதோறும் சென்று பிச்சை எடுத்து உண்டு வாழ்ந்த தவச் செல்வர். இராசராசன் அம் மாமுனிவன் காலில் விழுந்து வணங்கினார். ஆனால் அவர் உணவுக்கு அவனை எதிர்நோக்காது இரந்துண்டு வாழ்ந்தார்.

வேண்டாமை என்னும் வீடு செல்வம் அவரது செல்வம். இதனை அவரே சொல்வார்.

**"மங்கையோடு இருந்தே யொருசெய்யானை**
**வளர் இளம் திங்களை முடிமேல்**
**கங்கையோடு அணியும் கடவுளைக் கங்கை**
**கொண்ட சோழேச் சரத்தானை**
**அங்கையோடு ஏந்திய பலிதிரி கருவூர்**
**அறைந்த சொன் மாலையால் ஆழிச்**
**செங்கையோடு உலகில் அரசு வீற்றிருந்து**
**திளைப்பதும் சிவனருல் கடலே."**

**திருத்தொண்டர் திருமுடி**

இக் கரூர் சோழப் பேரரசர்களின் துணைத் தலை நகரங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. சோழ மாமன்னர்களுள் ஒருவராய்த் திகழ்ந்தவர் புகழ்ச்சோழர் ஆவார். அவர் 63 நாயன்மார்களில் ஒருவர். இவர் ஒரு சமயம் கருவூரிலே வந்து தங்கிச் சிற்றரசர்களின் திறையைப் பெற்றார். அதிலே அதிகன் என்ற சிற்றரசன் தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தான். அவன் திறை தரவில்லை என்ற செய்தியைப் புகழ்ச் சோழர் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். மன்னர் தகடூரை நோக்கிப் படையெடுக்க ஆணை பிறப்பித்தார். படை சென்றது. வென்று வந்தது. மாமன்னன் புகழ்ச் சோழருக்குக் காணிக்கையாக எதிரிகளைப் பந்தாடிய வீரர்களின் தலைகளைக் கொணர்ந்தனர் படைத் தலைவர்கள். அத்தலைகளில் ஒரு தலை திருமுடியோடும்

திருநீறு தரித்தும் இருந்ததைக் கண்டார் புகழ்ச்சோழர். கண்டதும் துடிதுடித்தார்.

என் ஆட்சியில் ஒரு திருத்தொண்டர் தலைபோவதா? அதுவும் அத் திருத்தொண்டர் திருத்தலை எனக்குக் காணிக்கையா? எதிரிநாட்டுப் படையில் என்ன காரணத்தாலோ அவர் சேர்ந்திருக்கலாம். என் உணர்வுகளை என் மனவோட்டத்தை உணரவில்லையே படையினர். ஆட்சியே போனாலும் பரவாயில்லை. ஆண்டவனின் திருத்தொண்டர் தலைகாக்க வைத்திருக்க வேண்டுமென வேதனைப்பட்டார். அமைச்சர் மற்றும் தளபதிகளை அழைத்து ஆநிலையப்பர் திருக்கோயில் திருமுன் தீ வளர்க்கச் சொல்லி ஆணை பிறப்பித்தார்.

நீர் தாங்கும் சடைமுடியார் திருத்தொண்டர் திருமுடியைக் கனக்கமணிதட்டிலே வைத்தெடுத்து 'தார் தாங்கும் திருமுடியார் வாழ்வதனை வாங்க நான் பார்தாங்க வந்தேனோ பழி தாங்குவேன்' என்று சிந்தை நொந்து பழியோடு வாழ்ந்து பழி துடைக்க மடியெடுத்து அத்திரு முடியிருந்த கனக்கமணித்தட்டதனைக் கரத்தெடுத்துத் தீயை வலம் வந்து தீயிலே இறங்கினார். தீத்தெய்வம் கை தொழுது ஏத்த வானவர்கள் பூ மழை பொழிய ஆநிலையப்பர் விடையின் மீது காட்சி கொடுத்துப் புகழ்ச்சோழருக்கு அருள் செய்த திருத்தலம் இக்கரூர்.

**இப்புகழ்மிக்க புகழ்ச் சோழர் வாழ்வில் ஒரு நாள்**:-இவ்வூரிலே சிவகாமி ஆண்டார் என்ற சிவபக்தர் வாழ்ந்தார்.

நாள்தோறும் மூன்றாவனாரின் பூசைக்குரிய திருமலர்களைக் கொய்து அவனை அலங்கரித்து அவன் அழகைக் கண்டுகளித்தவர். எப்போதும் போல அன்றும் அதிகாலை எழுந்து நீராடிப் பெருமாளுக்குரிய நாண்மலர் கொய்து குடலையை நிரப்பி ஆலயத்தை நோக்கி வந்து கொண்டு இருந்தார். அன்று அட்டமி நாள். பட்டத்து யானை நீராடி அலங்கரிக்கப்பட்டு அரண்மனையை நோக்கி சென்று கொண்டிருந்தது. யானை திடீரென மதங்

கொண்டு பாகர்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டுத் தறிகெட்டு ஓடியது. தெருவிலே மலர்க் கூடையோடு இறைவன் திருநாமத்தைக் சொல்லிக் கொண்டு சென்று கொண்டிருந்த சிவகாமி ஆண்டாரைக் கீழே தள்ளி அவரது பூக்குடலையைப் பிடுங்கி எறிந்து காலிலே போட்டு மிதித்தது. தான் விழுந்ததனைப் பெரிதுபடுத்தாத அத்தொண்டர் பெருமான் பூசைக்குரிய மலர்கள் பாழ் பட்டதே எனக்கதறி அழுதார் பாடல் :

**"ஆறும் மதியும் அணியும் சடை மேல்**
**ஏறும் மலரைக் கரி சிந்தியதே**
**வேறுள் நினைவார் புரம் வெந்தவியச்**
**சீறும் சிலையாய் சிவதா! சிவதா!"**

என ஓலமிட்டார்.

**வீரத் திருத்தொண்டர்**

அவலக் குரலைக் கேட்டார் சிவபக்தர். சிவகாமி ஆண்டாரிடம் நடந்தவற்றைக் கேட்டார். சிவகாமி ஆண்டாரின் மலர்த்தொண்டிற்கு முற்றுவித்த பட்டத்து யானையைக் குறித்துச் சினம் கொண்டார். மழுவாளை எடுத்துக் கொண்டு ஓடினார். யானையைக் கண்டார்—அது பட்டத்து யானை—மாமன்னரின் மரியாதைக்குரியது—போற்றுதற்குரியது என்பதனை மறந்தார். மன்னனின் தண்டனையையும் மறந்தார். திருத்தொண்டிற்கு அது செய்த இடையூறே தலை நின்றது. கையிலிருந்த மழு வாளைக் கொண்டு பட்டத்து யானையின் துதிக்கையை மலர்க் குடலையைப் பறித்துக் கீழே எறிந்த அந்தத் துதிக் கையை வெட்டி வீழ்த்தினார். கதறி வீழ்ந்து இறந்தது பட்டத்து யானை பாகரும் பாதுகாவலரும் தொண்டரை எதிர்த்தனர். அவர்களையும் வெட்டி வீழ்த்தினார், அத்திருத்தொண்டர். அவர்தான் எறிபத்தர் என்ற வீரத் திருமகனார். மற்றவர்கள் ஓடிச்சென்று மன்னவரிடம் செய்தி சொன்னார்கள். பகைவர்கள் யாரோ இப்பழி

செய்தனர் என்று பதைப்போடு படைகள் சூழ சம்பவம் நடந்த இடத்தை நோக்கி வந்தார் மாமன்னர் புகழ்ச் சோழர்.

**எறிபத்தரும் காந்தியமும்**

பட்டத்து யானையை வெட்டி வீழ்த்திய எறிபத்தர் ஓடி ஒளியவில்லை. செயல் செய்தார் அதற்குரிய பலனி லிருந்து தப்ப நினைத்திருந்தால் எங்கோ சென்று மறைந் திருக்கலாம். ஆனால் எறிபத்தர் பலனுக்குப்பயப்படாமல் பலனுக்குப் பயப்படாமல் காத்திருந்தார். பட்டத்து யானைய்ய வெட்டி வீழ்த்தினால் என்ன நடக்கும் என்பதனை அறிந்து அதற்குரிய தண்டனையைக் கண்டு அஞ்சாது அங்கேயே காத்திருந்தார்.

1942-ல் நடைபெற்ற புரட்சியைப் பற்றி காந்தியார் கூறினார். தண்டவாளத்தைப் பிடுங்கு. நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. தண்டவாளத்தை அப்புறப்படுத்தி விட்டு அங்கேயே கொடியோடு காத்திரு; கிடைக்கும் தண்டனையை எதிர்நோக்கி நில். கோழையைப் போல் ஓடி ஒளியாதே என்றார். அண்ணலின் போராட்டத் தத்துவத்தை ஏழாம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் செயல்படுத்தினார் எறிபத்தர்.

புகழ்ச்சோழர் செய்தியறிந்து எறிபத்தரிடம், ‘அன்பரே, மலர்த் தொண்டிற்கு இடையூறு செய்த பட்டத்து யானையையும் பாகனையும் பாதுகாவலரையும் வெட்டி வீழ்த்தியது சரி. அதற்குரிய உரிமையாளரான நானும் தண்டனைக்குரியவனே, மக்கள் செய்த பிழைக்கு மன்னவனே பொறுப்பு. மன்னவன் கடமை தன்னால், தன்பரிசனத்தால் ஊனமிகு படைத்திறத்தால் ஆன பயம். காப்பான் அல்லனோ? அரசன் என் படைத்திறத்தால் ஏற்பட்ட பிழைக்கு நானே பொறுப்பு. தங்களது புனித வாளால் என்னை வெட்டுவது தகாது. எனவே இந்த என் உடைவாளால் வெட்டுமென’ உடைவாளை உருவி நாயனாரிடம் கொடுத்தார்.

எறிபத்தர் புகழ்ச் சோழரின் அன்பு உள்ளம் கண்டு துடித்தார். இத்தகைய சிவத் தொண்டருக்கு ஊறு செய்தேனே என வருந்தி உடைவாளால் தன்னை வெட்டிக் கொள்ள முயன்றார். புகழ்ச் சோழர் எறிபத்தரின் கையைப் பிடித்துத் தடுத்தார். அப்போது வானில் "உங்கள் திருத்தொண்டின் சிறப்பை ஊரறிய உணர்த்த நாமே செய்தோம்' என அறிவித்து பட்டத்து யானையும் பாதுகாவலரும், பாகரும் உயிர் பெற்றனர். எறிபத்தர், புகழ்ச்சோழர், சிவகாமி ஆண்டார் ஆகிய மூவரும் ஆநிலையப்பரை வழிபாடு செய்தனர். அளவிலா மகிழ்ச்சியோடு சிவகாமியாண்டார் தன் மலர்த்தொண்டைச் செய்து வந்தார். இந்த மலர்த் தொண்டைக் குறிப்பால் ஞானசம்பந்தர் தம் திருப்பாடலில் "தொண்டரெல்லாம் மலர் தூவி ஏத்த" என்று சிறப்பித்துப் பாடினார்.

**நஞ்சுண்ட பெருமான்**

தொண்டர்கள் எல்லாம் நாண் மலர் கொண்டு பெருமானைப் போற்றி வழிபாடு செய்கின்றனர். இந்தப் பெருமான் எது கொடுத்தாலும் ஏற்பானா? என்ற வினா எழுவது இயற்கை ஆனால் பெருமான் மலரை மட்டுமா ஏற்கின்றார். தேவர்களும் அசுரர்களும் மேருமலையையே மத்தாக ஆதிசேடன் கயிறாகத் திருபாற்கடலைக் கடைந்தனர். அப்போது அமிழ்தம் வந்தது. அனைவரும் ஏற்றனர். ஆனால் ஆலகாலவிடம் வந்தது யாரும் ஏற்காது தேவாதி தேவர்கள் எல்லாம் எழுந்தோடினர்.

திருமால் அவ்விட வேகம் தாங்காது கருத்த மேனியானார். அவ்விடத்தை ஏற்று உண்டு விழுங்காது, கண்டத்திலே நிறுத்தினான் பெருமான். அந்த நஞ்சுண்ட பெருமான் எங்கே உள்ளான் தெரியுமா? அவன் உயிருக்குயிராய் நம்மோடும் உள்ளான். நஞ்சுண்ட பெருமான் அதனால் கசப்பர் என்று எண்ண வேண்டாம். 'கரும்பினில் கட்டி போல்வார் கடவூர் வீரட்டனாரே' என்பாரே அப்பரடிகள். அப்படிக் கற்கண்டாய் இனிப்பார்

அந்தக் கற்கண்டுப் பெருமான் கருவூர் ஆநிலை ஆலயத்தி லிருக்கும் தேவர் பிரான். அப்பிரான் நமக்கு அருள் செய்ய அன்போடு காத்திருக்கிறார். அவர் அருளை நாடி நம் அன்பை அளிப்போம். பாடல்

**சம்பந்தர் (பதிகம் 1)**

**"தொண்டர் எலாம் மலர் தூவி ஏத்த நம்**
**கண்டலாருயிர் ஆய தன் மையர்**
**கண்டனார் கருவூருள் ஆ நிலை**
**அண்டனார் அருள் ஈயும் அன்பரே"**

# கடம்பந்துறை

## (குழித்தலை)

### அப்பர் பதிகம் 1

கருவூரிலிருந்து 38 கிலோ மீட்டர். இரயிலடி உண்டு.

கடம்ப வனத்தினிடையேபெருமான் கோயில் கொண் டான். எனவே கடம்பந்துறை எனப் பெயர் பெற்றது. குளிர்ந்த சோலை மயமாய் இருந்த ஊர் எனவே குளிர் தண்டலை என்று இருந்து பின்னர் தற்போது குழித்தலை என வழங்குகிறது. இதுவும் சோழநாட்டுத் திருத்தலம். தமிழகத்திலே வடக்குப் பார்த்த திருக்கோயில் இது ஒன்றுதான்.


**ஆரிரும் அருந்தமிழும்**

இந்த அரிய திருத்தலத்திற்கு அப்பரடிகள் வருகை புரிந்தார். இறைவனைப் பாடிப் பரவி வாழ்த்தினார். பரமனை ஆலயத்துள் அர்ச்சகர் ஆரிய மொழியிலே அர்ச்சனை செய்து கொண்டிருந்தார். அப்பரடிகளோ அருந்தமிழால் பெருமானைப்பாடிப்பரவினார் அங்கிருந்த



தென் தில்லை மன்றினுள் ஆடி போற்றி

நன்றி : செண்டெக்ஸ், சென்னிமலை



பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசை கல் மிதப்பில் அணைந்தபிரான் அடி போற்றி
வாழி திருநாவலூர் வன் தொண்டர் பதம் போற்றி
ஊழி மலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி ,,

நன்றி: ஈரோடெக்ஸ், ஈரோடு

அன்பருக்கு ஐயம் வந்தது. இறைவன் ஆரியத்தை ஏற்பானா? அருந்தமிழை ஏற்பானா? என்று! அப்பரடிகளிடத்திலேயே கேட்டோம். அர்ச்சகர் கூறும் ஆரியம் இறைவனுக்குரியதுதான! அருந்தமிழும் இறைவனுக்குரியதுதான். ஆனால் நமக்குத் தெரிந்தது—புரிந்தது அருந்தமிழே என்றார். தெரியாத பெருமானைப் புரியாத மொழியிலே தேடுவதை விடப்புரிந்த தமிழிலே அவனைத் தேடுவோம். நமக்கும் அவனுக்கும் தெரிந்த மொழி தமிழ் என்றார்,

அன்பர்களே,

இறைவன் ஆரிய மொழியோடும். அருந்தமிழோடும் பொருந்தியவன். இரண்டுக்கும் உரியவன் அது மட்டுமல்ல. ஆரியம் தமிழோடு தமிழ் இசையாகவும் உள்ளவன் தமிழ், ஆரியம் இரண்டு மொழிகளிலும் எல்லையில்லா வகையில் புகழ் மிக்கவன். அருளாளர் கூறிய குணத்தையுடையவர். அவனுக்கென்று எந்தக் குணமும் இல்லை. ஆனால், அடியவர்கள் விரும்பிய குணத்தையுடையவனாய் உள்ளான். அடியவர்களை ஆட் கொள்வதற்காகக் குறியொன்றுமில்லாத அந்தக் கூத்தன் அடியவர்க்காக குறியாக அடையாளம் நிற்கின்றார். நாம் அவனை வாழ்த்தி வழிபடக்குறியாக உள்ளான். அந்தக் குறிகளிலே ஒன்றுதான் காரிகையைத் தன்னோடு வைத்து 'அம்மை அப்பர்' திருக்கோலம். தருவது. இக் கடம்பந்துறைப் பெருமான் காரிகையோடு காட்சி கொடுத்து அருள்செய்யக் காத்திருக்கிறான். ஆனால் நீங்களோ அவனை அடையாது அவனது கடம்பத்துறையை அணுகாது வாழ்நாளை வீழ்நாளாக ஆக்குகிறீர்களே! என்று வேதனைப்பட்டு, மற்றவர்கள் எப்படியோ போகட்டும். வாழ்வில் சீர் இறைவன் அடியை வணங்குவதே என்பதனை வாழ்வில் இயல்பாக குறிக்கோளாகக்கொண்ட அடியவர்களே, கடம்பந்துறையைச் சென்று அடைவீர்கள். துறை அறியாது அவதிப்படாதீர்கள். இக்கடம்பந்துறை

நல்லதுறை. நாம் உய்யும் துறை. அதனை அடைவீர் என அழைக்கின்றார் அப்பர் பெருமான். பாடல் :

**"ஆரியம் தமிழோடு இசையானவன்**
**கூரிய குணத்தர் குறி நின்றவன்**
**காரிகையுடையான் கடம்பந்துறை**
**சீரியல் பத்தர் சென்று அடைமின்களே"**

—அப்பர்

# திருப்பராய்த்துறை

**இறைவன் : பராய்த்துறை நாதர்**

**இறைவி : பொன்மயிலம்மை**

**பதிகம் :** சம்பந்தர்—1 அப்பர்—1.

பராய் என்பது ஒருவகைக் கடினமான மரம். அம் மரத்தை வெட்டினால் வெட்டுகிற வாள் மழுங்கும். அவ்வளவு கடினமான மரம். அம்மரங்கள் அடர்ந்த சோலையிலே பராய்த்துறை நாதன் விளங்குகின்றார். உங்கள் வினையான மரங்களை வெட்டி வீழ்த்த வேறு எந்த வாளால் வெட்டினாலும் அது கூர் மழுங்கும் உங்கள் வினைகளைவெட்டி வீழ்த்தி அருள்நல்க நானிருக் கிறேன் என்று பெருமான் அங்கு எழுந்தருளியுள்ளார். இந்த அரிய திருத்தலத்தை ஞானசம்பந்தர், அப்பரடிகள், மணிவாசகர் ஆகியோர் பாடிப் பரவியுள்ளனர்.

**ஈடு இல்லாத ஈசன்**

இந்தப் பராய்த்துறை அண்ணல் தன்னோடு சிலவற் றைச் சேர்த்துக்கொண்டுள்ளான். கண்ணிலே காணுகின்ற பொருள்கள் எல்லாம் ஒரு நாள் சாம்பலாகும் முடி சார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு பிடி சாம்பல் ஆவர் என்பதனை ஊர் அறிய, நாம்

திருநீறு பூசுகிறோம். ஆனால் பராய்த்துறை அண்ணலும் நீறு தன் மேனியை அலங்கரிக்கப் பூசி உள்ளான். ஏன் தெரியுமா? எல்லாம் அழிந்த ஊழிக்காலத்திலே நள்ளிருளில் நட்டம் பயின்று ஆடுகின்ற நாதன் என்பதனை உணர்த்த—சர்வ சங்கார காலத்தில் எல்லாம்அழிந்தாலும் நான் அழியாதவன் என்பதனைக்காட்டத் தன் மேனியிலே நீறு சேர்த்தான். கூறு செய்தால் (பிரித்தல்) கையையோ காலையோ, கூறு செய்ய அழகு குறையும்; அது இயற்கை. ஆனால் பராய்த்துறையினனோ தன் மேனியையே கூறு செய்து உள்ளான். ஆனால் அது அழகாகத்தான் உள்ளது. ஆம்! தன் மேனியைக் கூறு (பங்கு) செய்து காரிகையான உமர்தேவிக்குத் தந்தான். அவன் உடலைக் கூறு செய்தான். ஆனால் நல்ல கோலமாகத் (அழகாக) தான் உள்ளான். அவன் தன் கையிலே கழுகு (பாறு) மொய்க்கும் தலையைக் கையிலே சேர்த்துள்ளான். பலரையும் படைக்கும் பிரமா. இதுவரை இறந்தவர் எண்ணிக்கை நூறு கோடிக்கும் மேலாகும். அனைவரையும் காக்கும் மால் தன்னைக் காக்க முடியாது. மறைந்தவர் எண்ணிக்கை ஆறு கோடி. இன்பத்தை அனைவரும் ஈயும் இந்திரர்களில் இறந்து துன்பம் எய்தியவர்கள் எண்ணிக்கை எண்ணிலாதது. முடிவில்லாதவன் ஈசன் ஒருவனே எனப் பட்டியல் கொடுத்தார் அப்பரடிகள்.

அப்படி எல்லாருடைய காலத்தையும் நிர்ணயித்து தான் காலம் கடந்தவன் என்பதனை நாம் காணப் பாறுசேர் தலையைக் கையிலே சேர்த்துள்ளான். புராய்த்துறையின் தலையிலே ஆறு சேர்த்துள்ளான்—மலத்திலே அழுந்தியுள்ள எண்ணிலாத உயிரினத்தைத் தூய்மைப் படுத்தி ஆட்கொள் ஆறுசேர் சடையாறாக உள்ளான். பராய்த்துறை அண்ணல் தன்னோடு நாம் காண, நீறு சேர் மேனியாக, கூறு சேர்வதோர் நேரிழையாழ் பாறு சேர் தலைக்கையோடு; ஆறு சேர். சடையராகக் காட்சி கொடுத்தருள் செய்கின்றார்.

**சம்பந்தர்**

**“நீறு சேர்வதொர் மேனியர் நேரிழை**
**கூறு சேர்வதொர் கோலமாய்**
**பாறு சேர்தலைக் கையர் பராய்த்துறை**
**ஆறுசேர் சடை அண்ணலே.”**

**உய்யும் நெறி**

அன்பர்களே,

எனக்கு வயது 80. இதுவரையில் நான் உய்யும் வழி தெரியாது அலைந்து திரிந்து அலுத்துப் போனேன். இன்று இப்பராய்த்துறைப் பெருமானைக் கண்டறிந்ததும் நான் உய்ந்து போகும் நெறி உணர்ந்தேன்.

பெருமானை மலர் தூவிப் பாடிப் பணிவது என்று இருந்தால் மட்டும் போதாது: தொண்டும் செய்ய வேண்டும். ஆலயத்தைத் தூய்மைப்படுத்த வேண்டும். நந்தவனம் அமைக்க வேண்டும் நந்தவனம் அமைத்தால் தானே மலர் தூவி வழிபாடு செய்ய முடியும். மலர் தூவி னால் மட்டும் போதாது, இண்டை கட்டி ஏத்தவேண்டும். பாடினால் மட்டும் போதாது—தொண்டும் செய்ய வேண்டும். மலர் தூவினால் மட்டும் போதாது இண்டை கட்டிச் சாத்தி இணையடி வணங்க வேண்டும். பாடுவதே தொண்டு எனக் கருதாதீர் பாடுவதும் தொண்டுதான். அதோடு கூடக்கைத்தொண்டும் செய்யுங்கள். மலர் தூவி னாலும் நன்றுதான். ஆனால், இண்டை கட்டி ஏந்தி னால் அழகு கூடுகிறதல்லவா? அதுபோல் கைத்தொண் டோடு பாடுங்கள் பரவுங்கள். நான் உய்ந்த நெறி இது தான். நீங்களும் இந்த நெறி நின்று பராய்த்துறைப் பாங் கரைக் கண்டு இந்நெறி நின்று உய்யுங்கள் என்கிறார் அப்பரடிகள். பாடல்

**அப்பர்**

**“தொண்டு பாடியும் தூ மலர் தூவியும்**
**இண்டை கட்டி இணையடி ஏத்தியும்**
**பண்டரங்கர் பராய்த்துறைப் பாங்கரைக்**
**கண்டு கொண்டடியேன் உய்ந்து போனனே!”**

# திரு ஆனைக்கா

**இறைவன் :** ஆனைக்கா அண்ணல்

**இறைவி :** அகிலாண்ட நாயகி

**பதிகம்:** சம்பந்தர்—3; அப்பர்—3; சுந்தரர்—1; ஆக7

திருப்பராய்த்துறையிலிருந்து 18 கி.மீ.தொலைவிலும் திருச்சி மலைக்கோட்டை இரயிலடியிலிருந்து 4 கி.மீ, தொலைவிலுமுள்ளது,

திரு ஆனைக்கா இறைவன் நீரிலே கலந்து நின்று அருள் செய்கின்றான் என்ற அற்புதத்தை உணர்த்தும் திருத்தலம். இறைவன் பஞ்ச பூதங்களிலே கலந்து நிற்கின்றான் என்பதனை உணர்ந்த நம் முன்னோர்,

| | | |
|---|---|---|
| மண் | — | **காஞ்சீபுரம்** |
| நீர் | — | **ஆனைக்கா** |
| தீ | — | **அண்ணாமலை** |
| காற்று | — | **காளத்தி** |
| வான் | — | **தில்லை** |

என்று ஐம்பெரும்பூதத் தலங்களைச் சிறப்பித்துள்ளனர். நீரிலே கலந்து நின்று அருள் செய்யும் திருத்தலம் ஆனைக்கா. உடலிலே சிறியது எறும்பு; பெரியது யானை. எறும்பு முதல் யானை வரை அருள் செய்யும் கருணையாளன் பெருமான் என்று உணர்த்தும் தலம் ஆனைக்கா. யானை வழிபாடு செய்து முத்தி பெற்ற திருத்தலம் ஆனைக்கா.

சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழல் பந்தல் சேர்த்து வழிபாடு செய்தது. தொண்டினிலே மாறுபட்டு சிலந்தி யானையின் துதிக்கை வழியாகச் சென்று யானையைக் கொன்றது. யானை அருள் பெற்றது. சிலந்தி அரசனானது. அவ்வரசன்தான் கோட்செங்கட்சோழன் என்ற மாமன்னன் என்பர் அப்பரடிகள். பெருமான் திருவடியிலே நீர் சுரக்கும் இத்தலத்தில் ஞானசம்பந்தர் 3 பதிகம்,

அப்பர் 3 பதிகம், சுந்தரர் 1 பதிகம்—ஆக 7 பதிகங்கள். முதல் ஏழு திருமுறைக்குமாக ஏழு பதிகங்கள் உள்ளன. இதை மணிவாசகர் அம்மானைப் பதிகத்தில் குறித்துள்ளார்.

**வேண்டுதல் வேண்டாமை இலாதான்**

அன்பர்களே,

திருக்காளத்தியில், மலைச்சாரலிலே ஒரு நாள் ஓர் அன்பர், இறைவனே ஊனோடு சாப்பிடு—மலை மீதிருக்கும் உனக்கு மாமிசம் உண்டால்தான் வலுவேற்படும். நானே நன்கு சுவைத்துப் பார்த்து, கொண்டு வந்திருக்கிறேன். தின்னப்பா எனத்திண்ணப்பர் வேண்டி ஊட்டுகிறார். அவர் சென்ற பின் வந்த அந்தணரோ அபச்சாரம் என்று புனித நீராட்டுகிறார். இரண்டையும் கண்டு இரண்டு தொண்டர்களின் அன்பை வியக்கிறார் இறைவன்—நான்தான் வேண்டுதல் வேண்டாமையில்லாதவனாயிற்றே. நீ வேண்டாம் என்கிறாய்—அவனோ வேண்டுமென்கிறான். எனவே எனக்கு வேண்டுதலும் இல்லை; வேண்டாமையும் இல்லை என்பதுதான் இறைவன் தன்மை என்று நமக்குச் சம்பந்தர் இறைவனின் தன்மையை விளக்குகிறார். வானத்தில் பொருந்திய மதியைச் சூடியவன். ஆவின் அருங்கலமான ஐந்தும் ஆடி அகம் குளிரும் பெருமான். அவன் சத்திய வடிவமாயும் உள்ளவன். அப்பெருமானுடைய ஆனைக்காவினைச் சென்று அடைபவர்கள் யாரோ, அவர்கள் அவன் அன்புக்கு ஆட்பட்டவர்களே என்று நம்மை அழைக்கிறார் ஆனைக்கா அண்ணல்; அடியினைத் தொழுவோம் வாருங்கள். பாடல்:

**"ஊனொடுண்டல் நன்றென ஊனொடுஉண்டல்தீதென**
**ஆன தொண்டர் அன்பினால் பேச நின்ற தன்மையான்**
**வானொடொன்று சூடினான் வாய்மையாக மன்னி நின்று**
**ஆனொடு அஞ்சும் ஆடினான் ஆனைக்காவு சேர்மினே."**

**இன்பமே வேண்டுமா?**

உயிர்கள் வேண்டுவது—விரும்புவது என்ன? இன்பம் வேண்டும்—துன்பமா வேண்டவே வேண்டாம். இதுதான் நம் இயல்பு. எனவே துன்பம் வேண்டாம் இன்பமே வேண்டுமா? நான் சொல்வதனைக் கேளுங்கள். காடு சென்று கடுந்தவம் புரிய வேண்டாம். எளிய வழிசொல்லு கிறேன் கேளுங்கள். உடலைப்பற்றிய துன்பம் மட்டுமல்ல உயிரைப்பற்றிய துயரத்தையும் போக்கவழிசொல்கிறேன். அது என்ன வழி தெரியுமா? இரவும் பகலும் ஆனைக்கா அண்ணலை வழிபடுங்கள். பகலிலே வழிபடுவது சரி. இரவிலே அவனை ஏத்தி இரவு உறங்கும்போதும்அவனை நினைத்து உறங்குவது போதும். அதுவே என் பழக்கத் தால் இராப்பகல் ஏத்தும் பக்குவத்தைப் பெறலாம். ஏத்துதல் எப்படி என்கிறாயா? மண்ணிலே கிடக்கிற மண்ணைப் பொன் என்று எண்ண மாட்டோம். மண் ணிலே கிடக்கும் பொன்னைப் பொன்னாக்க எவ்வளவு பாடுபட வேண்டும்! ஆனால் நீயே எந்தத் துன்பமும் இன்றியுள்ளாய். மண்ணிலே உள்ள பொன்னிருந்தால் அச்சம் தரும். நீயோ என்னோடு இருந்தால் யமனுக்கே அச்சம் வரும். எனக்கல்ல அச்சம்—அப்பொன் அழியும் —நீயோ அழியாத அரும் பொன். எனவே என் பொன் என்று ஏத்துங்கள். ஈசன் என்றாலே அழிவில்லாதவன். தலைவன் என்று பொருள். அழிவில்லாத பேரின்பத்தைத் தருகின்றவன் ஈசன், இறைவன் என்று நினைந்து நினைந்து வாழ்த்துபவர்களுக்கு ஆனைக்கா அண்ணல் அன்பனாகி விடுவான். அவன் நமக்கு அன்பனாகி விட்டால் துன்பம் ஏது? துயர் ஏது? இன்பம் பெருகும் என்கிறார் அப்பரடிகள்.

> **"துன்பம் இன்றித் துயர் இன்றி என்று நீர்**
> **இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்**
> **என்பொன், ஈசன் இறைவன் என்று உள்குவார்க்கு**
> **அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே!"**

**ஈரமுள்ள இறைவர்**

சுந்தரர் ஓர் அழகான வரலாற்றை இப்பாடலிலே கூறுகிறார்.

சோழ மன்னன் ஒருவன் சிறந்த சிவபக்தன். காவிரியிலே நீராடிக்கொண்டிருந்தார். நீராடும் பொழுது அவன் கழுத்திலே இருந்த முத்துமாலை கழன்று காவிரியிலே கலந்தது. அதனை உணர்ந்த மன்னன், சிவனுக்குரியது இம்மாலை எனச் சிவனுக்கு அர்ப்பணித்தான். நீராடி விட்டு ஆனைக்கா அண்ணலை வழிபாடு செய்யச் சென்றான். ஆனைக்கா அண்ணலுக்கு அர்ச்சகர் திருமஞ்சனம் ஆட்டினார். குடத்திலிருந்து கொட்டிய நீரோடு பெருமான் கழுத்திலே மன்னனது முத்துமாலையும் விழுந்தது. மன்னன், பெருமான் கருணையை வியந்து பாடிப் பரவி ஏத்தினார்.

இவ்வாறு மன்னவன் மனங்குளிர அவன் முத்து வடத்தை ஏற்ற ஆனைக்கா அண்ணல், எல்லாவற்றிற்கும் ஆதியாக உள்ளவன்—முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாக உள்ளவன். அந்தப் பெருமான் ஈரம் உள்ள இதயம் கொண்டவர். தன்னடியிலே சுரக்கும் நீர் ஈரமும் கொண்டவர். அப்பெருமான் என்னையும்—பொல்லாத என்னையும் ஆட்கொள்வார்; உங்களையும் ஆட்கொள்வார். வாருங்கள், வணங்குவோம் என அழைக்கிறார் சுந்தரர். பாடல்:

**"தாரமாகிய பொன்னித் தன் துறையாடி விழுந்து**
**நீரினின்றடி போற்றி நின்மலா கொள்ளென ஆங்கே**
**ஆரம் கொண்ட எம்மானைக் காவுடை ஆதியை நாடு**
**ஈரமுள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடையாரே!"**

# திருக்காட்டுப் பள்ளி

**இறைவன் :** தீயாடிய அப்பர்

**இறைவி :** வார்கொண்ட முலையாள்

**பதிகம் :** சம்பந்தர்—1; அப்பர்—1; ஆக 2.

திருச்சியிலிருந்து 20 கி. மீட்டர் தொலைவிலுள்ளது

இத்திருத்தலம் குடமுருட்டியாற்றின் தென்கரையில், உள்ள திருத்தலம். சம்பந்தரும் அப்பரும் பாடிய அரிய திருத்தலம்.

**தவம் செய்வோம்**

தவம் என்றால் என்ன? தவம் என்றால் மனைவி மக்களைப் பிரிந்து காடு சென்று நீரிலே கிடப்பதும்—நெருப்பின் மத்தியிலே உண்ணாது இருந்து உயிர் விடுவதும் தவமாகாது அது உடலை வருத்தும் செயலாகும். தன் மேனியைப் பொன்போல் கனலில் வருப்பினும், அன்பொடு அகம் குழைவார்க்கு அன்றி என் பொன் மனையை செய்க ஒன்னாது என்றனர், ஆன்றோர். தவம் என்றால் தன்னை வருத்துவதன்று. பின்னே வேறு என்ன செய்வது என்கிறீர்களா? தலை—மனத்தில் பயன் சிந்திப்பது, சிந்தனையில் முடிவும் தலை தந்த தலைவனை வணங்குவது— 'தலையே நீ வணங்காய்' என்றாரே அப்பரடிகளும். இந்தக் காட்டுப் பள்ளி மேயவனே தலை: அதனால் அவன் காலிலே வணங்குவதுதான் தவம். எளிய செயல்: ஏற்றம் தரும் செயல். அத்தவத்தை யாரும்செய்யலாம் அல்லவா? அப்படி அப்பெருமானைத் தலையினால் வணங்குவது சரி? அவரது திறமை, ஆற்றல் என்ன என்று தெரிந்தால்தானே தலை வணங்க என்கிறாயா? அவனது ஆற்றலையும் சொல்கிறேன் கேள்.

வில் என்றால் வளையவேண்டும்—வளைந்த வில்லிலே இருந்துதான் அம்பு புறப்பட்டு எதிரியை வீழ்த்தும்

வளையா வில் எதிரியை வளைக்காது. ஆனால் இப்பெருமானோ வளையாத மேரு மலையையே வில்லாகக் கொண்டான். நீரிலே உறங்கும் தன்மை (குளிர்ச்சி) பொருந்திய திருமால் அம்பாக இருந்தார். வளையா வில் எய்யாத அம்பு; இறைவன் கரத்திலேயே அம்பு இருந்தது. ஆனால் எதிரிகளான மூவரும் எரிந்தனர். எவ்வளவு திறமைசாலி பார்த்தீர்களா?

அவன் வலிமைக்கு இன்னொன்றையும் சொல்கிறேன்.

வானிலே பறந்தான்—பறந்தபோது உயர்ந்த கயிலை மலை இடையூறாக உள்ளது என்று எண்ணி, அதனைத் தன் இருபது தலையாலும் நாற்பது கரத்தாலும் பெயர்த்து எறியமுற்பட்டான். பெருமான் தன் கால் நகத்தினாலே பைய (மெல்ல) ஊன்றினான். மலையடியில் சிக்கிப் பயங்கரமாகக்கதறி அழுது அதனால் இராவணன் என்ற பெயரைப் பெற்றான். இப்படி அழிப்பதிலேயே ஆர்வம் உள்ளவன் பெருமான் என்று அஞ்சாதீர்கள். அந்த இரா்வணனே தன் தவறை உணர்ந்து தன் கையையே வீணையாக்கிச் சாமகீதம் பாடி ஏத்த, பெருமான் அவனுக்கு அருள் செய்தனன். இவ்வளவு ஆற்றல், அருள் செய்கின்ற காட்டுப் பள்ளிப் பெருமானைத் தலையினாலே வணங்குவதே தவம்—தவம் செய்ய வாருங்கள் என நம்மை அறைகூவி அழைக்கிறார், சம்பந்தர்—நாம் தலையினால் வணங்கும் தவம் செய்வோமா? பாடல்:

**சம்பந்தர்**

**சிலைதனால் முப்புறம் செற்றவன் சீரினார்**
**மலைதனால் வல்லரக்கன் வலி வாட்டினான்**
**கலைதனால் புறவணி மல்கு காட்டுப்பள்ளி**
**தலைதனால் வணங்கிடத் தவமது ஆகுமே.''**

**வெட்கம் கெட்டவர்களே;**

செல்வம் செல்வம் என்று பறந்து பணத்தைத் தேடுகிறீர்களே? மற்றவர்களுக்கு அது மகிழ்ச்சியைத்

தருவது இல்லை. நீங்களேதான் மகிழுகிறீர்கள். மற்றவர்கள் பொறாமையும் எரிச்சலும் அல்லவா அடைகிறார்கள். மற்றவர்கள் எப்படியாவது போகட்டும்! நீங்களாவது மகிழ்கிறீர்களா? அதுவும் இல்லை. ஆனால் அப்பணத்தைச் சத்திய வழியிலா தேடுகிறீர்கள்? சத்திய வழியில் நின்றால் பணம் சேர்ப்பது எப்படி என்கிறீர்களே? ஊரிலே இல்லாத பொய் எல்லாம் பேசி இப்பணத்தைத் தேடுகிறீர்களே, உங்களுக்குக் கொஞ்சமாவது வெட்கம் வேண்டாம். வெட்கமே கிடையாது என்கிறீர்கள், இப்படி வெட்கத்தை விட்டு மற்றவர்கள் எரிச்சலைக் கிளப்பிப் பணம் சேர்க்கிறார்களே அது எவ்வளவு நாள் வரும், செத்தால் வருமோ அச்செல்வம்? பிறக்கும் பொழுதும் கொண்டு வருவதில்லை; இறக்கும் பொழுதும் கொண்டு போவதில்லை. அந்தச் செல்வத்தைத் தேடி இவ்வளவு அலைகிறீர்களே! அழியாத பெருஞ்செல்வமான காட்டுப்பள்ளியானின் கழலை, இந்தக் கட்டை உயிர் போகுமுன் அவன், கழல் ஏத்துமின் என்று அறிவுறுத்துகிறார் அப்பர் பெருமான்.

**அப்பர்**

**''மாட்டைத் தேடி மகிழ்ந்து நீர் நும்முளே**
**நாட்டுப் பொய்யெலாம் பேசிடும் நாணிலீர்**
**கூட்டை விட்டு உயிர் போவதன் முன்னமே**
**காட்டுப் பள்ளியுளான் கழல் சேர்மினே!''**

# திருப்பூந்துருத்தி

**இறைவன் :** புஷ்பவன நாதர்
**இறைவி :** அழகார்த்த நாயகி

**பதிகம்**—அப்பர் 3.

திருவாலம்பொழிலிலிருந்து 4 கி.மீட்டர் தொலைவிலுள்ளது.

**அப்பர்**

அப்பரடிகள் பன்னெடு நாள் தமிழ் மாலை சாத்தித் திருமடம் அமைத்துத் தவம் புரிந்த திருத்தலம். ஞான சம்பந்தரும் அப்பரடிகளும் இறுதியாகச் சந்தித்து தங்கித் யிருந்த அரிய தலம். அப்பரடிகளின் திருத்தாண்டகம் ஒன்றைக் காண்போம்.

**என் நோய் தீர்த்த புனிதன்**

இத்திருப்பூந்துருத்தியிலே உள்ள புனிதனை—புண்ணியனை நான் கண்டேன். பிறர் சொல்லக் கேட்டு அல்ல— நானே கண்டேன். அவன் புனிதன்—புண்ணியன்—என் பதனை எப்படி என்கிறீர்களா? எவ்வளவு ஆற்றல் பெற்றவனும் தலையிலே நீரை நிறுத்த முடியாது. ஆனால் இவனோ ஓர் ஆற்றையே தன் சடையிலே வைத்துள் ளான். இது என்ன பெரிய செயல்? அதைவிடப் பெரிய செயல் செய்துள்ளான். அது எப்போதுமே நிலையாக என் நெஞ்சை—அவனை நினைக்குமாறு செய்தானே, அது நில்லாத நீர். சடைமேல் நிற்பித்த செயல் பெரிய செயல் அல்லவா? நானும் என் வாழ்நாளில் எண்ணறிய நூல்கள் கற்றேன். திருக்குறளுக்கு உரையும் எழுதியுள் ளேன் என்றாலும், இதுவரையில் கல்லாதனவெல்லாம் எனக்குக் கற்பித்தான். உயிர், இறை தலை இவற்றின் தொடர்பு; தலையை அறுக்க நான் செய்ய வேண்டிய செயல் என்று இவற்றையெல்லாம் கற்பித்துத் தன் திரு ஐந்தெழுத்தையும் கற்பித்தான், என் தமக்கை வாயிலாக,

இதுவரை நான் கண்டதெல்லாம் உலகப் பொருட் களையே; அதன் தன்மைகளையே; ஆனால் இவனோ இது காறும் நானும் காணாத அவன் திருவடியைக் காட்டி னான். நஞ்சை அமுதாக்கினான். கல்லைக் கடலிலே மிதக்கச் செய்தான். தென்றலாகி நான் காணாதவை யெல்லாம் காட்டினான். நான் அவ்வப்போது மயக் குற்றுத் தயங்கிய போதும் சொல்லித் தொடர்ந்து என்னை அடியனாக, தொண்டனாகக் கொண்டு என் பொல்லா உடல் சூலை நோயையும் உயிரின் சூலையான

பிறவித் துன்பத்தையும் போக்கினான். அதனால்தான் அவனைப் புனிதன் என்றும், புண்ணியன் என்றும் கூறினேன். அந்தப் புனிதனை—புண்ணியனை துருத்தியிலே நான் கண்டேன். நீங்களும் காணுங்கள். என்கிறார், அப்பரடிகள்.

**"நில்லாத நீர் சடை மேல் நிற்பித்தானை**
**நினையா என் நெஞ்சை நினை வித்தானைக்**
**கல்லாத எல்லாம் கற்பித்தானை**
**காணாதன எல்லாம் காட்டினானைச்**
**சொல்லாதன எல்லாம் சொல்லி என்னைத்**
**தொடர்ந்து இங்கு அடியேனை ஆளாக் கொண்டு**
**பொல்லா என் நோய் தீர்த்த புனிதன் தன்னைப்**
**புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே."**

# திருநெய்த்தானம்

திருஐயாற்றுக்கு மேற்கே ஒரு மைல் தொலைவில், காவிரியாற்றின் வடகரையிலே உள்ள அழகிய திருத் தலம். கலைமகள் வழிபாடு செய்து பேறு பெற்ற தலம். ஞான சம்பந்தப் பெருமான் பதிகம் ஒன்றும், நாவுக்கரசர் ஐந்தும் ஆக ஆறு பதிகங்களையுடையது. நம் வாழ்வுக்கு ஆறு (வழி) சொல்வது இந்த ஆறு பதிகங்களாகும்.

## நெய்யும் நேயமும்

இத்தலத்தில் எழுந்தருளிய பெருமான் கடையூழிக் காலத்திலே பேய்கள் பாடப் பெருநடமாடுகின்றவன். அதனாலே நாம் அஞ்ச வேண்டியதில்லை. நம் அச்சம் அகல வேய் (மூங்கில்) போலும் தோளுடைய அம்மையே ஒரு பாகமாக உள்ளார். அவர் உடலிலே ஒரு கூறாக இருப்பதனாலே பெருமான் இவ்வுலகில் உள்ள உயிர் களுக்கெல்லாம் தாயாக நின்று காத்திருக்கின்றான்.

அவன் நெய்யாடிய பெருமான்—நேயமும் ஆடிய (நேயம்-அன்பு) பெருமான்—எனவே அவன் எப்போதுமே நம் நேயத்தோடு ஆட விரும்பும் பெருமான். நேய்த்தானத் தில் உள்ளான் பாடல் :

**சம்பந்தர்**

**"மையாடிய கண்டன் மலைமகள் பாகமதுடையான்**
**கையாடிய கேடில் கரியுரி மூடிய ஒருவன்**
**செய்யாடிய குவளை மலர் நயனத் தவளோடும்**
**நெய்யாடிய பெருமான் இடம் நெய்த்தாமெனீரே!"**

அப்பரடிகள் திருஜயாற்றில் கயிலைக் காட்சி கண்டு தொழுது திருப்பணிகள் பல செய்து திருநெய்த்தானம் வந்து வணங்கிப் பாடிய பதிகமாதலால் பாடல் தோறும் கயிலை மலையானை நினைவூட்டுகின்றார்

**தேனூற்று**

பெருமானே! உலகத்திலே எல்லா உயிர்க்கும் தந்தை தாய் உண்டு. ஆனால் நீ ஒருவன்தான் தந்தை தாய் இல்லாதவன். எல்லோருக்கும் முன்னே தோன்றி முளைத் தவன் அவன் (தாயுமிலை; தந்தையுமிலை; தான் தனியன் என்பார் மணிவாசகர்)கயிலை மலையாள் உள்ளவனும் நீ தான்.எனது தாயாயும் தலைவராயும் உள்ளவன் நீதான். ஏகம்பத்தில் உறைவானும் நீதான் எல்லாருக்கு முன்ன வன் நீயே அன்றோ! முக்கண்ணுடையவனும் நீயேதான்! மூவலூரிலும் உள்ளவன்தான் நீ! ஆனால் இவற்றையெல் லாம் விட நீஎன் சிந்தையாய் உள்ளாய் அல்லவா? அதுவே எனக்குப் பிடித்தது. சிந்தனையிலே எப்படி இருக்கிறாய் தெரியுமா? தேனூற்றாய் உள்ளாய்.எனவே. நீ கயிலனாய் இருப்பதைவிட என் நெஞ்சிலே நின்றவனாய் உள்ளாய். சிலர் இதயத்திலே சில காலம் தோன்றிச் சென்றுவிடுவாய் ஆனால் என் நெஞ்சிலே தேனூற்றாய் நின்றவனாக நிலை பேறு பெற்றவனாக உள்ள 'நெய்த்தானத்தவனே, அங்கே

நிலை பெற்று நில்' என வேண்டுகின்றார். நாமும் நெய்த் தானப்பெருமானை எங்கள் நெஞ்சிலே நின்றுதேனூற்றில் இருக்கச் செய் என வேண்டுவோமாக. பாடல்:

**''தந்தை தாய் இல்லாதாய் நீயே என்றும்**
**தலையார் கயிலாயன் நீயே என்றும்**
**எந்தாய் எம்பிரான் ஆனாய் நீயே என்றும்**
**ஏகம்பத்து என் ஈசன் நீயே என்றும்**
**முந்திய முக்கண்ணாய் நீயே என்றும்**
**மூவலூர் மேவினாய் நீயே என்றும்**
**சிந்தையாய்த் தேனூராய் நீயே என்றும்**
**நின்ற நெய்த்தானா என் நெஞ்சுளாயே!''**

# திருஐயாறு

**இறைவன் :** ஐயாறப்பர்

**இறைவி :** அறம் வளர்த்த நாயகி

**பதிகம் :** சம்பந்தர் 5; அப்பர் 12; சுந்தரர் 1; ஆக 18.

திருநெய்த்தானத்திலிருந்து 3 கி.மீட்டர் தொலைவிலுள்ளது.

வெண்ணாறு, வெட்டாறு, அரசிலாறு, குடமுருட்டி ஆறு, காவிரி ஆறு எனும் ஐந்து ஆறுகளுக்கு இடையே உள்ளது திருஐயாறு. இப்பதியிலேதான் அப்பரடிகள் கயிலைக் காட்சி கண்டார். இங்குதான் யாராலும் காண முடியாத திருவடியை தேவரும் மூவரும் காண முடியாத திருவடியை—அருந்தமிழிலே அறுதியிட்டு உறுதியாகக் கண்டேன்; அவர் திருப்பாதம் நான் கண்டறியாதன கண்டேன் எனப் பாடிப் பரவிய பதி.

இப்பதிக்கு சம்பந்தப் பெருமான் 5 பதிகங்களும், அப்பர் அடிகள் 12 பதிகங்களும், சுந்தரர் 1 பதிகமும் ஆக 18 பதிகங்கள் பாடியருளிய அருட்தலம்.

**மந்தியும் மாந்தரும்**

உயிர்களிலே சிறந்தது மனித இனம் என்று பெருமை கொள்ளும் மனித இனமே. நீ எந்த வகையிலே மற்ற உயிர் இனங்களைவிடச் சிறந்தவன்? வருமுன் காப்பதுதானே அறிவுடைமை. வந்தபின் நொந்து போவது அழகல்லவே. ஆனால், மனிதக் கூட்டமே, நீஉனக்கு வருகின்ற துயரைப் பற்றிக் கவலைப்படாது களிப்போடு இருக்கிறாயே? இது தான் உன் சிறப்பா? என்னைவிட அறிவிலே குறைந்த ஐயறிவுடையகுரங்கு ஐயாறிலே செய்கிற செயலைப்பார். அதைக் காட்டுகின்றேன். அதன் பின்பாவது உனக்குப் படுமா? எனக் கேட்டு ஒரு காட்சியைக் காட்டுகின்றார் ஞானசம்பந்தர். ஐயாறுஆலயத்தில் மங்கையர்நடனமாட முழவு முழங்குகிறது. அந்த ஓசை கேட்டு மழை பொழிய இடிஇடிக்கிறதே எனச் சில மந்தி மரமேறி வானத்தே நோக்கி முகிலைப் பார்க்கிறது; பார்க்கலாமா? நடன மாடும் மாதர்களுக்கோ முழவு அதிர்வது அன்றாட நிகழ்ச்சி. அதனால் எல்லாக் குரங்கும் ஏறிப் பார்க்க வில்லை. அச்ச உணர்வு காரணமாக முன்னெச்சரிக்கை யுணர்வு காரணமாகச் சில மந்தி மரமேறி முகில் பார்க் கிறது. மழை வாரா விடினும் அது முகில் பார்க்கிறது. ஆறறிவு படைத்த மனிதனே உனக்கு மழை போன்ற சந்தேகத்திற்குரிய தவறான இசையை இடியென உணரும் குரங்கு போல் அல்லாமல், உன் வாழ்விலே நிச்சயமாக நீ சந்திக்க வேண்டியது ஒன்றுஉண்டே. அதற்குநீ முன்னெச் சரிக்கையடைய வேண்டாமா?நீ விரும்பினாலும் விரும்பா விட்டாலும் உன் புலன்கள் எல்லாம் கலங்கி நெறிமயங்கி, அறிவிழந்து செயலற்று நிற்கும் நிலை உண்டே! அதிலே இருந்து தற்காத்துக் கொள்ள வேண்டாமா? அந்தஅவலம் தோன்றும்போது 'அஞ்சேல்' என்று அபயம் கொடுக்க ஐயாறப்பர் உள்ளார். அவன் அருளைப் பெற எல்லாரும் வேண்டாம்—சிலரேனும் வாருங்கள் என்று அழைக்கிறார் நம் ஞானச் செல்வர்.

**சம்பந்தர்**

**"புலன் ஐந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி**
**அறிவுஅழிந்திட்டு ஐமேல் உந்தி**
**அலமந்த போதாக அஞ்சேல் என்று**
**அருள் செய்வான் அமரும் கோயில்**
**வலம் வந்த மடவார்கள் நடமாட**
**முழவு அதிர மழை என்று அஞ்சிச்**
**சிலமந்தி அலமந்து மரம் ஏறி**
**முகில் பார்க்கும் திருஐயாறே."**

அப்பரடிகள் அற்புதமான தேவாரப் பாகை நமக்குத் தருகின்றார். 'முன்னே கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்' எனப் பாடிப் பரவியுள்ளார்.

**தலைவரின் பணிவு**

ஆண்டவனை அடைய உயிர்கள் வழிபாடு செய்ய வேண்டும். வழிபாடு என்பது பூவும் நீரும் கொண்டு அவன் அடியை வணங்குவதுதான். இங்கே அப்பரடிகள் ஐயாறப்பரை வழிபடவும், நீரும் சுமந்து செல்லும் அடியார்கள் பின் சென்றதைக் குறிக்கின்றார். இறைவனைப் பூவும், நீரும் சுமந்து சூட்டுவதற்கு யாரும் தடையாக இல்லாமல் கருவறைக்கே சென்று அன்பர்கள் வழிபட்டதனை இங்கே குறிப்பிடுகிறார். இன்னொன்றையும் பார்க்க வேண்டும். சமணத்திலேயே மடாதிபதியாகத் திகழ்ந்தவர், இறைவன் அருளால் கல்லோ தெப்பமாக மிதக்கவும், நஞ்சு அமுதாகவும், நீற்றறை பொய்கையாகவும் திகழும் அற்புதத்தை இறையருளால் செய்யப் பெற்றவர். அப்பூதியாரின் மாண்ட மகனைப் பிழைத்தெழச் செய்தவர். அருட் செம்மல். அவர் செல்கிறார் ஐயாறப்பர் திருமுன்.எந்தவிதமான ஆர்வாரமும் இன்றிச்

செல்கின்ற தொண்டர்களைத் தொடந்து பின்சென்ற தாகச் சொல்கிறார். என்னே அப்பரின் அடக்கம்! அப்படி அவர் ஐயாறு சென்று வணங்கும் போது உயிர்க் குலமெல்லாம் ஆணும்,பெண்ணுமாக அம்மை அப்பராகக் காட்சி கொடுத்த அற்புதத்தை விவரிக்கிறார். பெரு மானைப் பாடிப் பரவி பூவும், நீரும் சுமந்து வழிபட அறிவுறுத்துகிறார் அப்பரடிகள். பாடல் :

**"மாதர் பிறைக்கண்ணி யானை**
**மலையான் மகளொடும் பாடி**
**போதொடு நீர் சுமந்து ஏத்திப்**
**புகுவார் அவர் பின் புகுவேன்**
**யாதும் சுவடு படாமல் ஐயாறு**
**அடைகின்ற போது**
**காதல் மடப்பிடி யோடும்**
**களிறு வருவன கண்டேன்**
**கண்டேன் அவர் திருப்பாதம்**
**கண்டறியாதன கண்டேன்."**

## ஆற்று அலையும், அருள் அலையும்

காவிரியாறு கரை புரண்டு ஒடுகிறது. காவிரியின் ஒரு கரையிலே ஐயாறப்பர். மறு கரையிலே சுந்தரர். காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்தோடுகிறது. அக் கரையிலே கன்றெனக் கதறிப் பாடுகிறார் சுந்தரர். அக்கறையே இன்றிப் பெருமான் இருக்கின்றார். இந் நிலை நீடிக்க முடியுமா? சுந்தரர், பெருமானை வேண்டு கிறார்.

பெருமானே, என்னதான் அடியார்கள் உன்னைப் பிரி யாது நீயே சரண் என்று இருந்தாலும் அவர்களை இகழாது அருள் செய்ய வேண்டாமா? அந்த எண்ணம்கூட உனக்கு இருப்பதாகத் தெரியவில்லையே! உனக்கு என்பால் கோபமா? ஊடலா? என்ன ஊடல்? அதனை நான்

அறியேனே! உண்மைத் தொண்டனாகிய நான் தேடித் தேடிப் பார்த்தேன்; ஓலமிட்டுப் பார்த்தேன் உன்னை எங்கும் காணாது தவிக்கிறேனே ஐயாறப்பா! நீ எங்கே உள்ளாய்? என்னைப் பலகாலம் நேரிலே ஆட்கொண்ட ஆரூரை இந்த ஆரூரன் சிந்தித்து வணங்குகிறேன். அசைகின்ற அலைகளையுடைய காவிரிக் கரையிலே உள்ள பெருமானே, காவிரியில் உள்ள நீர் அலைகூட அசைகிறதே! உன் அருள் அலை அசையாதா? நீர்தான் அசைவிரா என வேண்டப், பெருமான் இதோ உள்ளேன் என்று ஓலமிட்டு ஆற்று நீரை விலகி வழிவிடச் செய்து ஆட்கொண்டார் சுந்தரரை! பாடல் :

**''கூடி அடியாரிருந்தாலும் குணமொன்றிலர்**
**குறிப்பில்லீர்**
**ஊடியிருந்தும் உணர்கில்லேன் உம்மைத் தொண்டன்**
**தேடி எங்கும் காண்கிலேன் திருவாரூரே சிந்திப்பேன்**
**ஆடுந்திரைக் கோடத்து ஐயாறுடைய அடிகளே!''**

# திருப்பழனம்

**இறைவன் : வழித்துணை நாதர்**

**இறைவி : பெரியநாயகி**

**பதிகம்** : சம்பந்தர்—1; அப்பர்—5; ஆக 6.

திருஐயாறிலிருந்து 7 கி.மீ. தொலைவிலுள்ளது.

திருஐயாறு தலத்திற்கு அண்மையில் உள்ளது. அப்பரடிகள் 5 பதிகங்களும், சம்பந்தர் 1 பதிகமும் ஆக ஆறு பதிகங்கள் உடையது. இறைவனை அன்றி முருகனைக் கூட நம் செந்தில் மேய வள்ளிமணாளர்க்குக் காதை கண்டாய் என்று கூறிச் சென்ற அப்பரடிகள்

தன் தொண்டரான அப்பூதியடிகளைச் சிறப்பித்துப் பாடிய தலம். அவரது புதல்வரை ஒன்றுகொலாம் என்ற பதிகம் பாடி விடம் நீக்கி நடமாட வைத்த நல்ல பதி, திருப்பழனம்.

**பழனநகரார் உலா**

இங்கே ஞானசம்பந்தர் பழனநாதனை உலா வரச் செய்கின்றார் தம் பாவால். அதனைப் பார்ப்போம்.

ஒரு தலைவர் உலா வருகிறார் என்றால் அவர் ஓர் உயர்ந்த வண்டியிலே வருவார். அவரைச் சுற்றித் தொண்டர்கள் முழக்கம் செய்து சூழ வருவார்கள். அந்தத் தலைவன் உலா முடிவிலே பரிசு நல்குவார். இது தானே இயல்பு. அதேபோன்று பழன நாதனும் பவனி வருகிறார். பார்க்கின்ற அனைவருக்கும் தெரிய வெள்ளை எருதேறி வருகிறார்—அறத்தின் நாயகம் எனக் காட்ட.

எருது எப்படி வயலில் உழுது நீர்ப்பாய்ச்சி, கதிரடித்து நெல்லைக் களத்திலே இருந்து எடுத்து உரிமையாளனுக்குக் கொடுத்து விட்டு அவன் புறக்கணிக்கும் தவிட்டை உண்கிறதோ அதுபோல் நாம் புறக்கணிக்கும் பாம்பு, அவனது அணி. நாம் வெறுக்கும் புலியின் தோல் ஆடை, பிச்சை எடுத்து உண்டு, என்றும் தான் தியாகி என்பதனைக் காட்ட, எருதேறி வருகிறார். அவர் அலங்காரமாக வெண்ணூல் பூண்டு. பூதப்படை சூழ வருகிறார். புலியினை உரித்து அதே தோலை அழகாக அணிந்துள்ளார். அவரது தொண்டர்கள் அவரைத் தலைவனே, சிரித்து முப்புரமெரித்தவனே, எங்கள் மும்மலங்களையும் எரிக்க மாட்டாயா? நாங்கள் உன்னை ஒழிய ஒருவரையும் நம்பவில்லை. பெருமானே, என்றும் நம்பா என்றும் கூறி நின்று அவன் பாதம் தொழுகின்றனர் அப்படிப் பாதம் தொழும் பக்தர்களில் பாவம் போக்கும் பரிசைப் பழன நகரார் வழங்குகிறார். வாங்குவோம் நாமும், பாவம் நீக்கும் பரிசை. பாடல் :

**சம்பந்தர்**

> **"வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறி**
> **பூதம் சூழப் பொலிய வருவார் புலியின் உரிதோலார்**
> **நாதா எனவும் நக்கா எனவும் நம்பா என நின்று**
> **பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழனநகராரே."**

அப்பரடிகள் தொண்டு நெறியிலே நின்றவர். தொண்டர் தம் அருமை பெருமை உணர்ந்தவர். உலகத்திலே எந்தத் தலைவனும் தன் தொண்டருக்குத் தராத சிறப்பை அப்பரடிகள் தன் தொண்டரான அப்பூதியாருக்குக் கொடுக்கிற அற்புதத்தைப் பார்க்கின்றோம்.

**தொண்டரும் தலைவரும்**

இப்பழன நகர்ப் பெருமான் வஞ்சித்து விட்டான் என்னை. காதலித்தான்; கை விட்டான். அவனைப் பிரிந்த பிரிவினாலே என் கைவளைகள் கழன்று ஓடுகின்றன. என் சங்கடத்தை உணர்ந்தாலும் என் காதலன் ஆன பழன்நாதன் என் முன் வரமாட்டான். எப்படியும் இப்போது வந்துதான் ஆக வேண்டும். என் பெருமானே ஏன் தெரியுமா? உலக நலத்திற்காக வேள்வி செய்யும் அப்பூதி வந்துள்ளார்! நான் மட்டுமா தனியாக வந்துள்ளேன். நீ ஏமாற்ற? என் திருத்தொண்டரான அப்பூதியாரின் இஞ்சிப் பூவாய் இருப்பது உன் சேவடி என்பதனை நன்கு அறிவேன். உன் சேவடி அப்பூதியாரின் முடியிலே திகழ்வது. அப்பூதியாரின் திருமுடியோ என் மடி மீது உள்ளது. எனவே இப்போது நீ என்னை ஏமாற்ற முடியாது எனக் கூறித் தன் தொண்டரைத் தன்னை விட உயர்வாக பழனநாதன் எனக்காக இல்லாவிடினும் என் தொண்டராக வந்துதான் தீர வேண்டும் எனப் பாடுவது. பார் முழுதும், காணாத புதுமை. தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிது அன்றோ! பாடல் :

அப்பர்

''வஞ்சித்து என் வளைகவர்ந்தான் வாரானே
ஆயிடினும்
பஞ்சிக்கால் சிறகு அன்னம் பரந்து ஆர்க்கும்
பழனத் தான்
அஞ்சிப் போய் கலிமெலிய அழல்ஓம்பும் அப்பூதி
குஞ்சிப் பூவாய் நின்ற சேவடியாய் கோடியையே.''

# வடகுரங்கு ஆடுதுறை

**இறைவன் :** அழகு சடைமுடி நாதர்

**இறைவி :** அழகு சடைமுடியம்மை

**பதிகம் :** சம்பந்தர். 1.

திருப்புவனத்திலிருந்து 8. கி. மீ. தொலைவிலுள்ளது.

காவிரியாற்றில் வடகரையிலே குரங்குகள் குதித்தாடும் சோலையின் இடமாக அமைந்த ஊர் வடகுரங்காடு துறையாகும். இத்துறையில் ஞானசம்பந்தப் பெருமான் ஓர் அழகிய திருப்பதிகம் பாடியுள்ளார். அப்பாடலில் இராம காதையின் வரலாற்றை உணர்த்துகின்றார் இராவணனை வாலி தன் வாலினால் கட்டிய செய்தியைக் கம்பன் காவியத்தில் தூதுவனாய்ச் சென்ற அங்கதனை, நீ யார் என்று வினவிய இராவணனைப் பார்த்து, யார் என்றா கேட்கிறாய்? உன்னை வாலினாலே கட்டி இழுத்தடித்த வாலியின் மைந்தன் நான் என்று கூறுவதாக அமைப்பார். இராவணனை வாலி வாலினால் கட்டியிழுத்தசெய்தி வால்மீகி இராமாயணத்தில் இல்லை. ஆனால் கம்பர் கூறுகிறார். கம்பர் திருமுறைகளிலே தோய்ந்த சிலர் அக்கம்ப நாடார் இக்குரங்காடுதுறைத்

தேவாரத்தைப்பயின்று சம்பந்தர் கூறுகின்ற இந்தச் செய்தியைத் தன் காவியத்தில் படைக்கின்றார். கம்பரைக் கவர்ந்த அந்தப்பாடலைப் பார்ப்போமா?

கறுத்த நீல நிறமுடைய அரக்கனை இருபது கரத்தோடும் பத்துத் தலையோடும் பரக்கத் தன் வாலினால் கட்டிய வா.லியார், வழிப்பட்ட திருக்கோயில் இக்குரங்காடுதுறை எனக் குறித்தார் சம்பந்தர். இந்தக் குரங்கா.டு துறையில் ஓடி வருகிற காவிரி தன் கரையிலே வருகிற மக்களுக்கு தன் அலைக் கரத்தால் மணமிகுந்த ஏலம். இலவங்கம், இஞ்சி, மஞ்சள் போன்றவற்றை அள்ளித் தருகிறது. அதுபோல் இக்குரங்காடுதுறையிலே குடிகொண்ட பெருமான் நம் வாழ்விலே அருள் மணம் கமழ, சிவமணம் கமழ அவன் திருவருளை அள்ளித் தருவான்—காவிரி தரும்போது, தன்னை வந்தடையும் அடியவர்கட்குத் குரங்கா்டுதுறையான் தரமாட்டானா என்ன? தருவான், அவன் அருள் பெறுவோம். பாடல்:

**"நீலமா மணி நிறத்து அரக்கனை இருபது கரத்தோடு அல்க**
**வாலினால் கட்டிய வாலியார் வழிபட மன்னு கோயில்**
**ஏலமோடிலை இலவங்கமே இஞ்சிய மஞ்சள் உந்தி**
**ஆலியா வருபுனல் வடகரை அடை குரங்காடு துறையே."**

# திருப்பாலைத்துறை

வடகுரங்காடு துறையிலிருந்து 15கி.மீ தொலைவிலுள்ளது.

பண்டை நாளில் பாலை நிலமாய்த் தமிழகத்தில் இருந்த ஊர் இப்பாலைத்துறை. இது தற்போது பாபநாசம் என அழைக்கப்படுகிறது. இக்கோயிலுக்கு நாவரசர் ஒரு பதிகம் பாடியுள்ளார். அது ஓர் ஒப்பற்ற

பதிகமாகும். தமிழ் வேதத்தின் திரட்சியாக உள்ளது, இத்திருப்பாடல். அதனைக் காண்போம். வடமொழி வேதம் மூன்று ஆகும், அவை ரிக், யஜுர். சாம வேதம் என்பன ஆகும். அதர்வண வேதம் பின்னாளில் வியாச முனிவரால் தொகுக்கப்பட்டது. எனவே வேதம் மூன்றாகும்.

**தமிழ் வேதமும் வடமொழி வேதமும்**

யஜுர் வேதம் 1000 சாகையுடையது. சாகை என்பது அதிகாரம் போன்றது. "சாகை ஆயிரமுடையார்,. சாம வேதமுடையார்" என்பார் சம்பந்தர். அதில் 500 வது சாகை ஸ்ரீருத்திரம் என்பதாகும். அருமறைப்பயனாம் உருத்திரம் என்பார் சேக்கிழார் பெருமான். அந்த ஸ்ரீருத்திரத்தின் மையப்பகுதியில் 'சிவாய' எனும் சிவ மூல' மந்திரம் சூறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பெரும் சிறப்பு அம்மூலமந்திரம் இடம் பெற்றதுதான். அதுபோல நம் தமிழ் வேதமாகிய திருமுறைகளில் அடங்கள் முறையே ஏழு. சம்பந்தர் திருமுறை 1,2,3 திருமுறை; அப்பரடிகள் திருமுறை 4,5,6, சுந்தரர் ஏழாவது திருமுறை. மூவர் பாடலிலும் நடுமையாய் அமைவது அப்பரடிகளின் ஐந்தாம் திருமுறையாகும். ஐந்தாம் திருமுறை 100 பதிகங்கள் 1000 பாக்கள் உடையது.

அதில் 51 பதிகம் திருப்பாலைத்துறைப் பதிகம். அப்பதிகத்தில் நடுப்பகுதியில் வருவது சிவாய என்ற சிவ மூலமந்திரமாகும். இனி அப்பாடலைப் பார்ப்போம்.

இப்பாலைத்துறையில் உள்ள பாலைத்துறையார் ஒரு நல்ல பணி செய்துள்ளார். மானுடச் சட்டை தாங்கி வாழும் மனிதர்கள் தேவலோக பதவிகளே பெரிது என்று எண்ணி மதி மயங்குகின்றனர். ஆனால் தேவர்களோ புவனியில் போய்ப் பிறவாமல் நாள் போக்குகின்றோம். அவமே என வருந்தி விண்ணுலகிலிருந்து மண்ணகம் வந்து

பெருமானை வணங்குகின்றனர். அதனைக் கண்டு மக்கள் வியப்புற்றார்கள். ஆனால் பாலைத் துறையார் என்ன செய்தார் தெரியுமா? தேவாதி தேவர்களுக்கு வேறு வேலை கிடையாது. ஆனால் மண்ணுலக மக்களோ தங்களது ஆராயிரம் தொல்லைகளுக்குள்ளும் மறவாது 'சிவாய' என எண்ணி எழில் வானகம் பெற உரிய வழி, ஏற்ற வழி எனக் கண்டனர். அதுவே 'சிவாய' எனும் நம் வழி. பாடல்:

**"விண்ணினார் பணிந்து ஏத்த வியப்புறும்**
**மண்ணினார் மறவாது சிவாய என்று**
**எண்ணினார்க்கு இடமா எழில் வானகம்**
**பண்ணினார் அவர் பாலைத் துறையரே."**

# திருவலஞ்சுழி

**இறைவன் :** வலஞ்சுழி வாணன்

**இறைவி ,** பெரிய நாயகி

**பதிகம் :** சம்பந்தர் 3; அப்பர் 2; ஆக 5.

திருப்பாலைத்துறை (பாபநாசம்)யிலிருந்து 10கி.மீ. தொலைவிலுள்ளது.

சோழவள நாட்டுத் திருத்தலங்களில் ஒன்றான இவ்வரிய திருத்தலத்தில் காவிரி வலம் சுழித்து வளம் கொழித்துச் செல்கிறது. வளர்ந்தோங்கிய தென்னஞ் சோலைகள் ஒருபுறம். வானோக்கும் கருப்பங்காடுகள் மற்றொருபுறம் மாந்தோப்புகள் பிறிதொருபுறம். மந்தி பாயும் வாழைத் தோட்டமும் பலாவின் கனிகளில் உகுக்கும் மரக்கூட்டமாக எஞ்சிய இடத்தையிட்டு நிரப்பும் இயற்கையன்னை எழில் பூத்துச் குலுங்குகிறாள். காவிரித்தாய் நிலைபெற்று வளங் கொழிக்கிறாள்.

அதனால்தான் ஞானசம்பந்தர் மன்னு காவிரி என்று தம் பாவில் குறித்தார். அது மட்டுமல்லாது. பிடரிலே மறைந்த காவிரி மீண்டும் தோன்றத் தன்னை அர்ப்பணித் தார்; ஏரண்ட முனிவர் என்ற பெருமகனார். ஊரவரின் நலனுக்காகத் தன்னையே அர்ப்பணித்த தியாகசீலர். அவரது தியாகத்தால் பிடரிலே மறைந்த காவிரி வலஞ் சுழித்துச் சென்றது. அதனால் இத்திருத்தலம் திருவலஞ்சுழி எனப்பெயர் பெற்றது. மறைவிலிருந்து காவிரி மீண்டும் வலஞ்சுழித்தெழுந்ததால் மன்னு காவிரி என்று குறிப்பால் அத்தியாக வரலாற்றை நினைவு கூர்ந் தார் ஞானசம்பந்தர்.

**என்ன புண்ணியம்?**

இவ்வரிய திருத்தலத்தில் ஞானசம்பந்தரும் அப்பரடி களும் பதிகம் பாடியுள்ளனர். ஆனால் இருவருமே மனதை—சிந்தையை—முன்னிலைப்படுத்திப் பாடியுள் ளனர். மனத்திலே மறைந்திருந்த பெருமான் நினைவிலே மனத்தைப் பார்த்தே பேசுகிறார் நம் ஞானக் குழந்தையார். புண்ணியம் எது?

ஏ, மனமே உன்னை நான் என்னவோ என்று நினைத் தேன். நான் பலகாலும் சொன்னேன். முன்னைப் பிறவி களிலே நான் பாவமேதும் செய்தது இல்லை; புண்ணியமே செய்தேன் என்று. இன்று அது எனக்கு மட்டுமல்ல, மனமே! உனக்குமே உறுதிப்பட்டிருக்கும். ஏனென்றால் மன்னு காவிரி வலஞ்சுழி வாணனை இன்று உன் மனத்தால் நினைக்கச் செய்து—கையால் தொழச் செய்து—வாயால் அவன் புகழ் பாடச்செய்து வழிபாடு செய்தேன் அல்லவா? அதனாலே முந்தையப் பிறவிகளிலே புண்ணியம் செய்தது புரிகிறது. ஆனால் மனமே, என்க்குள் ஐயம். முந்தைப் பிறவிகளிலே செய்த புண்ணியப் பேறுகளிலே எந்தப் புண்ணியத்தால் இந்தப் பேறு பெற்றேன் என்று சற்றுச் சொல்வாயா? அது எதற்குப் பழைய கதை என்கிறாயா? புரியாமல்

பேசுகிறாயே! அந்தப் புண்ணியம் யாதென்று அறிந்தால் தொடர்ந்து அதையே செய்து வலஞ்சுழிவாணனை அடிக்கடி வழிபடலாம் அல்லவா!

ஜடப்பொருளான காவிரியே தன்னை ஈந்தார்க்கு ஒளி வீசும் குளிர் முத்துக்களை வாரித்தருகிறதே அதே காவிரிக் கரையிலே உள்ள வலஞ்சுழி வாணனை அடிக்கடி வழிபட்டால் அருளொளி வீசும்—பிறவி வெப்பம் தீர்க்கும் முத்தி இன்பம் தருவான் அல்லவா? என்கிறார் ஞானசம்பந்தர். வலஞ்சுழி மருவிய மணியை நாமும் மனதால் நினைத்து வாயால் பாடிக் கையால் தொழுதால் அவன் மனக்கவலை மாற்றும் மருந்தாவான். வாருங்கள், வணங்குவோம். பாடல் :

**"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே**
**இருங்கடல் வையத்து**
**முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை**
**முழு மணித் தரளங்கள்**
**மன்னு காவிரி சூழ் திருவலஞ்சுழி**
**வாணனை வாயாரப் பாடியும்**
**பன்னி ஆதரித்து ஏத்தியும்**
**பாடியும் வழிபடும் அதனாலே."**

**—சம்பந்தர்.**

## யார் பெரியவர்?

கல்விக்கு நாயகியான கலைமகளைத் தன் நாவிலே வைத்து படைப்புத் தொழிலைப் பரம்பொருளின் ஏவலால் செய்கின்ற பிரமனுக்கும் திருமகளைத் தன் இதயச் சிறையிலே வைத்து வையகத்தைக் காக்கும் கர்த்தாவான திருமாலுக்கும் யார் பெரியவர் என்ற வாக்கு

வாதம் நடந்தது. இருவருக்குமே தலைவர், பெரியவர் சிவபெருமான் என்பதனை மறந்தனர். விவாதமும் விதண்டா வாதமும் அறியாமையின்—ஆணவத்தின் சின்னமாகுமல்லவா? விவாதம் முற்றுப்பெறவில்லை. முடிவில் சிவபெருமானையே நாடித் தங்களில் யார் பெரியவர் என்று கேட்டனர். நாமாயிருந்தால் நானே பெரியவன் எனக் கூறியிருப்போம். ஆனால், பெருமான் அப்படிக் கூறாது, உங்களில் யார் என் அடியையும் முடியையும் காண்கிறார்களோ அவர்களே பெரியவர் என்று கூறிக் குறிப்பால் உணர்த்த, பெருமானே பெரிய வர்க்கெல்லாம் பெரியர் என உணர்த்தினார். ஆணவ மும் அறியாமையும் அவ்வளவு விரைவில் உணராது அல்லவா?

**தேடிய படலம்**

தேடிப்புறப்பட்டனர் பிரமனும் திருமாலும். கலை மகள் நாயகன் அறிவுஜீவி. அறிவு மேல்நோக்கும் தன்மையுடையதுதானே. பிர்மா வானோக்கித் தேடிப் புறப்பட்டான். ''பணம் பாதாளம் மட்டும் பாயும்'' என்பார்கள் அல்லவா? ஒரு பழமொழி மூலம் அதனைத் துவக்கியதே திருமகளின் நாயகனான திருமால்தான்.

திருமால் பன்றியுருக் கொண்டு பரமனைத் தேடிப் புறப்பட்டு பூமியைத் தோண்டிச் சென்றான். இதனை நாவரசர் கிண்டலாகக் கிண்டிக் காணலுற்றார் என்பார் பிரிதோர் இடத்தில், நகைச்சுவையாக!

தேடியவர்கள் கண்டு பிடித்தார்களா என்றால், இன்னமும் தேடிக் கொண்டே இருக்கிறார்கள்! இவர்கள் தேடும் பாதம் என்ன ஒளியும் பாதமா? அல்லது அது ஓடு பாதமா? இரண்டுமில்லையே! அது நம்மை நாடும் பாத மல்லவா? ஒரு பாதத்தை யூன்றி நின்று உலகமெல்லாம்

காண நானே் அனைவரையும் ஆட்கொண்டு அருள் செய்கின்றேன் எனக் காலைத் தூக்கி நின்று ஆடும் பாதமல்லவா இவர்கள் தேடு பாதம்! ஆடும் பதத்தில் பாதச்சிலம்பொலி பகரும் அல்லவா? காணக் கண்கோடி வேண்டுமென்றாலும் ஓசை கேட்டுப் பாதம் பற்றலாமே? ஆணவத்திற்கு நல்லோசை காதில் ஏறாதே. இப்படி இவர்கள் பாதம் தேடுகின்ற கூத்தைக் காணுகின்ற போது, என் சிந்தையும் வலஞ்சுழி ஈசன் ஆடு பாதம் தேடுவதில் ஆர்வம் மிகுதியாகிறது. புறத்தில் தேடுகின்றவர்களே! தேவாதி தேவர்களே. அகத்திற் கண் கொண்டு தேடுங்கள். தேவனை! தேவனை, என்னுள்ளே நான் தேடிக் கண்டு கொண்டேன்.

உங்கள் தேடும் கூத்தை நினைத்தால் என் சிந்தையும் ஆடும் பாதம் தேடும் ஆர்வத்தை அதிகரிக்கிறது என்கிறார் அப்பரடிகள்.

**அப்பர்**

**"தேடுவார் பிரமன் திருமால் அவர்**
**ஆடுபாதம் அவனும் அறிகிலார்**
**மாட வீதி வலஞ்சுழி ஈசனைத்**
**தேடுவான் ஊறுகின்றது என் சிந்தையே."**

# கொட்டையூர்

**இறைவன் :** கோடீசுரர்

**இறைவி :** நந்தாடு நாயகி

**பதிகம் :** அப்பர்—1.

**கொட்டையூர் கோமான்**

அன்பர்களே கும்பகோணம் செல்லும் வழியில் அவ்வூருக்கு 4 கல் முன்னால் உள்ள ஊர் கொட்டையூர். அவ்வூரில் கோடீஸ்வரமுடையார் என்ற பெருமான் இருக்கிறார். ஈசன் இருக்குமிடம் ஈசுரம். அந்தப் பெருமான் தன்னை வந்தடைந்தாருக்கு இன்பங்கள் தருபவன். உங்களைப் பற்றியிருக்கும் மலக்கட்டியினைப் போக்கிட ஆனந்தத்தேன் தருவார்.

அதற்கு அடையாளமாகச் செந்தாமரைப் போது அணிந்துள்ளான்—அரும்பிலே தேன் இராது. மலரிலே தேனிருக்கும். ஆனால் வண்டும் உண்டுவிடலாம். காற்றிலே அசைந்தாடிச் சிதறியும் விடலாம். அரும்பிலும் மலரிலும் தேன் இராது. அரும்பாகவும் இல்லாது மலராகவும் மலராது போதாக உள்ளபோது தேனை உள்ளடக்கித் தன்னை நாடிவரும் வண்டிற்குத் தோதாகக் காத்து நிற்கும். அதுபோல் தன்னை நாடிவரும் அன்பர்களாகிய வண்டிற்குத்தேன் சேமித்து வைப்பதன் அடையாளமாகக் கோட்டீசுரக் கோமான் செந்தாமரைப் போது அணிந்துள்ளான்.

அவன் மங்களமாய் இருந்து அன்பர்களுக்கு மங்களத்தைச் செய்பவன். அதனால் அவனைச் சிவன் என்பர் நம் முன்னோர். அப்பெருமான் தேவர்களுக்கெல் லாம் தலைவன். அதனாலே அவனை நாம் எப்படி அடைவது என அஞ்சாதே? அவன் கரடு முரடானவன் அல்லன். அவன் திருமேனியிலே பங்கு கொண்டுள்ள பெரு மாட்டியினைப் பந்தாடும் கைதான் பந்தாடும் கை என்பதனால் வன்மையான கை என்று கருதிவிடாதே. பந்தாடும் கையானாலும் அது மென் விரல் கொண்டது. நம்மை அரவணைத்து அருள் செய்வான்—அவனைக் காணச் செல்லும்போது எப்படி வெறுங்கையோடு செல்வது என எண்ணுகிறாயா? அவனுக்கு விருப்ப மானதைச் சொல்கிறேன், கையோடு கொண்டு செல். அவன் பால், தயிர், தேன்—விரும்பி முழுக்காடுபவன். அவற்றைக் கொண்டு செல்லும் போதும் அப்பொருள் களை மட்டும் கொண்டு செல்லாதே. அதனோடு உன் அன்பையும் கொஞ்சம் கலந்து கொண்டு சென்று அவனை முழுக்காட்டி அவன் அருளை எளிதாகப் பெற்று வாருங்கள் என்று நம்மையெல்லாம் கொட்டை யூர்ப் பெருமானிடம் ஆற்றுப்படுத்துகிறார் பாசத் தோடும், நம் அப்பாவான அப்பரடிகள். பாடல் :

**"செந்தாமரைப் போது அணிந்தான் கண்டாய்
சிவன் கண்டாய் தேவர் பெருமான் கண்டாய்
பந்தாடு மென் விரலாள் பாகன் கண்டாய்
பாலோடு நெய்தயிர் தேன் ஆடி கண்டாய்"**

# திருக்குடமூக்கு
## (கும்பகோணம்)

**இறைவன் :** கும்பேசர்

**இறைவி :** மங்கலநாயகி

**பதிகம் :** சம்பந்தர்—1; அப்பர்—1; திருப்புகழ் 10.

இரயிலடியிலிருந்து 8 கி.மீ. தொலைவிலுள்ளது குடமூக்கு.

**புனிதமாம் பெருந்தீர்த்தம்**

குடமூக்கு என்று தேவாரப் பதிகங்களில் குறிப்பிடப் படும் பதி. தற்போது கும்பகோணம் என வழங்கப்படும் ஊராகும்.

இந்நகரில் பாடல் பெற்ற திருத்தலங்கள் 3 ஆகும். பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை மகாமகம் என்ற பெரு விழா நடைபெறும். மகாமகம் என்ற திருக்குளத்தில் எல்லா ஆறுகளும் கலந்து பொங்குகின்றன. அதில் பாரததேச முழுவதிலுமிருந்து வந்து மக்கள் நீராடி மகிழ்வர். இது பந்நெடுங்காலமாக நடைபெறும் விழா ஆகும்.

**"பூமருவும் கங்கை முதல் புனிதமாம் பெருந்தீர்த்தம்**
**மாமகந்தான் ஆடுதற்கு வந்து வழிபாடு செய்யுங்**
**கோயில்"**

என்று சேக்கிழார் கூறிப் பாடுகிறார் என்றால், அதன் பெருமையை என்னவென்று கூறுவது. நம் பாவம் தீர்க்கப்

புனித நதிகளில் நீராடுகிறோம். அப்புனித நதிகள் பாவங்களைப் போக்க 12 ஆண்டுகளுக்கொருமுறை மாமகத்தில் நீராடுகிறதாம். அது மட்டுமா. கவியரசர் ஒட்டக்கூத்தர் வாழ்ந்த பெரிய மடம் இங்குள்ளது. நாயன்மார்களில் ஒருவரான மூர்க்க நாயனார் வாழ்ந்த இடம் இவ்வூர்ப் பெரிய மடமே ஆகும். அதற்குச் சான்றாக அம்மடத்தில் கவியரசர் ஒட்டக்கூத்தர், வீரபத்திரர், மூர்க்க நாயனார் ஆகியோரின் திருஉருவங்கள் உள்ளன. இந்த அரிய நகரில் மையப் பகுதியில் உள்ள ஆலயம் கும்பேஸ்வரர் ஆலயமாகும். அப்பெருமான் மீது ஞானசம்பந்தர் ஒரு பதிகமும் அப்பரடிகள் ஒரு பதிகமும் பாடியுள்ளனர்.

**பொடி அணி மேனியன் போர்த்த ஆடை**

பொடியாடிய பெருமான் தன் திறந்த மேனியைக் காட்டிக் கொண்டிருப்பதனை உமையம்மை, ஏன் இப்படி இருக்கிறீர்? உம் மேனியழகைக் கண்டு உயர்குலமெல்லாம் காதலிக்கத் தொடங்கிவிடும் போலிருக்கிறதே. தயவு செய்து உம் திருமேனியைப் போர்த்தி என்னைக் காத்தருளுங்கள் என வேண்டினார். நாமாயிருந்தால் உடனே விலை கொடுத்து வாங்கிப் போட்டுவிடுவோம். சாதாரண மக்களாய் இருந்தால் நம்மிலேயும்கூட மனைவி ஆணையிட்டால் அதனை அமுல்நடத்தும்போது வீர தீர சாகசங்களைச் செய்வது இன்னும் மகிழ்ச்சியும் பெருமையும் தானே-நாமே வாங்கியணிவதைக் காட்டிலும் நம் சாகசத்தால் பெறுவது சிறப்பல்லவா? கழுத்திலே ஒரு நகையணிகிறோம். அது கடையில் வாங்கியணிவதைவிட நம்மைப் பாராட்டியோ நம் செய்த சாதனையால் அணிவிக்கப் பட்டாலோ அது நமக்கும் சிறப்பு. நம் மனைவிக்கும் களிப்பு. நம் அன்னவருக்கும் பெருமையும் அல்லவா? இதே உத்தியைப் பெருமானும் கையாண்டார். பெருமாட்டி திருமேனியைப் போர்த்தக் கோரினார்.

பெருமான் அம்மையே அஞ்சி நின்று தன் வாள்தடங்கண் களால் பார்க்கத் தன் மேனியைப் பார்த்தார்.

எவ்வாறு தெரியுமா?

கயன் என்ற அசுரன் பிரம்மதேவனைக் குறித்து தவம் இயற்றினான். பிரம்மனும் வெளிப்பட்டு நீ வேண்டும் வரம் யாது என வினவ, அவனும் யாராலும் வெல்ல முடியாத ஆற்றலும் யானை உருவமும் வேண்டிப் பெற்றான்.

ஆனால் வரம் அளித்த பிரம்மன் அவ்வாறே தருகிறேன், ஆனால் சிவபெருமான் முன் சென்றால் உன் ஆற்றல் அழிந்துவிடும் கவனத்தில் வை என்றார். சொல்லொணாத தொல்லைகளைக் கொடுத்தான் மக்களுக்கும், தேவர்களுக்கும். ஒருமுறை அவர்களைக் கொடுமைப்படுத்தி விரட்டினான். அவர்கள் ஓடிச்சென்று பெருமான் சந்நிதியில் (வழுவூர்) நின்றனர். அங்கும் ஓடினான் கயன். பெருமான் மத்தகத்தில் கால் வைத்து அவன் யானைத்தோலை உறித்து தன்மேனியில் போர்த்தி அம்மையையும் திருப்தி செய்து அடியவரையும் காத்து அரக்கனையும் அழித்தார் பெருமான். அந்தப் பெருமானை வானவரும், மன்னவரும் வணங்கி ஏத்த இந்த குடமூக்கிலே கூடி நிற்கின்ற காட்சியைக் காட்சிப் படுத்துகிறார் ஞானசம்பந்தர். பாடல்:

**சம்பந்தர்**

**"வடிவுடை வாள்தடங்கண் உமை அஞ்சவோர் வாரணத்தைப்**
**பொடி அணி மேனிமூடப் புரிகொண்டவன்புன் சடையான்**
**கொடி நெடு மாடம் ஓங்கு குழகன் குடமூக்கு இடமா**
**இடிபடு வானம் ஏத்த இருந்தான் அவன் எம் இறையே"**

**பழ வினை போக்கிடுவீர்**

இந்தக் குடமூக்கிலே உள்ள பெருமான் தம் பழவினைகளின் பிடிப்புகளைப் போக்கி விடுவான். வின்னைகளின் பிடிப்பு அதிகமாவது அதனைப் போக்குவது நீக்குவது எளிய செயல் அல்ல. அப்படியிருக்க, கும்பேசர் நீக்குவார் என் அப்பரடிகள் கூறுகிறாரே. ஓர் ஐயம் வருகிறது அல்லவா? நம் ஐய உணர்வை உணர்ந்த அப்பரடிகள் அடுத்த அடியிலே ஒரு வரலாற்றை எடுத்துக்கூறுகிறார். விண்வெளியிலே அரக்க, மூவர் கோட்டைகளை அமைத்திருந்து கொண்டு சேட்டை செய்தனர். கோட்டையிலிருந்தாலே சேட்டைதான் செய்வர் போலும். பெருமானை வேண்டப் பெருமான் அம்மூன்று கோட்டைகளையும் அசுரர்களையும் ஒரு நொடியிலே எரித்தார். இப்போது சற்று நம்பிக்கை வருகிறது. சரி, அப்படி வினைகள் பற்று அற நாம் என்ன செய்யவேண்டும் என்ற எண்ணமும் தொடர்ந்து வருகிறது, அவ்வளவு அரிய காரியத்தை அவர் செய்ய நாம் எவ்வளவு சிரமப்பட வேண்டுமோ எனப் பயப்படும்படியாக இல்லாது எளிய வழியையே சொல்கிறார். அரிய செயல் முடிக்க எளிய வழி. அப்படியானால் அது என்ன வழி எனத் துடிக்கிறோம். அவ்வழி பெருமானுக்குத் தொண்டராகித் தொழுது வணங்கிப் பணிவதுதான். ஆம். பண்டை வல்வினைப் பற்றற வேண்டுமானால் குடமூக்கிலே உறையும் பெருமானுக்குத் தொண்டராகித் தொழுது வணங்குவதுதான். எவ்வளவு எளிய வழியை நமக்கு அப்பரடிகள் காட்டுகிறார் பாருங்கள். தொடருவோம் அவர் காட்டும் வழியை. பாடல் :

**அப்பர்**

**"தொண்டர் ஆகித் தொழுது பணிமினோ**
**பண்டை வல்வினைப் பற்றற வேண்டுவீர்**
**விண்டவர் புரமூன்று ஒரு மாத்திரைக்**
**கொண்டவன் உறையும் குடமூக்கிலே."**

# திருநாகேச்சுரம்

**இறைவன் :** நாக நாகேச்சுரர்

**இறைவி :** குன்றமுலைநாயகி

**பதிகம் :** சம்பந்தர் 2; அப்பர் 3; சுந்தரர்—1
திருஞானசம்பந்தர்—1

கும்பகோணத்திலிருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ளது.

சோழநாட்டுத் திருத்தலங்களில் ஒன்றான இத்தலம் மூவராலும் ஆறு பதிகங்கள் பாடப்பெற்று ஆற்றோரம் உள்ள அழகிய திருத்தலம். சேக்கிழார் பெருமான் சிந்தையை ஈர்த்து அவரது சொந்த ஊரிலேயே 'திருநாகேச்சுரம்' என்ற ஆலயம் எழுப்ப வைத்த சேக்கிழாரின் ஆன்மார்த்த திருத்தலம். ஐந்தலை நாகம் நாகேச்சுரப் பெருமானை வழிபட்ட செய்தியை ''மாநாகம் அருச்சித்த மலர்க் கமலத்தாள் வணங்கி'' என்று குறிப்பிடுவார்.

நம் அருண்மொழித்தேவர் நாவரசரும் ''ஐந்தலை யரனின் பணிகொண்டருள் மைந்தர்போல் மணி நாகேச்சு வரரே'' எனக்குறித்தார். ஞானசம்பந்தப் பெருமான் பாடல்தோறும் நாகேச்சுரப்பெருமானை வணங்க நாளும் கோளும் தீமை பயவாது என அருளிச் செய்துள்ளார்.

**கண் உள்ளவர் யார்?**

**''கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்''**

என்று வள்ளுவப் பேரரசன் மிகக் கடிந்து சொல்வார். கண்கள் இருக்கலாம்; ஆனால் கல்வி கற்காதவர்களுக்கு கண் இருந்தாலும் அது பார்வையற்று விடுவதுபோல் ஆகிவிடுகிறது. ஏன் தெரியுமா? கண் பார்வையினாலே தான் மனிதன் குழி எது? மேடு எது? பாம்பு எது? பழுது

எது என உணர்கிறான். அது பாம்பைப் பழுது எனக் கண்ணிழந்தவன் உணர்ந்து பாம்பு கடித்து உயிர் துறப்பான். அவ்வளவே. ஆனால் கற்ற அறிவில்லாதவன் நன்மை எது தீமை எது என்று பகுத்துணராது பழியும் பாவமும் அடைந்து ஆன்மாவையே அழிக்கும். ஆய்ந்து உணரக் கல்வி அவசியம். கல்வி அறிவில்லாதவன் தீமையை நன்மையாகக் கருதினால் அது அவனது உயிரை—ஆன்மாவை அழிக்கும். அதனால்தான் வள்ளுவர் அவர்களைக் கண் இருந்தும் புண்ணுடையராக மதித்தார். ஞானசம்பந்தப் பெருமான் இப்பதிகத்திலே சொல்கிறார் வள்ளுவர் கூற்றுப்படிக் கற்றார் என்போர் கண்ணுடையர்.

கற்றவர் எப்படி இருக்கவேண்டும் தெரியுமா? கற்றபடி நிற்க வேண்டும். கற்றலின் பயன் யாது? "கற்றதனால் ஆய பயனென் கொல் வாலறிவன் நற்றாள் தொழார் எனின்" என்பார் வள்ளுவர். ஆக, கற்றலும் கற்ற வழி நிற்றலும் கண்ணுதல் பெருமானை வழிபடவே. அப்படி வழிபடாதவர் கண்ணுடையர் அல்லர். முகத்தில் புண்ணுடையர் என்கிறார், நம் காழிப் பெருமான். கண்ணுடையவன் குழி எது? மேடு எது? எனப் பிரித்துணரப் பயன்படுகிறது. கண்ணிருந்தும் நாகேச்சுரப் பெருமான் நம்மை நரகக் குழியிலேயிருந்து வீழாமல் காக்கக் காத்திருந்தும், அவன் திருவடியை வணங்காமல் பாவக் குழியிலே வீழ்பவர்களை எப்படிக் கண்ணுடையர் என்பது? நமக்கு அருள் செய்வதற்கென்றே அம்மையைக் கங்கிலே வைத்தும் நம் பாவச் சேற்றைக் கழுவத் தலையிலே கங்கையை வைத்தும் ஈர உள்ளத்தோடும் உள்ள கண்டவரை ஈர்க்கும் வண்ணமுமான பெருமான் திருநாகேச்சுவரத்திலே குடி கொண்டுள்ளார். மண்ணுலகிலே உள்ளவர்கள் நாளும், நாளும் நாகேச்சுரப் பெருமானை மனத்தால் நினைத்து வாயினால் பரவி கையினால் தொழுது ஏத்துகின்றவர் யாரோ, அப்பெருமானைக் கண்ணினால் கண்டு களிப்படைபவர் யாரோ அவர்களே கண்ணுடையவர்கள். மற்றவர்கள்

கண்ணிருந்தும் புண்ணுடையன் என ஞானசம்பந்தப் பெருமான் அழகாக அறிவுறுத்துகிறார். பாடலைப் பார்ப்போம். பாடல் :

**"பெண்ணொர் பாகம் அடையச் சடையில் புனல் பேணிய**
**வண்ணமான பெருமான் மருவும் இடம் மண்ணூர்**
**நண்ணி நாளும் தொழுது ஏத்தி நன்கு எய்து நாகேச்சுரம்**
**கண்ணினால் காணவல்லார் அவர் கண்ணுடை யார்களே."**

**எது நன்னெறி?**

நான் யாருக்கும் எந்தவிதமான தீமையும் செய்வதில்லை. பொய், சூது, மது, மாது, கொலை ஏதும் செய்வதில்லை. முடிந்தவரை யாருக்கும் நான் நன்மையே செய்வேன். ஆனால், நான் ஏன் இறைவனை வணங்க வேண்டும்? வணங்க மாட்டேன். என் அளவில் நான் தூய்மையாக உள்ளேன். அது நல்வழிதானே என்று ஒருவன் அப்பரடிகளைக் கேட்டான். அதற்கு அப்பரடிகள் அது எப்படி நல்வழியாகும்? நீ விரும்பாவிடினும் நீ தீவழிக்கே செல்வாய்.

இந்த உடம்பை வளர்த்து உணவூட்டிச் சீராட்டிப் பாராட்டிப் பாலூட்டி வளர்க்கிறாள் தாய். அவளை மறப்பது நன்றி கொன்ற செயல் அல்லவா? ஆனால், நம் பெருமானோ, இந்த உயிரோடு உயிர்க்குயிராய்க் கலந்து நின்று பிறவி தோறும் தொடர்ந்து நின்ற தாயாக உள்ளவன். உன்னையும் உருவாக்கி நீ நிற்க மண் அமைத்து, குடிக்க நீர் அமைத்து, மூச்சு விட காற்றை உருவாக்கி வெப்பத்தை உண்டாக்கி தூய காற்றுக்காக அண்ட வெளியைப் படைத்து உன்னை குறிப்பிட்ட காலம் உலவவிட்டுப் பின் ஓய்வு கொடுத்து (மரணம்), மீண்டும் பிறக்க வைத்துத் தொடர்ந்து உன்னைத் தன்னைப் போல் பேரறிவுப் பொருக்களா

அவன் செய்கின்ற தாய்மை உணர்வுக்கு நீ நன்றி பாரட்ட வேண்டாமா?பாராட்டாத வழி எப்படி நல்வழி யாகும்?

அவன் தாயானவன். மண்ணவர்க்கும், விண்ண வர்க்கும் தலைவன். கயிலை மலை அவனது உரிமை யான உறைவிடம். அங்குதான் பார்க்க வேண்டுமா? என மயங்காதே. உலகமெலாம் அவன் மயம். ஏன் நீயும், நானுமே அவன் மயம்தான். அவனது கலப்புத் தன்மை யிலே அன்பர் உடனேயேயிருப்பான், அல்லாதவர்களுக்கு அவன் வெகு 'தூரத்தில் இருப்பான். அவனுக்கென்று எந்தப் பன்மையும் தன்மையும் இல்லை. வெம்மையும் அவனே! தண்மையும் அவனே! அவன் அன்போடு அகம் குழைவார்க்கு அருகேயேயிருப்பான். வஞ்சனையால் கஞ்சைமுத்தை வழுத்துவார், காணமுடியாது வஞ்ச கனாக இருப்பான். அவன் வேதத்தில் உள்ளவன்—சுகமாய் இருப்பவன்—வேள்வித் தீயிலே விளங்கியிருப் பான். அப்பெருமான் திருநாகேசுரத்திலும் அருள் செய்ய வீற்றிருக்கிறான். அவனைச் சேவிக்காதவர்கள் எவ்வளவு நல்லவர்கள் ஆனாலும் அவர்கள் சொல்லும் வழி எவ்வளவு நல்வழி என்று அவர்கள் சொன்னாலும் அது நன்னெறியாகாது. நாகேசுரப் பெருமானை வணங்கும் வழியில் செல்வதே நன்னெறியில் சேரும்நெறி என்கிறார், அப்பரடிகள். பாடல்:

**''மாயவனை மறையவனை மறையோர் தங்கள்**
**மந்திரனைத் தந்திரனை வளரா நின்ற**
**தாயவனை வானோர்க்கு ஏனோர்க்கும்**
**தலைவனை மலையவனை உலகமெல்லாம்**
**ஆயவனைச் சேயவனை அணியான் தன்னை**
**அழலவனை நிழலவனை அறியவொண்ணாத்**
**தீயவனைத் திருநாகேச் சுரத்துளானைச்**
**சேராதார் நன்னெறிக்கண் சேராதாரே!**

**விடை வேண்டும் அய்யா!**

திருநாகேசுரத்திலுள்ள பெருமானே, எனக்கு இரண்டு ஐயம். அதனைத் தீர்க்க வேண்டுமென ஆரூர் வேண்ட, பெருமான், என்னப்பா? நாவலர் காவலனே. உனக்கு ஐயமா? நல்ல ஆளப்பா! நீ கேளப்பா என்றார் பெருமான். ஆரூரம், பெருமானே! பிறை போன்ற அழகிய நெற்றியை உடைய பெருமாட்டி அஞ்சிட, அவர் தம் மனமானது மருண்டு பதைபதைக்க நீ நஞ்சு உண்டபோது தடுத்து, அது உம் கண்டத்திலிருக்கும்படியான நிலையில் வைத்தாயே, பெருமானே! அந்த ஆலகால விஷத்தை நீ ஏன் உண்டாய்? உனக்குக் கொண்டு வந்ததே நான்தானே! என்னிடமாவது சொல்லக்கூடாதா அவசியம் சொல்ல வேண்டும். இன்னொன்று; இந்த திருநாகேசுரத்திலே குடிகொண்டுள்ள பெருமானே, வண்டுகள் மலரிலே உள்ள தேனை எடுத்துக் கொண்டு பண் செய்து கொண்டு மலரிலே உள்ள மகரந்தத்தை நுகர்ந்து கொண்டு அங்குள்ள குருக்கத்திச் செடியில் அமர்கின்றதே? அந்த அறிவுகூட இல்லாத மனிதக் கூட்டம், உன் மனத்தை நுகரவும் சிவானந்தத் தேனை உண்டு மகிழவும் உன் திருவடிப் பேற்றைப் பெறவும் வராதது ஏன்? பதில் சொல்லும் என்றார். நாவலர் உயிர்க்குலத்தைக் காக்கத்தான் தியாகேசன் என்பதனை உணர்ந்து நஞ்சுண்டார். நம் தீவினை காரணமாகச் செல்வதில்லை என்று பெருமான் வேறு சொல்ல வேண்டுமா என்ன நமக்காக நாவலர் கேட்கிறார்.

# திருவிடைமருதூர்

**இறைவன் :** இடைமருதீசர்

**இறைவி :** பெருநல மாமுலை நாயகி

**பதிகம் :** சம்பந்தர் 6, அப்பர் 5, சுந்தரர் 1.

திருஞான சம்பந்தர் 4.

திருநாகேசுரத்திலிருந்து 8 கி.மீ. தொலைவிலுள்ளது.

**அடியவர் வழிபாடு**

இஃது ஓர் அரிய பெரிய தலம். நால்வர் பெருமக்களாலும் போற்றி வணங்கப் பெற்றது. பட்டினத்தார், பத்ரகிரியார், அருணகிரியார் போன்ற அருளாளர்கள் தங்கியிருந்து பணி புரிந்த தலம். சம்பந்தப் பெருமான் 6 பதிகங்களும், அப்பரடிகள் 5 பதிகங்களும், சுந்தரர் 1 பதிகமும் மணிவாசகர் 4 இடங்களிலும் குறித்துள்ளார் மருதமரம் ஆலய மரமாகும். இப்படி மருத மரம் உள்ள இடம் 1. திருப்பருப்பதம், 2. திருவிடைமருது, 3. புடைமருது என்பது ஆகும்.

குழந்தைகள் எங்கேனும் அதிசயம் நடந்தால், புதிதாக நடந்தால் அதனை அடிக்கடி நினைவூட்டி அதுபற்றி வினவிக்கொண்டே இருப்பர். எல்லா இடங்களிலும் பெருமானுக்கு அந்தணரே குடத்தில் நீர் ஆட்டுவர். ஆனால் இந்தத் திருவிடை மருதூரிலே படம் கொண்ட பாம் பூணிந்த பரமன் திருமேனிக்கு அவனது தாமரை மலர்கள் அலங்கரிக்கப்பட்ட திருமுடிமேல் அடியார் பெருமக்கள் குடங்கொண்டு தங்கள் உள்ளம் குளிர்ந்து குளிர் நீர் ஆட்டுகின்ற திருஇடை மருது இதுதானா என வினவுகிறார் ஞானசம்பந்தர். ஆம் ஆண்டவனைப் பூவும் நீரும் சுமந்து ஆட்டுவது அடியவர் பணி இன்று அர்ச்சகர் வேலையாகிவிட்டது. காலப்போக்கில் ஆனாலும் சம்பந்தர் காலத்திலேயே ஆண்டவனுக்கும், அடிய

வர்க்கும் இடையிலே இன்னொருவர் பல இடங்களில் இருந்தாலும் திருஇடைமருதில் அவ்வாறு இல்லாதிருந்தது என நாம் உணர்கிறோம் ஞானசம்பந்தரே அதனை அலங்கரிகிறார்—அடியவரே ஆண்டவனின் திருமேனிக்குத் திருமுழுக்காட்டும் காலம் தமிழகத்தில் விரைவில் வரவேண்டும் எனப் பிரார்த்திப்போமாக. பாடல் :

சம்பந்தர்

**"தடங்கொண்ட தொர் தாமரைப் பொன்முடி தன்மேல்
குடங்கொண்டு அடியார் குளிர் நீர் சுமந்து ஆட்டப்
படங்கொண்ட தொர் பாம்பரை ஆர்த்த பரமன்
இடங்கொண்டிருந்தான் இடை மருதுஈதோ."**

ஒரு மனிதனுக்கு ஆரம்பத்தில் உண்பதிலே நாட்டம் அதிகம். இன்னும் சற்று வயது கூடுமானால் பெண்ணை விரும்புகிறான்; இன்னும் சற்று வயதானால் பதவியை விரும்புகிறான். மூன்றையும் ஒரு கால கட்டத்தில் ஒரு சேர விரும்பும் மனிதனும் உண்டு.

கனி உண்பான். கரும்பின் சுவையால் ஆன இனிப்புகளை விரும்பி உண்பான். சர்க்கரை நோய் வந்தால் விட்டே தீரவேண்டும். மங்கையரை நாடுவான். அதுவும் ஒரு குறிப்பிட்ட வயதுவரம்போடு சரி—பதவி தரும் சுகம் பரலோகம் செல்லும் வரை இருக்க விரும்புவான். இருப்பான் 80 வயதில் நாடவல்லையா என்ன? ஆனால் அப்பரடிகள் இந்த மூன்றிலும் இனிமையானவன் இடை மருது ஈசன். யாருக்குத் தெரியுமா? அவன் தாளை அடைந்த அடியவருக்கு! பாடல் :

அப்பர்

**"கனியிலும் கட்டிப்பட்ட கரும்பினும்
பனிமலர்க்குழல் பாவை நல்லாரினும்
தனிமுடி கவிந்து ஆளும் அரசினும்
இனியன் தன்னடைந்தார்க்கு இடைமருதனே."**

**புல் நுனி பனி வாழ்வு**

பிறந்தார் உறுவது பெருகிய துன்பம் என்பர் பெரியோர். ஆனால் நான் என்ன நினைத்தேன் தெரியுமா? இன்றுதான் துன்பம். நாளை இன்பம் என்று எண்ணி இறுமாந்து வாழ்ந்து வந்தேன். எதிர்பார்த்தது என்னவோ இன்பம். ஆனால் கிடைத்ததோ துன்பம். நான் மாறவே இல்லை. முதலையும் மூர்க்கனும் கொண்டது விடாது என்ற பழமொழிக்கு ஏற்ப நானும் இன்பத்தை எதிர் பார்த்து எதிர்பார்த்து வெகுகாலம் கழித்துவிட்டேன். என் வாழ்க்கையைப்பற்றி இப்போதுதான் உணர்கிறேன். பெருமானே! அதிகாலைப் பசும் புல்லிலே பனித்துளி முத்துப்போல அழகாக இருக்கும். அதுபோல என் வாழ்க்கை வெகு அழகு என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அந்தப்பனித் துளியில் அழகு நேரம்— பகலவன் கதிர்பட்டால் பனித்துளி இல்லை. அதுபோல என் வாழ்க்கை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அறியேன். இப்போது உணர்ந்து உன் அடியினை அடைந்துள்ளேன். இடை மருதுறை பெருமானே! நான் உய்யவகை ஒன்றை அருளிச் செய்ய மாட்டாயா? என நமக்காக வேண்டுகிறார் நாவலர் பெருமான். பாடல் :

**"புல் நுனைப் பனி செங்கதிர் கண்டால்**
**போலும் வாழ்க்கை பொருவில்லை நாளும்**
**என் எனக்கினி இன்றைக்கு நாளை**
**என்று இருந்திடர் உற்றேன் எந்தாய்,**
**முன்னமே உன்சேவடி சேரா**
**மூர்க்கன் ஆகிக் கழிந்தன காலம்**
**இன்னம் என்றனுக்கு உய்வகை அருளாய்**
**இடை மருதுஉறை எந்தை பிரானே."**

**ஆனந்தத் தேன்**

தேன் ஒரு சொட்டு இருந்தாலே இனிக்கும். தேன் மலக்கட்டை அகற்றும். எவ்வளவு நாள் இருந்தாலும் கெடாது. நோய்க்கு மருந்து நிறைய உண்டால் மயக்கும். தேன், சொட்டும் கூடு (பொந்து) அதனை அடைந்தால் தேனீ கொட்டும். ,பந்தம் கொண்டு சென்று தன்னைப் போர்த்துத் தேன் எடுப்பர். ஆனால் நம் பிறவியாகிய மலக்கட்டை உடைத்து பிறவி நோயைப் போக்கி அன்னத்தெலும்பும் உன்னாக ஆனந்தத்தேன் சொரியும் பொழுது திருஇடையூர்துறைப் பெருமான் அந்தப் பொந்தையடைய பந்தம் அறுத்துப் பக்தி ஆடை போர்த்துத் தேன் நுகரலாம். பெருமானே! என் தந்தை, தாய், உறவு எல்லாம் நீ எனப்பந்தம் அறுத்து என்னைக்- குருந்த மரத்தடியில் அருளுபதேசம் செய்து ஆண்டு கொண்ட பாண்டிய பெருமானே, ஆனந்தத்தேன் சொரியும் பொந்தாக இடை மருதுவில் உள்ளார். அவன் புகழ்பாடி பூக்கொய்வோம் என அழைக்கிறார் பூவை யரை மணிவாசகர். பாடல் :

**திருவாசகம்**

**''எந்தை எந்தாய் சுற்றம் மற்றும் எல்லாம் என்னுடைய**
**பந்தம் அறுத்து என்னை ஆண்டு கொண்ட பாண்டிப்**
**பிரான்**
**அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த**
**பொந்தைப் பரவி நாம் பூ வல்லி கொய்யாமோ''**

# தென்குரங்காடுதுறை

**இறைவன் :** குரங்காடுதுறைநாதர்

**இறைவி :** பவளக்கொடி அம்மை

**பதிகம்** : *சம்பந்தர் 1; அப்பர் 1; திருவாசகம்—3.*

திருவிடைமருதூரிலிருந்து 8. கி.மீ. தொலைவிலுள்ளது.

சோழநாட்டில் வடகுரங்காடுதுறை, தென்குரங்காடு துறை என இரண்டு திருத்தலங்கள் உண்டு. குரங்குகள் ஆடும்துறை குரங்காடுதுறை. இரண்டிற்கும் வேறுபாடு தெரிய, காவிரியாற்றின் வடகரையில் உள்ளது வடகுரங் காடுதுறை, தென்கரையிலுள்ளது தென்குரங்காடுதுறை. வாலியார் வழிபட்டேத்தும் வரலாற்றுச் சிறப்பு வடகுரங் காடுதுறைக்கு உண்டு என்றால், இத்தென்குரங்காடு துறையோ சுக்கிரீவனாலும், அனுமனாலும் வழிபாடு செய்யப்பட்ட தலம். ஞானசம்பந்தரும், அப்பரடிகளும் வழிபட்டேத்திய அருட்தலம்.

**நெற்றி ஒரு கண்ணன்**

குரங்காடுதுறை என்னும் இவ்வரிய திருத்தலத்திலே உள்ள இறைவன் தன் செம்மேனியிலே வெந்நீறு சந்தித்த மேனியனாக உள்ளான். இப்பெருமான் ஊழித்தீயிலே கூத்தாடி ஊழி முதல்வனாய் நின்ற ஒருவன் நானே என்பதனைக் காட்ட நீருர் திருமேனியனாக உள்ளான். நெற்றியிலே ஒரு கண் உள்ளான். அவனது நெற்றிக் கண் திறக்காது. திறந்தது இருமுறை. ஒரு முறை திறந்து

மன்மதன் எரிந்து சாம்பல் ஆனான்; இன்னொரு முறை திறந்தான், முப்புரம் எரிந்தது. கண் திறந்தால் எதிரில் உள்ளது எரியும். ஆம் எரிக்கும் விழி அவன்விழி. நம்வினைகளை அவன் முன் அர்ப்பணித்தால் அவனது கண்கனன்று எரிக்கும் வினை நீங்கின் வீடு பேறு எளிது. அப்படி அனைவர்கட்கும் அருள் செய்யவே அகத்தின் நாயகனாக நான் உள்ளேன் என்று கொடி கட்டிக் காட்டி விடைக் கொடி கட்டியுள்ளான். ஆறு தலையிலே அங்கத்திலே ஆயிழை. அவனை அடைந்தால் அவன் நமக்கு ஆறுதலைத் தருவான் என அறிமுகப்படுத்துகிறார் ஞானசம்பந்தர். பாடல் :

**சம்பந்தர்**

> **"நீறார் தருமேனியன் நெற்றியொர் கண்ணன்**
> **ஏறூர் கொடி எம்மிறை ஈண்டு எரியாடி**
> **ஆறால் சடை அந்தணன் ஆயிழையாளோர்**
> **கூறான் நகர்போல் குரங்காடு துறையே."**

**மெய்யடியாரோடு கூடுவான்**

இந்தக் குரங்காடு துறையிலே உள்ள பெருமான் என் வாழ்விலே செய்த செயல்கள்தான் எத்தனை? எத்தனை? புகழ்ஞருக்கும் மாதலியாருக்கும் மகனாய்ப் பிறந்த சைவக்குடியிலே வளர்ந்த என்னை நில்லாத நிலவுலக வழக்கதனைக் காட்டிக் கொல்லாமை மறைந்தொழுகும் அவன் அமயம் குறுகச் செய்தான். அங்கு என்னைச் சமண மதத்தலைவனாக்கினான். அத்தோடு விட்டானா?

கொடுஞ் சூலை கொடுத்து ஆட்கொண்டு தன் பொன்னடியை என்னைப் பாட வைத்தான். தலங்கள் தோறும் தளர்ந்த உடலோடு சென்று அவனைப் பாடி அவனருட் தலங்களில் திருப்பணி செய்யுமாறு செய்தான்.

பாடச் செய்தான். தன்னைப் பணியச் செய்தான். இவ் விரண்டும் என்னைச் செய்ய வைத்து அவனும் இரண்டை எனக்காகச் செய்தான். (1) என் வினையை நீக்கினான். (2) தொடர்ந்து என் தீவினை என்னைத் தொடரா வண்ணம் என்னைத் தன் மெய்யடியாரோடும் கூட்டி னான். எத்தனை சாகசங்கள் செய்திருக்கிறான் பார்த் தீர்களா, இக்குரங்காடு துறையன்? இவனை நீங்கள் அணுகினால் அவனைப் பாடிப் பணிந்தால், அவன் உங்களையும் வினை நீக்கி மெய்யடியாரோடும்இணைத்து விடுவான். சென்னை செல்லும் இரயில் வண்டியில் எஞ் சின் இல்லாத பெட்டியை இணைத்து விட்டால் இந்தப் பெட்டியும் அடைய வேண்டிய (சென்னையை) இடத்தை அடைந்து விடும்.அதுபோல் இறைவனாகிய இஞ்சினோடு இணைக்கப்பட்டுள்ள மெய்யடியாரோடு நம்மையும் இணைத்துவிட்டால் நாமும் இறைவனடி என்கிற திரு வடிப்பேற்றைப் பெற்று விடுவோம்.

இவ்வளவும் குரங்காடு துறையன் செய்வான். எனக்குச் செய்துள்ளான் என அப்பரடிகள் நமக்கு அறி வுறுத்துகிறார். பாடல் :

**அப்பர்**

**"ஆட்டினான் முன்அமண ரோடு என்றனைப்**
**பாட்டினான்தன் பொன்னடிக்கு இன்னிசை**
**வீட்டினான் வினை மெய்யடியாரொடும்**
**கூட்டினான் குரங்காடு துறையனே."**

# திருத்துருத்தி

தென்குரங்காடு துறையிலிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ளது.

இருபுறமும் நீர் சூழ்ந்த திட்டுப்பகுதிக்குத் துருத்தி என்று பெயர். வடமொழியில் ரங்கம் என்று பெயர். இவ்வரிய திருத்தலத்தின் இருபுறமும் காவிரியும் விக்கிரமம் என்னும் ஆறும் செல்ல இடையில் உள்ளது. திருத்துருத்தி எனப்படும் இத்தலம் நால்வர் பெருமக்களாலும் பாடப் பெற்றது. இங்குள்ள பெருமான் திருநாமம் சொன்னவாறறிவார் என்பது ஆகும். ஆம் நாம் ஒன்று சொல்லக் கேட்பவர் வேறு மாதிரி உணர்வது உண்டல்லவா? அவ்வாறு இல்லாது சொன்ன வாறறிவார் இப்பெருமான் அதனாலே அப்பெருமானிடம் ஞானசம்பந்தர் கேட்கிறார். பெருமானே, நான் உனக்குச் செய்த கொடுமை என்ன? என வினவி தன் முற்பிறப்பைப் பற்றி குறிப்பிடுகின்ற வரலாற்று உணர்வு உடைய பாடலைப் பாடுகின்றார். அது வருமாறு :

பெருமானே, நோய்க்கு விருந்தான இவ்வுடம்பை ஏன் எனக்கு அளித்தாய்? பிறக்கவும், பிறந்த பின் இருக்கவும், சிலகாலம் இருந்த பின் இறக்கவும் ஆன இவ்வுடம்பினை ஏன் தந்தாய்? உன் திருவடியை மறக்கின்றவருக்கல்லவா பிறப்பும் இறப்பும்? இடைப்பட்ட காலத்தில் இவ்வுடம்பு பிணிபடுதலும் நான் உன் திருவடியை

மறக்காமல் இருந்த என்னை மயக்கி மறக்கச் செய்து மையல் மிக்க இம்மானுட வாழ்வில் ஏன் பிணித்தாய்? இது நியாயமா? இதனைத் துறக்குமாறு செய்!

பெருமானே, இவ்விடர்ப்படும் உடம்போடு—பிணிப்டு உடம்போடு பிறந்திருக்கும் உடம்போடு உள்ள தொடர்பைத் தயவு செய்து, இந்த இருக்கின்ற இழி பிறப்பிலிருந்து எனக்கு விடுதலை தா? என்று வேண்டுகிறார் ஞானசம்பந்தர். பாடல் :

**சம்பந்தர்**

**"துறக்குமா சொலப்பட்டாய் துருத்தியாய் திருந்தடி**
**பிறக்குமாறு இலாத என்னை மையல் செய்து**
**இம்மண்ணின் மேல்**
**பிறக்குமாறு காட்டினாய் பிணிபடும் உடம்பு விட்டு**
**இறக்குமாறு காட்டினாய் இருக்கின்ற**
**தென்னையே."**

**பிள்ளை பெற்ற கன்னிப் பெண்**

இந்தத் திருத்துருத்தியில் உள்ள பெருமானை நான் கண்டு ஏத்தினேன். அப்படியே நீங்களும் வழிபடுங்கள். அவனை எப்பொழுது நினைப்பது எனக் காலம் கணிக்காது எப்பொழுதும் நினையுங்கள். இந்தப் பெருமான் தன் இடத்தை இருபுறமும் ஆறு அமைய அமைத்துக் கொண்டான். அதுபோலவே தன் மேனியிலே கன்னியொருத்திக்கு இடம் கொடுத்து அத்தோடு அமையாது தலையிலும் ஒருத்திக்குஇடம் அளித்துள்ளான். இவனிடம் உள்ள பெண் எப்படி? தெரியுமா?. அதிசயமானவள். உலகெலாம் ஈன்றும் கன்னியென மறை பேசும் ஆனந்த மயிலே என்பர் ஞானியர்.

ஆம்; நம்மையெல்லாம் ஈன்றெடுத்தும் அவள் கன்னி. அவள் கணவன் துறவு. நாம்சொல்லவில்லை. சாத்திரம்

கூறுகிறது. ''2 வகுயிர் எல்லாம் ஈன்றும் அவன் பிரமச் சாரி ஆகும் பான்மொழி கன்னியாவாள்'' (சித்) நான் கண்ட பெருமானை நீங்களும் கண்டு அவனை எப்பொழு தும் வாழ்த்தி வழிபடுங்கள். பாடல் :

**''உன்னி எப்போதும் நெஞ்சுள் ஒருவனை ஏத்துமினோ**
**கன்னியை ஒருபால் வைத்துக் கங்கையைச் சடையில் வைத்தும்**
**பொன்னியின் நடுவுதன்னுள் மீபுனல் பொலிந்து தோன்றும்**
**துன்னிய துருத்தியானைத் தொண்டனேன் கண்டவாறே.''**

**சொன்னவாறறிவார்**

அன்பர்களே,

இத்திருத்துருத்தியிலே உள்ள பெருமான் நாம் சொன்னவாறறிவார். தவறு நடந்தால் சொன்ன நம்மேல் தான் குறை. ஏன் தெரியுமா? நானே அதற்கு சாட்சி. என் உடம்பிற்குற்ற பிணியைப் போக்கிட வேண்டினேன். உடன் என் உடன்படுபிணி தீர்த்தருளினன். நானும் தான் சொன்னேன். எனக்கு ஒன்றும் நடக்கவில்லையே எனக் குமுறுகிறாயே? நீ என்னைப் போலவா நடந்தாய்? வள்ளுவன் சொல்வான் உண்மையான மனைவி கண வனைத் தொழு தெழுவாள் என்பார். எழுந்துதானே தொழ வேண்டும் என்கிறாயா?

இரவு பள்ளியறை செல்கின்ற பத்தினிப் பெண், இறுதியிலே உறங்கும் போது கணவனையே தொழுது பள்ளி கொள்வாள். அவன்மனத்திலே இறுதியாய் இருந்த வண்ணம் அவள் கணவனே. எனவே எழும்போதே அவனை நினைத்துத் தொழுது எழுவாள் என்றார் வள்ளுவர்.

கீதையிலேகண்ணன் கர்ணனிடம் சொன்னான். எவன் இறக்கும் பொழுது என் நாமத்தை சொல்கிறானோ அவனோடு நான்இருப்பேன்.என்வைகுண்டம் அவனுக்கே

உரியது என்றான். அதற்கு அருச்சுனன், இது எளிய வழி. வாழ்நாள் முழுக்க என்ன என்னவோ செய்து விட்டு இறக்கும் பொழுது உன் நாமம் சொல்வது சுருக்கு வழிதானே என்றான். அதற்குக் கண்ணன் சொன்னான். அருச்சுனா அது அவ்வளவு எளிதல்ல. எவனொருவன் என்னைக் கனவிலும் நனவிலும் நினைத்துக் கொண்டிருக் கிறானோ அவனே இறக்கும் போது மனைவி மக்கள்; சொத்து, சுகம், உலக நினைவுகளை மறந்து என்னை நினைப்பான். அதுதான் சாத்தியம் என்றான் கண்ணன். அது போல் யார் கனவிலும் நனவிலும் கணவனை நினைக்கிறானோ அவளுக்குத்தான் எழும்முன் கணவன் நினைவு வரும். அடியவராகிய நமக்குக் கனவிலும் நனவி லும் பெருமானை நினைத்தால் எழும்போதே அவனைத் தொழுது எழுவோம். இது நான் கண்டுபிடித்ததல்ல. ஞானசம்பந்தப் பெருமான் சொல்வார். ''நினைத் தெழுவார் துயர் தீர்ப்பார்'' என்று. அதனையே நானும் கடைப்பிடித்தேன் என் போன்ற நினைத்தெழும் தொண்டர்கள் சொன்னால் துருத்தியார் சொல்வாரறி வார் துன்பம் துடைப்பார் துருத்தியார். அவர் உள்ள காவிரியானது, மழை மேகமாய் இருந்து அருவியிலி ருந்து அரும் பொருள்களைக் கொணர்ந்து அவர் அடியில் தருவது போல நாமும் நம் எண்ணங்களை அவர் அடியில் சமர்ப்பிப்போமானால் இவரும் இன்பம் தருவார் துன்பம் துடைப்பார் என்கிறார் வன்தொண்டர்.

**''மின்னுமா மேகங்கள் பொழிந்து இழிந்து அருவி**
**வெடிபடக் கரையொடும் திறை கொணர்ந்து ஏற்றும்**
**அன்னமாய்க் காவிரி அகன்கரையுறைவார்**
**அடியினைத் தொழுது எழும் அன்பராம் அடியார்**
**சொன்னவாறு அறிவார் துருத்தியார் வேள்வி**
**குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்**
**என்னை நான் மறக்குமாறு எம்பெருமானை**
**என்னுடம்படும் பிணியிடர் கெடுத்தானை.''**

பெருமானே நான் உனக்கு என்ன கைமாறு செய்வேன்! நீ, என்று என்னோடு தொடர்பு கொண்டாய்? பிறவிதோறும் தொடர்ந்து வந்தாய். அது மட்டுமா? என் தந்தையின் உடலிலே கருவாய் இருந்து தாயை அடைந்தேன். தாயை அடைந்த நான் அங்கு நடந்த கரு உருப்போராட்டத்திலேயே அழிந்திருப்பேன். அப்போது எனக்கு உருவமே இல்லை, குண்டூசி முனையில் ஓர் இலட்சம் அணுக்களை அடுக்கலாம் எனஅறிஞர் கூறுவர். அந்த கண்ணுக்குத் தெரியாத கருத்தோற்றத்திலேயே எனைக்காக்க உன் கருணையால் என் கருவிலே இடம் பெற்றாய். அவ்வாறு நீ இடம் பெற்று என்னை அந்தக் கருக்குழிப் போராட்டத்திலேயே அழியாமல் காத்த திருத்துருத்திப் பெருமானே! நீ துன்பப்படும் தன்மையா என்னுடையது.

தித்திக்கும் சிவபதத்தை நான் செய்த முன் தவத்தால் என்னை உன் கருணையால் நான் தில்லை அம்பலத்தே கண்டேன். பெருமானே! உன் கருணையே கருணை என்று வியந்து பெருமான் கருணைத்திறத்தை எடுத்தேற்றுகிறார் மணிவாசகர். பாடல்

**''உருத்தெரியாக் காலத்தே என் உள் புகுந்து**
**கருத்திருந்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டு கொண்ட**
**திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை**
**அருத்தியினால் நாயடியேன் அணி கொள் தில்லை கண்டேனே.''**

# மயிலாடுதுறை

**இறைவன் :** மயிலாடுதுறையர்

**இறைவி :** அஞ்சொல் அம்மை

**பதிகம் :** சம்பந்தர் 2; அப்பர் 1.

திருத்துருத்தியிலிருந்து 15 கி.மீ. தொலைவிலுள்ளது.

காவிரியாற்றின் கரையிலே மயில் ஆடுகின்ற சோலைகள் நிறைந்த ஊர், எனவே இது மயிலாடுதுறை எனப் பெயர் பெற்றது. தமிழனுடைய 'வாழ்வில்' பெரும்பாலான சொற்களுக்கெல்லாம் காரணம் உண்டு. எனவேதான் தொல்காப்பியரும், 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' என்றார். பின்னாளில் மாயவரம் என்றாகி இவ்வூர் தற்போது தன் பழைய பெருமை மிக்க திருப்பெயராலேயே மயிலாடுதுறை என்று அழைக்கப்படுகின்றது. இந்த அரிய தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமானைப் பற்றி ஞானசம்பந்தப் பெருமான் இரு பதிகங்களும் அப்பரடிகள் ஒன்றும் ஆக மூன்று பதிகங்கள் பாடியுள்ளனர். முக்கண்ணுடைய, அப்பனுக்கு மூன்று பதிகங்கள் பாடினர் போலும், இங்குள்ள அம்மைக்குப் பெயர் ''அம் சொல் அம்மை'' என்பது ஆகும்.

**அம்சொல் அஞ்சொல் ஆன கதை**

பின்னர் பேச்சு வழக்கில் அஞ்சொல் அம்மையானது வடமொழியில் பெயர் மாற்றம் செய்தவர்கள் அஞ்சொல் என்பதன் பொருள் உணராமல் அஞ்சேல் எனக் கருதி அச்சம் போக்கி, அபயம் தருபவர் எனக்கொண்டு, தற்போது அபயாம்பிகையாக உள்ளார். அப்பரடிகள் தம் திருவாக்கால் 'அஞ்சொல் அம்மை' என அழகுற அழைக்கிறார். இறைவனின், அம்மையின் பெயர்களும் பழைய

திருமுறைப் பெயர்களாலேயே அழைக்கப் பெறச் சைவ உலகம் முயல வேண்டும்.

**சிரம் ஒன்றி அடி**

இம்மயிலாடுதுறைப் பெருமானுக்குச் செஞ்சடையுடைய சிரம். அவன் திரு அடியில் இன்னும் பல சிரங்கள் உண்டாம். ஆம்; அவன் கழுத்தின் மேலும் சிரம் பல உண்டு. கழுத்தின் மேலே பொருந்திய சிரத்தை அர்ச்சகர் கூறுவார். ஈசானம் தட்புருஷம் வாமம் சத்யோசாதம் அகோரம் என்று ஆனால் காலிலே உள்ள சிரங்களைப் பற்றிச் சம்பந்தர் கூறுகிறார். ஆம்; அவன் திருவடியிலே உள்ள சிரம் எது தெரியுமா?

அன்றாடம் அதிகாலை எழுந்து நீராடி மயிலாடுதுறை நாதனை மலர் சூட்டி வழிபடுகின்ற அடியார்களின் சிரம் ஒன்றிய திருவடியைப் பெருமான் திருவடியில் காணலாம் என்கிறார் சம்பந்தர். மலர் சூட்டுகின்ற அனைவரின் திருமுடியும் அவன் அடியில் பொருந்தும் என்பது பொருந்தாதே என்ற ஐயம் வரத்தான் செய்கிறது, சம்பந்தர் நம் அய்யம் போக்க விளக்கிச் செல்கிறார். மலர் கொண்டு வணங்குவதைவிடப் பெருமை, மணம் மிகுந்த மலர்களான முல்லை, மல்லி என்பன போன்ற பெரிய மலர்கள். அம்மலர்களிலும் வாட்டம் இன்றி, அழுகல் இன்றி, அதிகாலை வண்டுகள் எச்சில் செய்யா முன் மலர்ந்தும் மலராத மலர்களால், (நன்மாமலர் கொண்டு) எம்பெருமானை வழிபடுபவர். சிரம் ஒன்றிய பெருமான் எனக்கொள்ளலாமா என்றால்,ஞானச்ம்பந்தர், பொறு, அவசரப்படாதே—இன்னும் இருக்கிறது என்கிறார்.

நன் மாமலர் இருக்கலாம். ஆனால் அதைவிட முக்கியம் கரவாது அம்மலரை இட வேண்டும். வஞ்சனையோடு வழுத்தினால் பெருமான் அதனை ஏற்கமாட்டான் அப்பரடிகள்கூடச் சொல்வார் 'கரவாடும் வன்னெஞ்சர் அரியானை, என்றும் வஞ்சனையால். 'ஐந்தெழுத்தை

வழுத்துவார்க்குச் சேயான் காண் என்றும் கூறுவார். அது போலக்கரவாது வஞ்சனையின்றி நன் மாமலர் கொண்டு வழிபடுவது எப்போது? காலையா? மாலையா? என்றால் சம்பந்தர் கூறுகிறார். "இரவும், பகலும் பிரியாது வணங்குபவன்" எப்பொழுதும் என்பாரே அப்பரடிகள், அதுபோல யார் இரவும் பகலும் கரவாது நன் மாமலர் கொண்டு தொழுகின்றார்களோ அத்தகைய அடியாரின் சிரம் ஒன்றிய அடியினையுடைய மயிலாடுதுறையான் அவர்கட்கு வரம் தரக்காமதேனு வாய்க் காத்திருக்கிறான் எனக் கூறுகிறார். நாமும் கரவின்றி நன் மாமலர் கொண்டு வழிபட்டு வரம் பெறுவோம்.

**"கரவின்றி நன்மா மலர் கொண்டு**
**இரவும் பகலும் தொழுவார்கள்**
**சிரம் ஒன்றிய செஞ்சடையான் வாழ்**
**வரமா மயிலாடு துறையே.'**

**பிறப்பும் இறப்பும்**

அப்பரடிகள் இவ்வரிய திருத்தலப் பாடலிலே அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறார். இங்குள்ள பெருமகனை வணங்கினால் கூற்றுவன் வரமாட்டான் என்கிறார். காலன் வரும்போது நம் முன் கீதம் இசைத்து கொஞ்சிக் குலாவி வரமாட்டான். சினத்தோடு தானே வருவான். அந்த வெஞ்சினக்காலன் வரமாட்டான் நம்மிடம் அது மட்டுமா? இறப்பு என்பது சுவையானதா? இல்லவே இல்லை. "கரணமெலாம் நடுங்கவரும் மரணமும் சம்மதமோ?" என்பார் வள்ளலார். ஞானசம்பந்தர் புலனைந்தும் பொறி கலங்கி நெறி மயங்கி அறிவு அழிந்த போது காலன் வரும்போது என்பார், இவ்வளவு அச்சம் தரும் இறப்பு அச்சமின்றி வரும், பிறந்தால் மீண்டும் இறந்துதானே தீர வேண்டும். பிறப்பு உண்டேல் இறப்பு உண்டு. அதனால்தான் தமிழ் மொழியிலே பிறப்பிலேயே இறப்பையும் இணைத்தார்கள். 'பி' என்ற உயிர் மெய் எழுத்திலே 'ப்' என்ற மெய் எழுத்தும் 'இ' என்ற உயிர்

எழுத்தும் கூடிப் ''பி'' என்ற உயிர் மெய் எழுத்துப் பிறக்கிறது. பிறக்கும் போது இறப்பை மறவாதே நினை என்று நம் முன்னோர் 'பி' என்பதிலேயே 'இ'யையும் இணைத்தனர், பிறந்தால்தானே இறக்க வேண்டும்!

அதனாலே அப்பரடிகள் இந்தப் பிறப்பிலே இறக்கும் போது வெஞ்சினக் காலன் விரைந்து வரமாட்டான். இதில் குறிப்பாக இளமையிலே அகால மரணம் வராது என உணர்த்தக்காலன் விரைகிறான் என்றான். இறக்கும் போது காலன் நம் கண் முன் வரமாட்டான். சிவபூத கணங்கள் வரும். அச்சம் தரும் இறப்பும் அவலத்திற்கிட மான பிறப்பும் அறுக்கலாம் என்றார். எப்படி என்றால் மேகம் இருந்தால்தானே மயில் ஆடும். அந்தத்துறையில் உள்ள பெருமான் அஞ்சொல் உமை பங்கிலே இருப்ப தால் உடன் அருள் செய்வான் என்றார். மேகமிருந்தால் மஞ்சியிருந்தால் மயிலாடும் அஞ்சொல் உமையாயிருந் தால் மயிலாடுதுறையான் அருள் செய்வான்; அவன் அருளாலே இறப்பும், பிறப்பும் அறுக்கலாம் என்றார் அப்பரடிகள் பிறப்பு இறப்பு அறுக்க நினைப்போரால் லாம் வழிபடும் நாதன் மயிலாடுதுறை நாதன் பாடல்:

**''வெஞ்சினக் கடுங் காலன் விரைகிலான்**
**அஞ்சு இறப்பும் பிறப்பும் அறுக்கலாம்**
**மஞ்சன் மாமயில் ஆடுதுறையுறை**
**அஞ்சொல்லாள் உமை பங்கன் அருளிலே!''**

## திருநின்றியூர்

மயிலாடுதுறையிலிருந்து 10. கி. மீ. தொலைவி லுள்ளது.

திருநின்றியூர் மூவராலும் பாடல் பெற்ற அழகிய திருத்தலம். மயிலாடுதுறைக்கும் வைத்தீஸ்வரன் கோயி

லுக்கும் இடையில் உள்ளது இத்தலம். ஞானசம்பந்தர் ஒரு பதிகமும் அப்பரடிகள் ஒரு பதிகமும் சுந்தரர் இரு பதிகங்களும் ஆக நான்கு பதிகங்கள் பாடியுள்ளார்கள். பெருமான் திருப்பேர் பிறை சூடிய கூத்தன்.

**யார் அடியார்?**

இவ்வரிய திருப்பாடலில் அடியார் என்றால் யார்? அவரது இலக்கணம் என்ன என்பதனை எடுத்தோதுகின்றார். ஆம் 'பூத பரம்பரை பொலிய'—அடியார் திருக்கூட்டம் விளங்கித் தோன்றத் திரு அவதாரம் செய்த போதே புனிதவாய் மலர்ந்தருளிய—திருவாய் தானே—அடியவர் இலக்கணம் கூற முடியும்? ஆம்; அவரே கூறுகின்றார்.

அடியவர்கட்கு முதல் குணம் அச்சம் அற்றவர்களாய் இருத்தல் வேண்டும். 'அச்சமே கீழ்களது ஆச்சாரம்' என்பர் பெரியோர். நமக்கு ஏன் அச்சம் வருகிறது. நல்மைவிட அறிவால், பணத்தால், ஆற்றலால் உயர்ந்திருந்தால் நம் கதி என்ன என்ற அச்சம் வரும்.

தன்னேரில்லாத் தலைமகனான திருநின்றியூரான் இருக்க ஏது அச்சம்? "'அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை'' என்றாரே அப்பரடிகள். அப்படி அச்சமின்றி இருத்தல் வேண்டும். அவர்களுக்குப் பாவம் இராது. ஏன் தெரியுமா? நான் செய்தேன் என்ற முனைப்பின்றி 'எல்லாம் அவன் செயல்' என்று செயல் படுதலில் அவர்கள் பாவம் இலர். தருக்கின்றிச் செய்வதால் மேல் வினை தொடரா. எனவே பாவம் இலர் என்றார். அது மட்டுமல்ல; வினைக்கீடான கேடும் இல்லார் கேடும் என்றதனாலேயே ஆக்கமும் வேண்டாதவர்கள் என்பது பெறப்படும். இதனைத் தொண்டர் தம் பெருமையே பாட வந்த சேக்கிழார் ''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்'' என்று உரைத்தார். அவர்கள் இருவினை

ஒப்ப மலபரிபாகம் பெற்ற முத்திச் செல்வர். எனவே அவர்களைத் திருவினார் என்றார். நிச்சயமாக அவர் களுக்கு நோய் வராது என்றார். சிவபெருமான் பார பட்சம் அற்றவன் என்பார்கள். அவன் அப்படியில்லை.

நஞ்சுண்டு கண்டங் கருத்த திருநின்றியூரன் - கொன் லைமலர் சூடிய அப்பெருமான் தன் அடி வணங்கும் அடியவர்கட்கு அருள் செய்வதில் ஒருதலைப் பட்சமாக இருந்து அச்சம் அகற்றி பாவம் தீர்த்து நோய் போக்கி கேடு நீக்கி ஆட்கொள்வான் என்று கூறி அடியவர் தன் மையும் கூறினார் ஞானசம்பந்தர். பாடல்:

**"அச்சம்இலர் பாவம் இலர் கேடும்இலர் அடியார்**
**நிச்சம்உறு நோயும்இலர் தாமும் நின்றியூரில்**
**நச்சம் மிடறுடையார் நறுங் கொன்றை நயந்தாளும்**
**பச்சம் உடையடிகள் திருப்பாதம் பறிவாரே."**

ஏ நெஞ்சே! உனக்கு ஒன்று சொல்கிறேன் கேள். நான் சொன்னபடி கேட்டால் நான் உன்னை நீ பல்லாண்டு வாழ்வாயாக என வாழ்த்துகின்றேன். நீ முப்புரம் செற்ற, குஞ்சியில் பிறைசூடிய கூத்தனாகிய திருநின்றியூர்ப் பெருமானே நீ நினை. ஒன்று அவனது அளப்பெரும் ஆற்றலை பேரறிவுத் திறத்தைத் தூய்மையை உணர்ந்து, நம் தகுதியின்மையை உணர்ந்து நினை அல்லது அச்சம் கொண்டாவது நினை அல்லது அவன் நமக்கு அருள் செய்திருக்கின்ற அருளிப் பாட்டை யாவது நினைந்தாயா? அவன் செய்த அருள் யார் செய் வார்? என் சூலை நோயினைத் தவிர்த்துக் கல்லைக் கப்ப லாக்கி, நஞ்சை அமுதாக்கி, மதயானையை மண்டியிடச் செய்து நீற்றறையைப் பொய்கையாக்கினானே! அதனை நினைந்து கொண்டாவது அன்பாக அவனை நினை.

ஆம். அஞ்சியாவதும், அன்பு பட்டாகினும் நினை நெஞ்சே! அப்போதுதான் உன்னை வாழ்த்துவேன் என்று

தன் நெஞ்சை வாழ்த்திப் பிறை சூடிய, கூத்தனை நினைக்க நினைவூட்டுகிறார். தன் நெஞ்சிற்கல்ல—நம் கல் நெஞ்சிற்கு. பாடல்:

**''அஞ்சி யாகினும் அன்புப்பட்டாகினும்**
**நெஞ்சம் வாழி நினை நின்றியூரைநீ**
**இஞ்சி மாமதில் எய்திமையோர் தொழக்**
**குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே.''**

சுந்தரர் இத்தலத்தில் பாடும் பதிகத்தில் பல வரலாறுகளைக் கூறுகின்றார். எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய சுந்தரர் பக்திப் பாடல்களைப் பாடிய கவிஞர் மட்டுமல்ல—அருளாளர் மட்டுமல்ல—பெருமான் அருள் பெற்றவர் மட்டுமல்ல- ஈசனடியார் பெருமையினை தேசம் உய்ய எடுத்தோதிய வரலாற்றுப் பேராசிரியரும் ஆவார். அவர் தம் பதிகங்களால் திருத்தொண்டத் தொகையில் சுருங்கக் கூறிய சிவனடியார்கள் வரலாற்றை விவரித்துக் கூறுகிறார், இப்பதிகத்தில் நாவுக்கரசர் பாடிய பாடல்களின் எண்ணிக்கை, கண்டீசர் வரலாறு, கண்ணப்பர் பேறு—ஆகிய இவற்றையெல்லாம் அற்புதமாக எடுத்தோதுகிறார்

செந்தமிழுக்குரிய சிறப்பு...அச்சிறப்புறு மொழியை மானுடரே அன்றி, கிளிகளும் தமிழாய்ந்து சொல்லும் திறமிக்க தலம் அத்திருநின்றியூர் பெருமானே! உனக்கு ஓர் பாலகன், மணலில் உன்னை உருவாக்கி, ஆவின்பாலையாட்டி வழிபட்டான். அவனுக்கு அருள் செய்த நீ, .'அணி கொள் ஆடையும்,பூண் அணி மாலையும் நீ அமுது செய்த அமுதத்தைப் பெறும் பேறு பெற்றார். அப்படி அருள் பெற்ற அவர் சண்டீசர் என்கிறார்.'' சுந்தரர் இப்பாடலை வைத்தே சேக்கிழார் பெருமான் ''நாம் உண்ட கலமும் உடுப்பனவும் பூசுவனவும் உனக்காக'' எனக் குறித்தார்.

தமிழ் மொழியில் தனக்கு நிகர் தானேயாய் இருந்த தமிழினத் தலைவரான நாவுக்கரசர் உன்பால் கொண்ட அன்பால் தன் தமிழ்ப் பாவால் பாடியது நாலாயிரத்துத் தொள்ளாயிரம் பதிகங்களாகும். உன்னிடம் கொண்ட பேரன்பால் உன் கண்ணில் குருதி கொட்டத் தன் கண்ணைக் கணையால் பெயர்த்துக் கொண்ட கண்ணப்பர் ஆகிய இம் மூவருக்கும் நீ செய்யாத அருளை உணர்ந்தே உன் திருவடியடைந்தேன். ஒருவரல்ல, இருவரல்ல, மூவருக்கு அருள் செய்.முதல்வனான நீ உன் திருவடி அடைந்த எனக்கும் அருள் செய் என்று ஆதாரம் காட்டி ஆண்டவனை வேண்டுகிறார் சுந்தரர்...அவர் நாவலரல்லவா? பாடல்:

**''அணிகொளாடையும் பூணணி மாலையமுது**
**செய்தமுதம்பெறு சண்டிஇணை கொலேழு**
**நூறிரும் பனுவலீன்றவன் திருநாவினுக்கரையன்**
**கணைகொள் கண்ணப்ப னென்றிவர்**
**பெற்ற காதலின்னருளாதரித் தடைந்தேன்**
**திணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியுஞ்**
**செல்வத்தென் திருநின்றி யூரானே.''**

# புள்ளிருக்கு வேளூர்

**இறைவன் :** வைத்தியநாதன்

**இறைவி :** தையல்நாயகி

**பதிகம் :** சம்பந்தர்—1; அப்பர்—2

சம்பாதி—சடாயு என்ற பறவை இனத் தலைவர்கள் வழிபட்ட தலம். இராவணனைப் பொருதவன் இந்த சடாயுதான் என்பதனை ஞானசம்பந்தர் குறிப்பிடுகிறார். புள் என்றால் பறவை. இருக்கு—வேதம்—வேல், முருகன்.

இங்கு வைத்தியநாதப் பெருமானை சடாயுவும், வேத மும், முருகவேளும் வழிபட்ட திருத்தலம். இத்தலத் திற்கு ஞானசம்பந்தப்பெருமான் ஒரு பதிகமும், அப்பர டிகள் ஒரு பதிகமும் ஆற்றமைத்திருத்தாண்டாகம் ஒன்றும் ஆகமூன்று பதிகங்கள் உள்ளன. இப்பெரு மானைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே எனப் பாடல் தோறும் புலம்புகிறார் நாவரசர். இப் பெருமான் அடியார்களின் உடலில் பற்றிய நோய்களை யும், உயிர் பற்றிய நோய்களையும் போக்கி அருளுவதால் வைத்தியநாதன் எனப் பெயர் பெற்றார். அப்பரடிகள் "தீரா நோய் தீர்த்தருள வல்லான் தன்னை" என்பார். தில்லை என்றால் கூத்தப்பெருமானே சிறப்பு மதுரை என்றால் அங்கயற்கண் அம்மையே சிறப்பு; திருச் செந்தூர் என்றால் முருக வேளுக்கே சிறப்பு. ஆனால் இங்கோ பெருமான் வைத்தியநாதன் அம்மை தையல் நாயகி முத்துக்குமாரசாமி ஆகிய மூவருக்குமே பெருஞ் சிறப்புண்டு. இத்தலத்தில் குமரகுருபரசாமிகள், முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ் இயற்றியுள்ளார். வள்ளற் பெருமானின் அருட்பாக்களும் உண்டு. படிக்காசுத் தம்பிரானின் கலம்பகமும் உண்டு.

இப்பதியில் குடிகொண்ட பெருமான் முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருவலியும் எக்காலும் யாராலும் வெல்லப்படாய் என சங்கரன் கொடு வாளோடு சென்ற இராவணனை எதிர்க்க, எதிர்த்துப் போரிட்டு அழித்தவன் சாடயு அவன் வழிபட்ட பெரு மான் வைத்தியநாதன் அப்படிப்பட்ட மணிகண்ட னாகிய பெருமான் பண் ஒன்ற இசை பாடும் அடியார் கள் இதயக் கோவிலிலே குடியாக இருப்பான். அப்பெரு மக்களுக்கும் இம் மண்ணுலகில் இன்பங்களும் மீண்டு வாரா நெறியருளி வீடு பேற்றையும் நல்கிடுவான் எனக் கூறுகிறார் சம்பந்தர் பாடல் :

**"பண்ஒன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக**
**மண்இன்றி விண்கொடுக்கும் மணிகண்டன்**
**மருவும்இடம்**

**எண் இன்றி முக்கோடி வாழ்நாள் அஃது உடையானைப்**
**புண்ஒன்றப்பொருது அழித்தான் புள்ளிருக்கு**
**வேள்ஊரே.''**

நான் என் எண்பதாண்டு கால அனுபவத்தில் ஒரு பேருண்மையைக் கண்டு கொண்டேன். அது என்ன தெரியுமா? நரகக் குழியிலே அழுந்திக் கிடப்போர் யார் எனக் கண்டு கொண்டேன். உங்களுக்கும் அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமா? அல்லது அவர்களிடமிருந்து உங்களைக் காத்துக் கொள்ளப் போகிறீர்களா? எல்லோராலும் ஏற்றுக் கொள்ள முடியாத வெள்ளெருக்கு மலரும் அஞ்சியோடும் அரவும் இருக்கும் சடையுடைய புள்ளிருக்கு வேளூரான் திருவடி தன் நெஞ்சிலே இருக்கிறது என்ற உணர்ச்சியற்றவர்கள் யாரோ, அவர்கள்தான் நரகக் குழியிலே இருப்பர். நீங்கள் இருக்க வேண்டிய இடம் நரகக் குழியானால் புள்ளிருக்கு வேளூரான் பொற்கழல் நெஞ்சில் இருப்பதை மறந்துவிடுங்கள். மறத்தலினால் தவறும் பாவம் செய்யுங்கள் அதனால் நரகக்குழி நோக்கிச் செல்லுங்கள். ஆனால், அவன் திருவடி உங்கள் சிந்தையில் இருக்கும். உணர்ச்சி உங்களுக்கு இருக்கும்வரை தவறு செய்யமாட்டீர்கள். அதனால் சிவலோகம் பெறுவீர்கள் எனக் கூறுகிறார் அப்பரடிகள். பாடல் :

**''வெள்ளெருக்கு அரவும் விரவும்சடைப்**
**புள்ளிருக்கு வேளூரான் பொற்கழல்**
**உள்ளிருக்கும் உணர்ச்சி இல்லாதவர்**
**நள்ளிருப்பர் நரகக் குழியிலே.''**

**சீர்காழி**

இஸ்லாமியர்களுக்கு எப்படி மெக்கா புனிதமானதோ கிறிஸ்துவர்களுக்குப் எப்படி ஜெருசலம் புனிதமோ அது போல சைவர்களுக்குப் புனிதமான இடம் சீர்காழியாகும் நம் ஞானாசிரியரான ஞானசம்பந்தப் பெருமான்.

அவதரித்த திருத்தலம். ஆண்டவன் அவருக்கு ஞானப்பால் கொடுத்தாண்ட அருட்பதி நால்வராலும் பாடல் பெற்றது. கணநாதர் என்ற நாயனார் வாழ்ந்த பதி. தன்னை ஆட்கொண்ட அம்மையப்பனைப் பற்றி அறுபத்தேழு பதிகம் பாடியுள்ளார், ஞானசம்பந்தப் பெருமான். தமிழ் வேதமாகிய திருமுறைகளின் முதல் பாடல் ஒலித்த இடம். கட்டப்படாத சிவப்பரம்பொருளை அம்மே, அப்பா என அழைத்த இடம். ஞானப்பால் உண்டு. சிவனடியே சிந்திக்கும் திருபெருகு சிவஞானம் பரமதனை அறமாக்கும் பாங்கினால் ஓங்கிய ஞானம் உவமையிலாக் கலை ஞானமும் உணர்வரிய மெய்ஞானமும் அத்தனையும் ஒருசேர உணர்ந்து அப்பரம்பொருளைத் தோடு உடைய சேவியன் என்று அடையாளம் சுட்டிக் காட்டிப் பாடிய பதிகம் எழுந்த பதி, தமிழர் சமய வாழ்வு இதுவென உணர்த்த 'திருநெறித்தமிழ் தந்த திருத்தலம். அப்பரடிகள் மூன்று பதிகங்களும் சுந்தரர் ஒரு பதிகமும் ஆக நான்கு பதிகங்கள் பெற்ற தலம். திருமுறைப் பாடல்கள் அதிகம் உள்ள முதல் தலம் இச்சீர்காழி இவ்வூருக்கு பன்னிரண்டு திருப்பெயர்கள் உண்டு. பன்னிரண்டு திருப்பெயரையும் ஒரு பாடலிலே ஞானசம்பந்தர் குறித்துள்ளார். அதிலே ஒரு பாடலிலே தன் வரலாற்றை—தனக்கு அருள் செய்த வரலாற்றைத் தன் வாக்காலே கூறுகிறார். அதனைப் பார்ப்போம்.

சைவத்தின் சிறப்பு இறைவனை வழிபடும் முறையினை மூன்றாக வகுத்தது ஆகும். அது குரு, இலிங்கம், சங்கமம் என மூன்றாகும். பாடல்:

**"சிவலிங்கத் திருமேனியையே சிவமாக வழிபடல்"**
**"குருவையே சிவமாக வழிபடல்"**
**"அடியார்களையே சிவமாக வழிபடல் என்பவை"**

அறுபத்து மூன்று நாயன்மார்களும் இம்மூன்று திறத்திலேயே வழிபாடு செய்து முத்தி பெற்றனர். இம்மூன்று

வழிபாட்டு நெறிகளும் ஒருங்கே அமைந்த திருத்தலம் சீர்காழி ஆகும்.

மதுரையிலே சமணத்தை வாதாடி வென்று சைவத்தைத் தழைத்தோங்கச் செய்து கூன் பாண்டியனை நின்ற சீர் நெடுமாறனாக மாற்றி மதுரையிலே தங்கியிருந்தார் ஞானசம்பந்தர். அவரைக் காண அவரது பெற்றோரும் மற்றோரும் வந்தனர். அவர்களைப் பார்த்து காழிப் பெருமான் நலமா? என வினவுகிறார்—நான் நலமா என வினவும் பெருமான் யார் என்று தெரியுமா? ஒரு நாள் காலைப் பொழுதிலே என் தந்தையார் என்னையும் உடனழைத்துச் சென்று குளக்கரையில் என்னை இருக்கச் செய்துவிட்டு அவர் குளத்தில் இறங்கி மூழ்கி நீராடிக் கொண்டிருந்தார். அப்போது நான் தோணிபுர சிகரத்தைப் பார்த்துக் கண் மலர்நீர் ததும்பக் கை மலர்களால் பிசைந்து வண்ண மலர்ச் செங்கனி வாய் மணி அதரம் புடை துடிப்ப அழுதேன். அழுகையோடு தேனிப்புரப் பெருமானை நோக்கி அம்மே, அப்பா எனக் கூவி அழுதேன். காழிப் பெருமான் அம்மையை அழைத்துச் சிவஞானம் குழைத்து, திருமுலைப்பால் தர ஆணையிட, பெருமாட்டி எனக்கு ஞானப்பால் கொடுத்தார். அதனை வாங்கியுண்டு பால் வழியும் வாயோடு கையில் பொற்கிண்ண அடிசிலோடு நின்ற என்னை என் தந்தையான சிவபாத இருதயர் கோல் கொண்டு கண்டிக்க இப் பெருமான் எனக்குத் தோடுடைய செவியனாகத் தோன்றி அருள் செய்தான். அவன் காதிலே குழையணிந்திருந்தான். அந்தப் பெருமான் எனக்குப் பால் கொடுத்த பிராட்டியோடும் நலமா என வினவுகிறார் இப்பாடலில்.

பாடல்:

**''போதையார் பொற்சிண்ணத்து அடிசில் பொல்லாது எனத்**
**தாதையார் முனிவுறத் தான் எனை ஆண்டவன்**
**காதையார் குழையினன் கழுமல வளநகர்**
**பேதையாம் அவளொடும் பெருந்தகை இருந்ததே.''**

இக் காழிப் பதியிலே உறைகின்ற பெருமானைக் காதலிக்கிறாள் ஒரு பெண். அவளது காதலைப்பற்றி ஆய்வு செய்கிறார் நாவரசர். பெண்ணே! நீ காதலிக் கிறாயே! அந்த ஆளிடம் என்ன சிறப்பைக் கண்டாய் என்று எனக்குப் புரியவில்லை. ஒருவனைக் காதலிப்பது என்றால் அவனது உறவினரின் உயர்வினை எண்ணி அத் தகைய சிறப்புடைய குலத்தவனைக் காதலிப்பர்; அல்லது அவனது செல்வ வளத்தை எண்ணிக் காதலிப்பர். என் காதலர் உண்பதே தங்கத் தட்டில். அப்படியானால் அவர் வளம் என்ன? என அறிந்து காதலிப்பர், இருப்பிடமும் கருதுவர். என் காதலர் இருப்பது இயற்கை வளம் கொஞ்சும் பனி படர்ந்த மலையிலே அவர் உறைகின் றார். அதனை எண்ணிக் காதலிப்பேன் என்பர். அல்லது அவனது அழகிய திருமேனியில் அவன் பூண்ட ஒப்பனை யைக் கண்டு காதலித்தேன் என்பர். இல்லை இது எல்லா வற்றையும்விட பெண்ணுக்குரிய அச்சம் போக்கும் ஆண் மகன் என்னவர் அவர் ஏகபத்தினி விரதர் பிற மாதரைச் சிந்தையாலும் தொடாதவர். அதனால் காதலிக்கிறேன் என்பர். ஆனால் நீ காதலிக்கும் காழிப் பெருமானிடம் இந்தத் தகுதிகள் ஏதும் இல்லாமலேயே நீ அவரைக் காதலிப்பது எனக்குப் புரியவில்லையே என ஏங்கினார் நாவரசர்.

உன் காதலனின் உறவினர்கள் யார் தெரியுமா? பேய்க் கூட்டத்துடன் உறவு உண்பது, மண்டையோட்டில் அவன் வாழ்வது சுடுகாட்டில். இதெல்லாம் போகிறது என்றாலும் அவனிடம் மாதர்மேல் மனம் போகாதவனா என்றால் அதுவும் இல்லை. அவன் உடலிலேயே ஒருத் தியைப் பங்காக கொண்டுள்ளான். அது மட்டுமில்லாது தலையில் ஒருத்தியையும் வைத்துள்ளான், இனி நீ வேறு மூன்றாவதாகக் காதல் கொள்கிறாய்? இப்படிப்பட்ட இந்தக் காதலரிடம் என்ன சிறப்புக் கண்டு காதலிக் கிறாய் என்று எனக்குத் தெரியவில்லை. உன்பால் இரக்கமே எனக்கு ஏற்படுகின்றது என நாவரசர் பெரு மான் மீது காதல் கொண்ட ஒருத்திக்கு அவள் தோழி

யாக நின்று வினா எழுப்பி இறைவனது அருட் குணங்களைத் தெரிவிக்கிறார். பாடல் :

**''உறவு பேய்க் கணம் உண்பது வெண்தலை**
**உறைவது ஏமம் உடலிலோர் பெண் கொடி**
**துறைகளார் கடல் தோணி புரத்துறை**
**இறைவனார் இவள் என் கண்டன் பாவதே''**

—அப்பர்

காழிப்பெருமானே! நான் உன்னை மறந்துவிடுகிறேன், பல முறை நீ நினைவூட்டியும் என்னை இடித்த போதும் உணரவில்லை, அன்றொரு நாள் நான் சித்தவட மடத்தில் அயர்ந்து உறங்கினேன். நீ தலைப் பகுதியில் படுத்து உன் அடி என் தலையில் வைத்து உணர்த்தினை. அதனை நான் உணராது பல்காலும் உதைத்தீர் நீர் யார் என வினவினேன். அப்போது இன்னும் அறியவில்லையா? என அறிவுறுத்தினீர், நானும் அகம் குழைந்து ''தம்மானை அறியாத சாதியார் உளரோ'' எனப் பாடினேன். அடிக்கடி உன்னை நான் மறந்து விடுகின்றேன். இனி நான் உன்னை மறவா வரம்பெற்று விட்டேன். பெருமானே எனக்கு நீயே துணை இம்மைக்கும் மறுமைக்கும் நீயன்றி வேறு யார் எனக்குயிர்? என்னைச் சுற்றிய சுற்றத்தை துணை எனக் கருதினேன். சில காலம் ஆனால் இனி உன்னையே சுற்றமாகக் கருதுவேன். எனக்கு துணையும்தான். இதுகாறும் நான் தொழுத எம் பெருமானே. நீ ஒளியை உடைய விளக்காக நின்று என்னைச் சுற்றியிருந்த உலக மாய இருளைப் போக்கினாய் ஞானமாயிருந்த நீ ஞானநெறியினை நான் அடையும் வண்ணம் என்னை அடைவித்தலும் நீ தேவராலும் அறிய முடியாத திறத்தை எனக்குணர்த்தி நன்நெறியைக் காட்டி என் அறிவு ஏற்கக் கற்பித்த கடவுளாகிய உன்னை நான் இக்கழுமல வள நகரில் கண்டு கொண்டேன். இனி நீதான் எனக்கு எல்லாம் எனக் கூறுகிறார் நாவலர். பாடல் :

**''மற்றொரு துணை இனி மறுமைக்கும் காணேன்**
**வருந்தலுற்றேன் மறவா வரம் பெற்றேன்**
**சுற்றிய சுற்றமும் துணையென்று கருதேன்**
**துணை என்று நான் தொழப்பட்ட ஒண் சுடரரை**
**முக்தியும் ஞானமும் வானவர் அறியா**
**முறை முறை பல பல நெறிகளும் காட்டிக்**
**கற்பனை கற்பித்த கடவுளை அடியேன்**
**கழுமல வளநகர் கண்டு கொண்டேனே!''**

## திருக்கோலக்கா

**இறைவன் :** பொற்றாளமுடையார்

**இறைவி :** ஓசைகொடுத்த நாயகி

ஞானசம்பந்தப் பெருமானுக்குப் பொற்றாளம் கொடுத்த திருத்தலம் சீர்காழிக்கு மிக அண்மையில் உள்ள அழகிய திருத்தலம். இறைவன் திருநாமம் பொற்றாள முடையார். அம்மை திருநாமம் ஓசை கொடுத்த நாயகி. தங்கத்திற்கு ஓசையின்மையால் தங்கத் தாளத்தில் தங்க ஓசை கொடுத்த பிராட்டி எனவே ஓசை கொடுத்த நாயகி எனப்பெயர் பெற்றார். இப்பெருமானிடம் காழிவேந்தர் ஐய வினா எழுப்புகிறார். இவ்வரிய ஆலயத்தின் முன்னே பொய்கை உள்ளது நீர்நிறை பொய்கையில் மங்கையர்கள் நீராட வாளை மீன் துள்ளி விளையாடுகிறது.

மாதராட வாளை மீன் துள்ளியாடும் இயற்கை வளம் மிக்க செல்வப் பதியில் வாழும் பெருமானே! நீ, பட்டு டுத்தி பொன் நகையணிந்து சாந்து பூசி, அழகுற வாழாது, சடை வைத்துச் சடையையும் ஒழுங்கு செய் யாது அங்கு அரவும் பிறையும் வைத்துக் கொண்டு உடலி லும் காட்டுச் சாம்பல் பூசி கோவணமணிந்துள்ள கொள்கை என்ன? நீ இருக்கும் இடம் வளத்திற்கும் உன்

செயலுக்கும் பொருத்தமாக இல்லையே என விழைகிறார் காழியார்.

**''மடையில் வாளை பாய மாதரார்**
**குடையும் பொய்கைக் கோலக்கா உளான்**
**சடையும் பிறையும் சாம்பல் பூச்சும் கீழ்**
**உடையும் கொண்ட உருவம் என்கொலோ'**

—சம்பந்தர்

ஞானசம்பந்தருக்கு இறைவன் தருளிப்பாட்டை வியந்தோதுகிறார். ஆரூர்ப்பெருமானே! நீ செய்த அருட் செயலை எண்ணி உவக்கின்றேன். ஞானசம்பந்தர் தமிழைப் பரப்பினார். எவ்வளவு காலம் பரப்பினார்? எப்படிப் பரப்பினார்? ஒவ்வொரு நாளும் ஒருநாள் விடாது பரப்பினார். அதுவும் எப்படி? இசையால் பரப் பினார். இன்னிசையால் பரப்பினார், தமிழில் கருத்துக் களைக் கோர்வையாக்கி இலக்கணத்துக்குட்பட்டு எழுது வது கவிதை. அக்கவிதையைப் பாடுவது இசை. அதனைத் துணைக் கருவிகளோடு இசைப்பது இன்னிசை. ஞான சம்பந்தப்பெருமான் நாளும் இன்னிசையால் தமிழ் பரப் பினார். மூவாண்டு முதிராத இளங்குழவியான சம்பந்தப் பெருமான்மேல் பாடிக் கருவியின்றிக் கையால் தாள மிட்டுப் பாடினார். கை சிவந்தது. சிவபெருமானின் சிந்தை அசைந்தது: அப்பெருமான் பாடலுக்கு 'வந்து யாரும் அறியாமல் அல்ல. உலகவர் அறியும் வண்ணம் தாளம் தந்தார் கோலக்கா பெருமான். அப்படிப்பட்ட பெருமானை நான் கண்டு தொழுது இறைஞ்சுகின்றேன் என்கிறார். பாடல் :

**''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்**
**ஞானசம்பந்தருக்கு உலகவர் முன்**
**தாளம் ஈந்து அவன் பாடலுக்கு இரங்கும்**
**தன்மையாளனை என் மனக் கருத்தை**
**ஆளும் பூதங்கள் பாட நின்று ஆடும்**
**அங்கணன் தன்னை எங்ஙனம் இறைஞ்சும்**

**கோளினப் பெருங்கோயில் உள்ளானைக்**
**கோலக்காவினில் கண்டு கொண்டேனே''**

—சுந்தரர்

# கோயில்

தமிழகத்தில் சைவ உலகில் கோயில் என்றால் அதி தில்லையையே குறிக்கும். இவ்வரிய திருத்தலம் பூலோக கயிலாயம் எனப் போற்றப்படுகிறது. இதனைப் பாடாத சைவப்பெரியோர் யாருமில்லை எனலாம். திருநீலகண்டர், திருநாளைப்போவார், கூற்றுவர், கணம்புல்லர், கோட் செங்கட்சோழர், மணிவாசகர், சேக்கிழார் ஆகிய நாயன் மார்களும்; மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாச்சாரி யார், சேந்தனார், பெற்குன் சாம்பன் போன்ற அடியவர் கள் முக்தி பெற்ற திருத்தலம். இத்தலத்திற்குத் தேவாரப் பதிகம் பதினொன்றும், திருவாசகப் பதிகம் இருபத் தைந்தும், திருக்கோவையாரும் திருவிசைப்பா பதினைந் தும் திருப்பல்லாண்டும், பத்தாம் திருமுறையில் சில திரு மந்திரப்பாக்களும், பதினொராம் திருமுறையில் கோயில் நான்மணிமாலை, கோயில் திருப்பன்னிரு விருத்தங்களும் பெரியபுராணமும் ஆகப்பெரும் பனுவல்கள் பெற்ற பதி. இவ்வழகிய திருக்கோயில் 40 ஏக்கர் நிலத்தில் கட்டப்பட் டுள்ளது. நான்கு கோபுர வாயில்களும் உண்டு. இந்த நான்கு கோபுர வாயில்கள் போலவே சைவத்திற்கு நெறி யுண்டு. நால்வர் பெருமக்களும் அந்த நான்கு நெறி யினை உணர்த்த இம் மண்ணுலகில் அவதரித்தனர். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர்புராணம். இவ்வைந்து பாடல்களும் பஞ்சபுராணம் எனப்படும். அவை அந்தந்தக் கோவிலுக் குரியனவாக இராது. அப்படி அந்தந்த கோவிலுக்கே உரிய பஞ்சபுராணம் பெற்ற தலங்கள் இரண்டு. அவை

தில்லையும் திருவாரூரும் ஆகும். அதனால் இப்பதிகளை நம் முன்னோர் பஞ்சபாசுரப் பதிகம் என்று போற்றினர்.

அவை மகன்மை நெறி, அடிமை நெறி, தோழமை நெறி, காதல் நெறி என நான்காகும். இதுவே சரியை—கிரியை, யோகம்—ஞானம் என நான்காகவும் வகுப்பர். இந்நெறியில் எந்நெறியில் சென்றாலும் செல்லுமிடமும் அருள் செய்பவனும் கூத்தபெருமானே என உணர்த்த நான்கு வாயில்களில் **கிழக்கு வாயிலில் மணிவாசகரும், மேற்கு வாயிலில் அப்பரடிகளும், தெற்கு வாயிலில் ஞான சம்பந்தரும்**, வடக்கு வாயிலில் சுந்தரரும் சென்று வழிபட்டனர். இதனைச் சேக்கிழார் பெருமான் விரித்தோதுவார். கூத்தப்பெருமான் நடமாடும் திருமன்றில் மேல் நவசக்திகளின் நாதன் சிவனே என்பதனைக் காட்ட ஒன்பது கலசம் அமைத்துள்ளனர். அச்சிற்றம்பலம் 21,600 தங்கத் தகடுகளால் வேயப்பட்டுள்ளது. அவ்வோடுகளில் திருஐந்தெழுத்து பொறிக்கப்பட்டுள்ளது. ஒரு மனிதன் ஒரு நாளுக்கு **21,600** முறை சுவாசிக்கின்றான். ஒவ்வொரு முறை சுவாசிக்கும் போதும் திருஐந்தெழுத்தை நினைத்தல் வேண்டும். எனவே 21,600 ஓடுகளால் வேய்ந்தனர், ஆனால் ஒரு நாளில் பாதி இரவு உறக்கத்தில் போய்விடுகிறது. மீதி பகல் 10,800 முறை சுவாசிக்கிறோம். அதுவும் முடியாத நம்மைப் போன்றவர்கட்காக 10,800ல் 100-ல் ஒரு பங்கான 108 முறையாவது திரு ஐந்தெழுத்தை நினைக்க நினைவூட்டினர். நம்சித்தத்தில் ஆடுகின்ற பெருமான். அங்கே சிற்றம்பலத்திலும் ஆடுகின்றான். அண்டப் பெருவெளியிலும் உள்ள எம்பெருமான், அங்கு பேரம்பலத்திலும் நடமாடுகிறான். அண்டத்திலும், பிண்டத்திலும் அருள் நடனம் பயிலும் பெருமான் அவரவர் திறத்திற்கேற்ப விளங்கித் தோன்றி அருள் செய்கின்றான்.

கூத்தாடும் பெருமானே! நீ எத்தனையோ நற்செயல்கள் செய்கின்றாய். அத்தோடு எனக்கு ஒரு நல்ல செயல்

செய். அது என்ன என்று கேட்கிறாயா? பெருமானே! தில்லைச் சிற்றம்பலத்துள் நின்று நடனம் பயின்றாடும் அருளாளா! நீ என் பழவினையைச் சுருங்கும்படி அருள் செய்ய வேண்டும். சிவ வழிபாட்டில் சிறந்ததான அபிடேகம் செய்யும்போது, பால், நெய் முதலியவற்றை ஆட்டும்போது நீ அதனை ஏற்று ஆடினாய்; அகத்தும், புறத்தும் உன்னைப் பிரியாத அந்தணர்வாழ் சிற்றம் பலத்தை உனக்குரிய இடமாக நயந்து ஏற்றவனே! நீ நெய்யும். பாலும், தயிரும் கொண்டு ஆட்டும்போது ஆடினாய்; ஆடும் உனக்குப் பாட்டு வேண்டுமென்று நீயே வேதத்தையும், பல்கீதங்களையும் பாடினாய். மந்திரங்களில் சிறந்ததான பிரணவ மந்திரத்திற்குரிய பெருமான் நானே என உலகவர்க்கு உணர்த்த, உருவத் தாலும் பிரணவ வடிவமான மணமிகுந்த கொன்றையை விரும்பிச் சூடினாய். உன் திருமுடியில் கொன்றையும், திங்களும் சூடினாய். பெருமான் இவ்வளவு எல்லாம் செய்கின்ற நீ, என் பழவினை சுருங்க அருள் செய்யாயோ என வேண்டுகின்றார் ஞானசம்பந்தர். பாடல்:

**" ஆடினாய் நறுநெய் பால் தயிர்**
**அந்தணர் பிரியாத சிற்றம்பலம்**
**நாடினாயிடமா நறுங்கொன்றை நயந்தவனே**
**பாடினாய் மறையோடு பல்கீதமும்**
**பல்சடைப் பணிகால் கதிரவெண் திங்கள்**
**சூடினாயருளாய் சுருங்க எம் தொல்வினையே."**

—சம்பந்தர்

தில்லைச் சிற்றம்பலத்தில் நட்டம் பயின்றாடு நாதனே! நான் உன் அடியினை வாழ்த்தி வணங்கிட வந்தேன். என் தகுதியின்மையை நானே உணருகிறேன். பெருமானே! நீ முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளான பரமன். எல்லாவுயிர்க்கும் சிவானந்தப் பேறு நல்கும் சிவயோகி—அநாதியாகவே முத்தன் ஆகிய நீ, எல்லோருக்கும் முத்தி வழங்கும் முத்தன். எல்லார்க்கும் முன்னே தோன்றி முளைத்த முழுமுதல் கடவுளே! உயிர்க்

குலத்தையெல்லாம் மலச்சேற்றிலே இருந்து எடுத்து ஆட்கொள்ளும் அப்பனே! உன்னை நான் பத்தனாய்ப் பாட மாட்டேன்; கூடாது என்பதல்ல எனக்கு அப்படிப்பாடத் தெரியாது—அது மட்டுமல்ல எப்படிப்பத்தி செய்வது என்பதனையும் அறியமாட்டேன். பெருமானே! அதனாலே என்னை நீ இகழ வேண்டாம். பெருமானே! உன் திருநடனக்கோலம் காண நான் வந்துள்ளேனே, அது தான் எனக்குத் தெரிந்த பத்தி—என்னை இகழாது ஏற்றுக் கொள்—என நமக்காக வேண்டுகிறார் அப்பரடிகள். பாடல் :

**"பத்தனாய்பாட மாட்டேன்பரமனே பரமயோகி**
**எத்தினாற் பத்திசெய்கேன் என்னைநீ இகழ**
**வேண்டாம்**
**முத்தனே முதல்வா தில்லையம்பலத் தாடுகின்ற**
**அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன்**
**வந்தவாறே"**

—அப்பர்

மனமே! நீ ஒரு நல்ல காரியம் செய்தாய் அது பெரும் பற்றப்புலியூரில் விளங்குகின்ற் காதிருந்தும் செவிடராய் வாழும் மனித கூட்டத்தைத் தன் கையில் உள்ள தமருகத்தால் கட்டி ஒலியெழுப்பி—கண்ணிருந்தும் காணாத குருடர்களையெல்லாம் தன் கரத்தில் ஒளி காட்டி யார் வெறுத்தாலும் நான் ஏற்பேன் என்று அரவைப் பிடித்தாடும் பெருமானை வணங்கப் பெற்றாயே அதுவேதான் நீ செய்த நல்ல காரியம். மனமே நீ உண்டதே உண்டு உடுத்ததே உடுத்தும் கண்டதே கண்டும் வாழும் உன்னை அப்பெருமான் தடுத்தாட் கொண்டு உள்ளான் முன்னைப் பிறவியிலே நீ செய்த தீவினையின் காரணமாக நமன் தமர் செக்கிலிட்டுத் துன்பம் செய்யும்போது அவன் தடுத்தாட் கொள்வான். அப்படிப்பட்ட பெருமானை வணங்க நினைத்து வணங்கினாயே. அதுதான் நீ செய்த நல்ல காரியம் என்கிறார் சுந்தரர். பாடல் :

''மடித்தாடும் அடிமைக் கண் அன்றியே மனமே நீ
வாழும் நாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர் செக்கில் இடும்போது
தடுத்தாட் கொள்வான்
கடுத்தாட்டும் கரதலத்தில் தமருகமும் எரி அகலும்
கரிய பாம்பும்
பிடித்தாட்டிப் புலியூர்ச் சிற்றம்பலத்தே
எம்பெருமானைப் பெற்றாம் அன்றே''

—சுந்தரர்

மண்ணுலகில் பிறந்தேன் பிறக்கும்போது வேறுபாடு ஏதும் இன்றிப் பிறந்தேன்: ஆனால் பிறந்த பிறகுபிறப்பை யொட்டி குலம் என்றும் உட்பிரிவும் சாதி என்ற பெரும் பிரிவும்—பிறப்பு என்ற இம் மூன்றும பெரும் சுழல்கள். இந்தச் சுழலில் சிக்கியவர்களை மேலே எடுத்துவிடலாம் என்று சென்றால், அது மேலே தூக்குபவனைக், கீழே இழுத்து தன் சுழலில் அவனைச் சிக்க வைத்துச் சீரழித்து விடும். பெருமான் என்னை இந்தச் சுழலிலிருந்து ஆட் கொண்டான். அது மட்டுமல்லாது, எந்த ஆதரவுமில்லாத நாயிற் கடைப்பட்ட என்னை, என் துன்பம் கெடுத்து இன்பம் கொடுத்தாண்டான். என்து குணம் பேதைக் குணம்—பேதைத் தன்மை. இலாபம் பார்த்து முதல் இழத்தல் ஆகும். நான் இவ்வுலகில் இன்பமான லாபம் கருதிப் பேரின்பமாகிய முதலைஇழந்தவன் ஆவேன். இவர் நண்பர், உறவினர். இவர் பகைவர் எனக் கருதும் பாகு பாட்டு உணர்வுடைய என்னை, 'யான்', 'எனது' எனும் செருக்குற்ற பேச்சுடைய என்னை, என் உரையை அகலச் செய்து, என் கோது நீக்கிய—கோதி இல்லாத அமுதமான கூத்தப்பெருமானைத் தில்லையிலே கண்டேன் என்று கூறு கிறார் மணிவாசகர் பாடல்:

''சாதிகுலம் பிறப்பென்றும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லல் அறுத்து ஆட்கொண்டு
பேதை குணம் பிறர் உருவம் யான் எனது என

உரைமாய்த்துக்
கோதிலா அமுதானே குலாவுதில்லை கண்டேனே!

—மணிவாசகர்

□ □ □



நூலாசிரியர்

சிவநெறிச் செல்வர்

ஈரோடு த.விசுவநாதன்

சிவநெறிச் செல்வர் ஈரோடு விசுவநாதன் அவர்கள் சிறந்த சொற்பொழிவாளர். நல்ல தமிழ் எழுத்தாளர். உயர்ந்த சிந்தனையாளர்.

இவரது எழுத்துக்களைப் படிப்பவர்கள் பயனுடைய எழுத்துக்கள் எனப் பாராட்டுகிறார்கள். நல்ல கருத்துக்கள் எனப் போற்றுகிறார்கள்.

இவர் தொடர் பணியாகச் செய்துவரும் நல்ல முயற்சிகள் வெற்றிபெற வாசக அன்பர்களின் பேராதரவும், பாராட்டுக்களும் தொடரட்டும்.

## இவரது பிறநூல்கள்

- 12 சோதிலிங்கங்களின் வரலாறு
- தமிழ் ஞான சம்பந்தர்
- திருமுறைத் தேன்துளிகள்
- அப்பரடிகள்
- திருப்பூர் குமரன்